T. 3657

சீனவேதம்

அல்லது

சகத்தின் சூட்சமம்

ஆசிரியர்:

ஸ்ரீ. எம். ஆர். ஜம்புநாதன்

'சத்தியார்த்தப் பிரகாசம்' 'ரோஜாத் தோட்டம்,'
'திரிமூர்த்தி உண்மை,' 'வைதிக ஜெய்பேரிகை' ஆகியவைகளின்

ரூடன் கோ,

14, பள்ளியப்பன் தெரு,

சௌகார்பேட்டை, மதராஸ்.

1928

காபிரைட்] [விலை அணா 12.

THE KESARI PRINTING W

பொருளடக்கம்.

பக்கங்கள்.

முகவுரை	...	1
மானிலம் மதிக்கும் மகான்	...	2—5
கன்பூஷனின் கடைக்காலம்	...	5—7
நன்மை புரிவோர்—தெய்வ மறிந்தவரா—தெய்வ மறியாதவரா?	...	7
அன்பை ஆதியில் அருளியவர் யார்	...	7
அறிஞரின் அருமைக் குணங்கள்	...	8—10
கடவுளின்பெயரால்செய்யப்படும்கொடுமைகள்	...	10—12
தோத்திர முறைகள்	...	12—13
தோத்திர தீமைகள்	...	13—15
தோத்திர இரகசியம்	...	15—17
அற்புத லீலைகள்	...	17—18
சங்கீதம்—சிறந்த கலையாம்	...	18—19
பேரின்பமா—சிற்றின்பமா?	...	19—20
சங்கீதப்பித்தால் சீர்குலைந்த மன்னர்கள்	...	20
சங்கீத சக்தி	...	20—22
பச்சாதாபத்தைப் பாதிக்கும்	...	22—23
வலிமையை வீழ்த்தும்	...	23—24
மனம்போல சங்கீதம்	...	24—26
மொழிச் சிறப்பு	...	26—27
மொழிவன்மை பெற்றவர்கள்	...	27—28
மொழியால் மருண்டவர்கள்	...	28—29
புகழ்மொழி படுகொலையே	...	29—
பொய்மொழி—பித்தலாட்டம்	...	30—31
வாயாடியின் விபரீதங்கள்	...	31
மௌனமாயிருக்க	...	31—32
மொழியின் இரகசியம்	...	33—35

முதல் அத்தியாயம்.

கலைக்கடல்—கருணைமொழி ... 37—39

இரண்டாவது அத்தியாயம்.

நலம் நிறைந்த நாடு—சீலம் சிறந்த சான்றோர் ... 40—43

மூன்றாவது அத்தியாயம்.

சீறழிந்த சொல்—சிறப்பழிந்த சங்கீதம் ... 44—46

நான்காவது அத்தியாயம்.

அறமமைந்தவன் அறமழிந்தவன் ... 47—49

ஐந்தாவது அத்தியாயம்.

மாணவர்களறம்—மரகதமொழிகள் ... 50—54

ஆறாவது அத்தியாயம்.

மாசற்றமொழி—மதிமண்டலம் ... 55—5

ஏழாவது அத்தியாயம்.

குருநாதரின் ஆன்ம சரிதை ... 59—6

எட்டாவது அத்தியாயம்.

அற்புதமொழி—ஆசானறம் ... 64—66

ஒன்பதாவது அத்தியாயம்.

சிறந்த சொற்கள்—சீலமொழிகள் ... 67—69

பத்தாவது அத்தியாயம்.

குருநாதரின் காட்சி ... 70—72

பதினொன்றாவது அத்தியாயம்.

குருநாதர். உள்ளும், புறமும் ... 73 75

பன்னிரண்டாவது அத்தியாயம்.

மாணவர்வளின் நிலை ... 76—79

பதின்மூன்றாவது அத்தியாயம்.

மர்ம மொழிகள் ... 80—81

பதினான்காவது அத்தியாயம்.
அவசரப்படேல் ... 82—83

பதினைந்தாவது அத்தியாயம்.
அரசாங்க அமைப்பு ... 84—88

பதினாறுவது அத்தியாயம்.
இகலோக இரகசியம் ... 89—93

பதினேழாவது அத்தியாயம்.
மாநிலத்தின் மர்மம் ... 94—95

பதினெட்டாவது அத்தியாயம்.
பெரியாரின் இரகசியம் ... 96—98

பத்தொன்பதாவது அத்தியாயம்
புராதன நீதிகள் ... 99

இருபதாவது அத்தியாயம்
மாசற்ற மாணவர்மொழி ... 100—101

இருபத்தியொன்றுவது அத்தியாயம்
அரசாங்க உண்மைகள் ... 102

விஷய சூசிகை ... 103—107

அர்ப்பணம்

தமிழ் நாட்டு இளஞ் சிங்கங்களே !

தரணியிலே தலைமை வகித்திருந்த தமிழ்நாடு இப்பொழுது புவியிலேயே தாழ்ந்த நிலையில் தூங்குகின்றது. சகமெல்லாம் சென்று சிறப்பை யளித்த சித்தர்களின் மூலநாடான இத்தமிழகம், கூலிகளையே கண்டங்களெல்லாமனுப்புகின்றன. சங்கரர், இராமனுஜர், அப்பர், ஆழ்வார், நாயன்மார்கள், நிலவிய நாட்டில் இப்பொழுது, அறியாமை, பொறாமை, அகங்காரம், முதலியவைகள் தாண்டவமாடுகின்றன. நோயாளிக்கு, பல வைத்தியர்கள் தமக்குத் தோன்றியவாறு வைத்தியங் கூறுவதுபோல் தமிழகம் தலையோங்க இலக்கியம், சித்திரம், சங்கீதம் பரவவேண்டுமென சிலர் பகிரதப் பிரயத்தினஞ்செய்து வருகின்றார்கள். ஆனால் இவைகளில் நம்மைவிட தாழ்மையான நிலையிலுள்ள எத்துணை நேயர்களோ நம்மைவிட உயர்நிலையிருக்கின்றார்கள் ஊன்றிப் பார்ப்போமானால், இலக்கியம், சித்திரம், சங்கீதம் முதலியவைகளைவிட, நமக்குவீரம் அறிவு, வலிமையே அதிகமாக வேண்டும். வலிமையுடன் அறிவை அடைந்த வீரனுக்கே வையக மாதலால், அவைகளைக் கொண்டுள்ள இந்நூலை தமிழ் நாட்டு இளம் சிங்கங்களுக்கும் அவர்களுடைய தன்னந்தனி தலைவராய் விளங்கும் டாக்டர் பி. வரதராஜுலுவிற்கும் இதை அர்ப்பணஞ் செய்கின்றேன். அவர்கள் சந்ததமும் இளமையுடனிருக்க எல்லாம் வல்ல இறைவனைப் போற்றுகின்றேன்.

எம். ஆர். ஜம்புனுதன்.

க ன் பூ ஷ ன்

முகவுரை.

"திருக்கதவந் திறவாயோ திரைகளெல்லாந் தவிர்த்தே,
திருவருளும் பெருஞ்சோதி திருவுருக் காட்டாயோ,
மணக்கதவந் திறவாயோ மறப்பையெல்லாந் தவிர்த்தே,
மாற்றறியாப் பொன்னே நின் வடிவது காட்டாயோ."

என ஸ்ரீ இராமலிங்கர் மொழிவதுபோல், ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் சீன நாட்டிலே ஒரு மகான் தோன்றி பல கரியங்கள் நடத்தினர். உலகமழிந்தாலுமழியும் அவர் திருவாய்மலர்ந்தருளிய மொழிகள் மேதினியினின்று அழியாது. தமிழர்களறியவேண்டுமெனவே, அவர் அருளிய மணித்திரள்களைக் இங்கு குவித்துளோம். அவரையும், அவர் மொழிகளைப்பற்றியும் எழுதுவதற்குமுன், அவர் சன்மநாடாகிய, சீலமான சீனுவின் சிறப்பைப்பற்றிச் சற்று சொல்லுவோம். புவியின்கண் உள்ள தேசங்களில் புராதனம் வாய்ந்தது சீனநாடு! ஆதி 56 நாடுகளில் இந்நாடு ஒன்றுயிருந்தது. தர்ம புத்திரர் செய்த இராஜசூயயாகத்திற்கு, இச்சீனதேயத்திலிருந்து பகதத்தன் என்னும் அரசன் வந்திருந்ததாக மகாபாரதம் கூறுகிறது. புத்தரால் புனிதமாக்கப்பட்டது சீனநாடு. (சீனநாட்டை நெப்போலியன், உறங்கும் யானை என்றான். ஐரோப்பாவையும், இந்தியாவையும், கவிழ்த்த டார்டார்கள், சைனுவில் ஒன்றும் செய்ய முடியவில்லை. டார்டார்களைத்தடுக்கவேண்டி 1500

மைல் நீளமான சுவரினால் நாட்டை மறைத்தார்கள். இப் பூமண்டலத்திலேயே அற்புதமான செயல்களில் இது ஒன்றாகும். வெடி மருந்தை முதன்மையாகக் கண்டு பிடித்தவர்கள் சீனர்களே. காகிதத்தையும், உலகத்திலேயே முதன்மையாகக் கண்டுபிடித்தவர்கள் சீனர்களே! இது ஹிமாலய மலைக்கு வடக்கேயுள்ள பெரும் பூமியாகும். ஆசியாவிலுள்ள பெரும் நதிகள் இங்கு பாய்கின்றன. 40 கோடி சனங்களுக்கு அதிகமாக உள்ளதேசம். சப்பைமூஞ்சி, சிரமிழிந்த சாதி, காரிருள் முழுகியுள்ள காட்டு மிறாண்டி எனப் பலவாறாகப் பாதிரிமார்கள் தூஷித்தது மன்னிபில் கிறிஸ்துவ நாடாக மாற்றுவதற்கும் பகீரதப் பிரயத்தினஞ் செய்தார்கள். இப்பொழுது அந்நாட்டில் புத்துயிர் தோன்றியிருக்கிறது. இந்தியாவைவிட அதிகப் பேராவல்படைத்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள், அந்நாட்டில் தோன்றி உயிரையுமளிக்க முன் வந்துளார்கள்.

மானிலம் மதிக்கும் மகான்

சீனச் சிறப்பிற்கு மூலகாரணம் 3000 வருடங்களுக்கு முன்னால் தோன்றிமறைந்த ஒரு மகானேயாவார். உலகில் தோன்றிய மகான்கள் செய்தவேலை பெரும்பாலும் ஒருவகுப்பையோ அல்லது ஒரு தேயத்தையோ குறித்ததாகவே யிருக்கின்றன. இயேசு செய்தவேலையினாலும் அவருடைய போதனைகளினாலும் பெருமையையும் பேரையும் பெற்றவர்கள் கிறிஸ்தவர்களேதவிர, அல்லாதவர்கள் அல்ல. முகம்மது நபியையும் பின் பற்றினவர்கள் மேன்மைப்பட்டார்களே தவிர பின்பற்றாதவர்கள் துன்பங்களுக்கும் துக்கங்களுக்கும் ஆளானார்கள். இவைகளுக்கெல்லாம் மூலபுருடர்

களான பெரியார்களைப்பற்றி நான் யெழுதப்போவதில்லை. ஏனெனில், இத்தகைய பெரியார்களை இன்னும் இவ்வுலகில் காணலாம். மனிதகோடிமுழுவதையும் அன்புடன் எண்ணி, பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொருவரும், உன்னத நிலையை அடையலாமென உரைத்த பெரியார்கள் சிலரேயாவர்.

அவர்களுள் தலைசிறந்து விளங்குகிறவர்கள் புத்த பகவானும், கன்பூஷியஸ் மகானுமே யாவார்கள். பிறகு நவீனமாய்த்தோன்றிய தயானந்தராகும். சீன வேதாசிரியரான கன்பூஷியஸ்ஸைப்பற்றி இப்பொழுது கூறுவோம். இவர் தந்தை பெயர் சஹல்லிபாங்குஹை. அவர் அரசாங்க பதவியிலிருந்தார். எழுபதாவது வயதில் 10 குழந்தைகளின் தந்தையான பிறகு மறுபடியும் மணஞ்செய்து கொள்ளவேண்டுமென அவருக்கு எண்ணம் தோன்றிற்று. உடனே 17 வயதுள்ள இளம்பெண்ணை மணந்தார். அப்பெண்ணிற்குப் பிறந்தவரே கன்பூஷியஸ். அவர் பிறப்பைத் தெரிவிக்க அசரீரிவாக்குண்டாகவில்லை. நிலம் அதிர்ந்துநீர்பொங்கிஆறுகரை புரண்டு மாடமாளிகைகள் இடிந்து அதிசயக் கனவையும் எவரும் காணவில்லை. சிறுவயதாயிருக்குங்கால், சரசுவதி தேவிதோன்றி அவர் நாவில் ஒன்றும் எழுதவில்லை. தேவர்கள் அவர் இருதயத்தைத் திறந்து அழுக்கான மலத்தை நீக்கி, அறிவென்னும் அமுதத்தை அளிக்கவில்லை. அவர் ஆயிரக்கணக்கான குழந்தைகள் பிறப்பதுபோல் சகசமாகப் பிறந்து, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவந்தார். மூன்றாவது வயதில் தன் தந்தையை யிழக்கும்படியான துரதிர்ஷ்டத்தை அடைந்தார். தாயினால் காப்பாற்றப்பட்டு, வழக்கமாயுள்ள நாட்டின் கல்வியைக்கற்று எல்லாகலைகளிலும் வல்லுவரானார்.

அவருக்கிருந்த சரித்திரஞானம் சட்டஞானம் ஆகிய இவைகளைக்கண்டு மன்னன் அவரை அரசிறையிலமர்த்திக்கொண்டான். 19-வது வயதில் விவாகமாயிற்று. நாடு முன்னணியில் நிற்க அறியாமையழியவேண்டும் என அறிந்து வெகுகாலங்கழித்தார். 24-வது வயதில் தன் தாயை இழந்தார். அத்துக்கம் தீர மூன்று வருடம் ஏகாந்தவாசமிருந்தார். 51-வது வயதில் லூ என்னும் அரசனிடத்தில் சிறிய ஜில்லாவின் தலைமைப்பதவியை அடைந்தார். இப்பதவியிலிருந்தே மந்திரியானார். அவர் அரசு புரியுங்கால் திருட்டும், விபசாரமும், நாட்டினின்று அகன்றுவிட்டது. எங்கும் சமாதானம் நிலவி, சனங்கள் தரித்தமன்னியில் சந்தோஷமாய் வாழ்ந்தார்கள். அவருடைய தள்ளாத காலத்தில் நன்றிகெட்ட மன்னர்களால் பதவியிலிருந்து நீக்கப்பட்டவுடன், ஆண்டியுடையணிந்து, தேசமெங்கும் சுற்றி கல்வியைப் பரவச்செய்தார். கந்தைத்துணியோடு, கூழைக்குடித்துக்கொண்டு, தன் உயிருக்கு இருதடவை ஆபத்துநேர்ந்தும், மேன்மையான தன் உபதேசங்களினால் நாடெங்கும் நேர்மையை நிலவச்செய்தார். சனங்கள் அவரைச்சிலகாலம், சர்க்கார் ஒற்றன் என உரைத்துத் துன்புறுத்தியதுமுண்டு. இவர் மந்திரிபதவியிலிருந்த காலத்து, நியாயஞ்செய்வதில் நஷ்டமடைந்த சிலர் இவரை வருத்தியதுமுண்டு. சாந்தம் நாட்டில் நிலவவேண்டுமானால்அறிவு மாத்திரமன்னியில் தீரமும் வீரமும் வேண்டுமென அஞ்சா நெஞ்சத்துடன் சீனதேய முழுதும் போதித்தார். குடியானவன் ஒருவன், தன் மகன், கடமையைச் செய்யத் தவறினான் என குருநாதரைக் குறைகூறி அவனுக்கு ஏதேனும் தண்டனை அளிக்கவேண்டுமென

வேண்டினன். அதற்கு அவர் மகனுக்குத் தண்டனை அளித்தது மன்னியில், மகனுக்குக்கலவி போதிக்காததற்காகத் தந்தையையும் தண்டித்தார்.

சிற்றரசர்கள் அதிகமாகத்தோன்றி கொடுங்கோலாட்சி காட்டுத்தீயைப்போல் பரவியிருந்தகாலத்திலேயே அவர் நாடெங்கும் சுற்றினர். ஒருகாலத்தில் அவர் கானகத்தின் நடுவிலே, கண்ணீருடன் கதறிக்கொண்டிருந்த ஸ்திரீயொருவளைக்கண்டு "நீயேன் இத்தன்னந்தனிமையான இடத்தில் புலப்புகிறாய்" என வினவினர். அதற்கு அவள் "இந்த இடத்திலேயே என் தந்தை புலியொன்றால் மடிந்தார்; என் புருடனும் அங்ஙனமே அழிந்தார்;என் மகனும் அதேகதியை அடைந்தான் என்றாள். அதற்குக் குருநாதர், "இத்தகைய பயமான இடத்தில் நீ ஏன் வாழவேண்டும்" என்றதும், இங்கு கொடுங்கோல் மன்னன் இல்லை என்றாள். உடனே குருநாதர் மாணவர்களை நோக்கி:—இதை ஞாபகத்தில் வைக்கவும்; புலியைவிட பயங்கரமானது, கொடுங்கோலாட்சி என்றார்.

நாடு நகரங்களெல்லாம் சுற்றி, நாட்டின் அறியாமையை அழித்து, கல்வியை எங்கும் வளரச்செய்து, சரிதைகளைச் செம்மையாய் எழுதி, சங்கீதத்தைச் சீர்திருத்தி, தேசத்திற்கே புத்துயிரை அளித்து, அவரின் 73-ம் ஆண்டில் பூவுலகைவிட்டு மறைந்தார்.

கன்பூஷனின் கடைக்காலம்

தேசத்திற்குப் பாடுபட்டோம் நன்மைகளைப் புரிந்தோம் என்ற எண்ணத்துடனேயே இறந்தார். அவர் சாவிற்குச் சீனமுழுவதும் துக்கமடைந்தது. மூன்று வருடம்

வரை சனங்கள் மனம் சஞ்சலமாகவே இருந்தது. சாண்டங்க் ஜில்லாவில், கியூபௌவிலுள்ள அவர் கல்லரை, தேசத்தின் தேவாலயம் போலவே எண்ணப்படுகின்றது. அங்கு இப்பொழுது பெரும் மடங்களும், கோபுரங்களும், கட்டப்பட்டுள. இலட்சக்கணக்கான சனங்கள், இன்றும் அங்கு சென்று, அவருக்கு மரியாதை செலுத்தி வருகிறார்கள். 3000 வருடங்களுக்குப் பிறகும், இப்பொழுதும், அதை நினைத்து துக்கிக்காதவர்களில்லை. அவர் தேவாலயத்தினருகிலேயே, அவர் மகனின் கல்லரையும் இருக்கிறது. அவர் உயிருடன் வாழுங்காலத்தில் நாட்டின் கண் உள்ள எல்லா நூல்களையுங் கற்று, அதன் தேனைப் பூவுலகிலுள்ள மானிடர்களறிய தம் மாணவர்களுக்குச் சம்பாஷணை மூலமாக அளித்த அமுதமே இந்நூலாகும். முத நூலில், வினு விடையாக உள்ளதைச்சுருக்கியும், சந்தர்ப்பத்திற்கேற்ற வாறு பிரித்தும் யாம் எழுதியுளோம். பூவுலகத்தில் தன்னை விடத் தாழ்ந்த புருடர் இல்லை என்பதே அவர் எண்ணம் தமிழ்த்தேயப் பெரியார் புகல்வதுபோல்,

"கற்றும் பலகேள்விகள் கேட்டு, கறங்கனவே
சுற்றுந்தொழில் கற்றுசிற்றின் பத்தூடு சுழலிலெனேமென"

அவர் அடிக்கடித் தன்னைப் பற்றியே குறைகூறிக் கொள்வதுண்டு. எல்லாம் வல்ல இறைவனை நான் எங்ஙனம் அறிவேன் எனவும்,

"குற்றங்குறைந்து குணமேலிடுமன்பர் கூட்டத்தையே
முற்றுந்துணையென நம்புகண்டாய் சுத்த மூடநெஞ்சே"

என தன் அறியாமையைப் பற்றியே அவர் அஞ்சுவதுண்டு. தெய்வம், சங்கீதம், இவைகளைப்பற்றியே அவர்

சூட்மமாய் அறிவித்துளார். குருநாதர் கடவுளைப் பற்றி அதிகமாக மொழியக்காணோம். அறிந்த பொருள்களையே அறிய வன்மையற்றிருக்குங் கால், அறியாப் பொருள்களைப் பற்றி யாம், யாது அறிவோம் என்பது அவர் எண்ணம்.

நன்மை புரிவோர்—தெய்வமறிந்தவரா! தெய்வ மறியாதவரா?

ஆண்டவனைப்பற்றி அதிகம் மொழியாதவர்களே உலகத்திற்கு அதிக நன்மையைச் செய்துளார்கள். அகிலத்தி லுள்ள சீவராசிகளிடம் அன்பை வளர்க்கவேண்டு மென்றவர்கள் தெய்வத்தைப்பற்றி அதிக முரைக்காதவர்களே! சீவஹிம்சை நிவாரணத்தை நாடெங்கும் நிலைக்கச் செய்தவர்கள் அவர்களே. நாடெங்கும் மடங்களைத் தாபனஞ்செய்து, சமாதானத்தை நிலைநிறுத்தியவர்களும், தெய்வத்தைப்பற்றி பறைசாற்றுதவர்களே.

அன்பை ஆதியில் அருளியவர் யார்?

இப்பெரியார் புத்தரே. பௌத்தரைச் சீஷன் அணுகி தெய்வம் யாது எனவினவினான்:- ஆவேசம் நிறைந்த பித்தர்கள் புகல்வதுபோல் தெய்வத்தை நான் கண்டேன், என்னிடம் அவர் மொழிந்தார், இரகசியங்களை அறிந்தேன், அம்மொழிகளையே நான் உரைக்கின்றேன் எனச்சொல்லாமல், என் ஆன்மாவையே நான் அறியச் சக்தியிருக்கப் பரமான்மாவை எங்ஙனமறிவேன்? நான் உடலை உணராதிருக்குங் கால், ஆன்மாவை எங்ஙனமறிவேன் எனஉரைத்தார். உலகத்திலே, மானிடகோடிகளுக்கு மேன்மையான மதியை அளித்தவர் இவரே. ஆடுமாடுகளுக்கும் அன்பை அருளிய அதிபதியும் இவரேயாகும். புத்தபிரான் ஞானமடைந்தவுடன், ஆயிரக்கனக்கான ஆடுகளை பிம்பிசாரன் அரண்மனைக்கு

ஓட்டிச் செல்வதைக் கண்டார். சிறிய ஆடொன்று வெயில் பொறுக்க மாட்டாமல் தவித்துக்கொண்டு, இங்குமங்கும் துள்ளிக்குதிப்பதைப் பார்த்த அவர் உடனே மந்தையுடன் கூடவே சென்று அவ்வாட்டைத் தலையில் சுமந்துகொண்டு, பிம்பிசாரன் அரண்மனையை அடைந்தார். அங்கு பிராமணர்கள், பலர் சூழ்ந்து ஆயிரக்கணக்கான ஆடுகளை பலியளித்த வண்ணமாகவே இருந்தார்கள். இரத்த ஆறோ ஓடிக் கொண்டிருந்தது. அப்பொழுது, ஒரு ஆட்டை வெட்டுவதற்காகப் பிராமணர்கள் கத்தியை ஓங்கியவுடன், அதன் கீழே தன் தலையை நீட்டி, தன்னையே பலியிடும்படி வேண்டினார். இவருடைய அரச சீடரான அசோகன் தன்னைத் தெய்வ தூதன் என்று மொழிந்து கொள்ளாமலிருந்தான். அவனை விட நேர்மையான அரசன் இன்னும் உலகில் தோன்றவில்லை. அவன் நாட்டிலே திருடன், விபசாரி, ஏழை, ஆகியவர் இல்லாமலிருந்தார்கள். பொன்துண்டு ஒன்றை நடுத் தெருவில் விட்டுச் சென்றால், அது அவ்விடத்திலேயே பல நாட்கள் இருக்குமாம், என யாத்திரீகர்கள் உரைத்துளார்கள்.

அறிஞரின் அருமைக் குணங்கள்.

புத்தருக்குப் பிறகு ஸ்ரீ சங்கரர், அறிவையே தெய்வமெனச்சொல்லி, நாட்டில் கல்வியை, மடங்கள் மூலமாகப் பரவச்செய்தார். ஹக்சலி, டார்வின், ஸ்பென்சர், பேகன், பிராட்லா, முதலிய மகான்கள் செய்த அருமையான ஊழியங்கள், கடவுளைக்கண்டேன், நான் கடவுள் தூதன், என மொழிந்த எவர்களாலும் செய்யப்படவில்லை. பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்க சுவாமிகள் புலம்பலைப் படித்தால், எல்லாம் வல்ல இறைவனை அறிய இயலாதென

அவர்கள் பட்ட கஷ்டங்கள் பல தெரியவரும். அடியார்க்கு அடியாராயிருந்து, நாயினும் தாழ்மை யடைந்துளோர் என எண்ணினர்களே யொழிய ஈசனருள்பெற்று, அவரை அறிந்துளோமென அவர்கள் உரைக்கவே இல்லை.

கடந்த நூற்றாண்டில் தோன்றிய மகரிஷி தயானந்தரைச் சுவாமி சிரத்தானந்தர் அணுகி ஈசனைப்பற்றி அறிவிக்க வேண்டுமென்றார். அவரைப் பேச்சாலும் மொழியாலும் அறிவது அரிது. குணங்களை அடைந்து, அடியாருக்கு அடியாரானல், அறிவதற்கு சந்தர்ப்ப மேற்படுமென்றார். அத்தகைய மகானல், பாரத மக்களுக்கு ஏற்பட்ட நன்மைபோல் எவராலும் ஏற்படவில்லை எனலாம். "பொய்விட்டகலா புலைக்கொடியேன்" எனத் தாயுமானவர் கதறியதுபோல், அகமலறி ஆன்மாவை அறிந்தவரே கன்பூஷியஸ். இத்தகைய பெருமானைப்பெற்ற நாட்டினர்கள், இதுவரை உலகத்தில் எவருக்குமே யாதொரு தீமையையும் செய்ததுமில்லை, எண்ணவுமில்லை.

"கல்லாதவறிவு மேற்கேளாத கேள்வியுங்
கருணை சிறிதேது மில்லாக்
காட்சியுங் கொலைகளவு கட்காம மாட்சியாய்
காதலித்திடும் நெஞ்சமும்
பொல்லாத பொய்மொழியும் அல்லாது நன்மைகள்
பொருந்துகுண மேதுமறியேன்"

எனத்தமிழ் சித்தர்போல் கதறும் புருடரென்றும் இவரை உரைக்கலாம்.

பெரியார்களின் மௌனவாழ்க்கையினின்று நாம் அவசியமாய்க் கற்கவேண்டிய விஷயங்கள் பல உள. அதில்

முதன்மையாக இம் மகானிடமிருந்து அறிந்து கொள்ள வேண்டுவது யாதெனில், கடவுளைப்பற்றி அதிகமாகப் பேசுபவனை நன்றாய் கவனிக்கவேண்டும்.

கடவுள், கடவுளென அடிக்கடி உரைப்பவன் பதிவிருதை பதிவிருதையென, தன்னை யடிக்கடி மொழிந்துகொள்ளும் பெண்மணியைப் போலவும், சத்தியம் சத்தியமென சகத்தில் அடிக்கடி சொல்பவனைப் போலவும் ஆவான். கடவுளைப் பற்றி அதிகம் உரைப்பவர்களே, ஜீவஹிம்சை செய்வதில் சிறந்து விளங்குவார்கள். உயிர்க் கொலையில் உயர்ந்து நிற்கிறவர்கள் அடிக்கடி கடவுள்பெயரை உச்சரித்து அவருடைய சீடர்களென பறைசாற்றிக்கொண்டு, தைரியமாகப் பல அநியாயங்களைப் புரிவார்கள். தெய்வத்தின் பெயரைக் கேட்டவுடன் அகமகிழ்ந்து மெய்மறந்து இத்தீய வஞ்சகர்களுடைய மொழிகளால் மருண்டு யாவற்றையும் இழந்து மானிடர்கள் மிருகமாக மாறுவார்கள்.

கடவுளின்பெயரால் செய்யப்படும் கொடுமைகள்.

தெய்வத்தின் பெயரைச் சொல்லியே ஹிரண்யகசிபு உலகத்தை உபத்திரவபடுத்தினான். தானே தெய்வமெனக் கூறித் தரணியை அழித்தான். அவனைப் பின்பற்றின அசுசர்கள் தங்களைத் தெய்வாம்சமென அழைத்துக் கொண்டார்கள். அதை நாம் அங்கீகரித்துக் கொண்டிருந்தோம். இப்பொய்யைச் சொல்லி எத்தனை மன்னர்கள் மாநிலத்தை அழித்திருக்கிறார்கள்? தெய்விகம் வாய்ந்தவரெனச் சொல்லிக் கொண்டு ஜாதி பேதமும், புரோகிதபலமும், செய்யாத அட்டூழியமும் உண்டோ?

தெய்வத்தன்மை வாய்ந்தவர்களில் தலைசிறந்துநிற்கும் மோசேயின் அடாத காரியங்களைக் கேட்க மனம் பதறும்.

ஆயிரக்கணக்கான ஆண் பெண்குழந்தைகளை ஈசுவரன் பெயரால் வதைத்தார். இயேசுபக்தியிற் சிறந்த செயின்ட்பாலர் கிறிஸ்துவ சமயத்தை உலகத்தில் தாபனஞ் செய்தவர். அச்சமயம் உலகம்முழுவதும் பரவவேண்டி எவ்வளவு பொய் வேண்டுமானாலும் சொல்லுவேனென்றார். ஹிந்து சமயத்திற் அபிமானங்கொண்ட தன் தம்பியினால், தன்னுடைய சமயத்திற்கே தீங்குவருமென எண்ணியே ஔரங்கசீப் அவனைக்கொன்றார். முகம்மதிய மதத்தின் பெயரால் கணக்கற்ற ஹிந்துக்களை மாய்த்தார். தெய்வபக்தரான செயின்ட் ஜேவியர் நாட்டின் கண்ணுள்ள யாவரையும் மதமாற்ற வேண்டிகையாளாத உபாயமே கிடையாது. ஞான சாஸ்திர நிபுணரான கலிலியோவை 1610ல் தெய்விக புருடர்கள் கொலை செய்தனர். மதுராபுரியில் துறவிகள் சமய பற்றுள்ளவர்களால் கழுவி லேற்றப்பட்டனர். தெய்வ யுத்தம் என்னும் குருசேட்களைத் தோற்றுவித்துக் கிறிஸ்துவர்களும் முகம்மதியர்களும் ஐரோப்பாவில் முன்னர் இரத்த ஆற்றை ஓடச் செய்தனர். தெய்வத் தன்மை ஏகபோக அதிகாரம் படைத்த ராஜ்புடீன் என்னும் ருஷிய நாட்டின் வீழ்ச்சிக்குக் காரணமான இவன் அழிக்காத கற்பும், செய்யாத கொலையும் கிடையாது. தர்மத்தின் பெயரைச் சொல்லியே கடைசி யுத்தம் ஆரம்பமாச்சுது. சீன கலகத்திற்குக் காரணம் இத்தெய்வ பித்தேயாகும். இந்தியாவை அடிமையாக்கினதும் கடவுள் பணியேயாம்.

இவ்விஷயத்தில் போர்லாரா என்னும் துரைமகனார் கொடுத்துள்ள சில புள்ளி விவரங்களைக் கவனிப்போம். மத பக்தியிற் சிறந்த ஸ்காட்லந்து நாட்டினரில் 60க்கு ஒருவர் கொலை முதலான குற்றத்திற்காகத் தண்டனை யடைந்தார்

களாம். இதற்கு ஆதாரம் 1894 ஆண்டின் சர்க்காருடைய அறிக்கையாகும். 1856 சர்க்கார் அறிக்கையில் 274 கிறிஸ்துவர்களிலொருவர் குற்றவாளியாயிருக்கின்றனர். 856ல் ஒரு முகம்மதியர் கடுங் குற்றங்களைச் செய்தவராகின்றனர். ஹிந்துக்களில் 1360ல் ஒருவரே குற்றவாளியா யிருக்கின்றனர். கடவுளைப்பற்றி சர்வகாலமும் பேசிவரும் பக்தர்களின் வழி இவ்வாறிருக்க, கடவுள் பெயரை எடுத்ததர்க்கெல்லாம் உபயோகிக்காதிருக்கும் பௌத்தர்களில் 3787ல் ஒருவரே கடுங் குற்றங்களுக்காளாயிருக்கின்றனர். (இருபதாவது அத்தியாயம்—330 பக்கம்) இதிலிருந்து நமக்கு வெளியாவது என்னவென்றால் கடவுள் பெயரைப் பெருவாரியாகக் கையாண்டுவரும் பக்தர்களிடம் காணும் குற்றங்களை விட மிகவும் குறைவாகவே கடவுள் பெயரைக் கையாளாதவர்களிடம் காண்கிறோம். உண்மை தெய்வபக்தியுள்ளவர்கள் திருப்தியின்பத்தைப் பெற்று கடவுள் தியானத்திலேயே காலத்தைக் கழிப்பார்களே தவிர அவருடைய பெயரைச் சொல்லித் திரியார்கள். உபநிஷத காலத்து மகான்கள் கடவுளைக் காண்பது அரிது என்று அனுபவ பூர்வமாகக் கண்ட பின்னரே அறியப்படாத பொருளை பரம்பொருளாகும் என்றார்கள். அதே மாதிரி கன்பூஷஸ் மகானும் அவரை அறியாப் பொருள் என்றே கூறிவிட்டார். தெய்வத்தைப்பற்றி அல்லும் பகலும் வாய்க்கூசாமல் கூறுகிறவர்களே தோத்திரம் முதலான முறைகளால் அவரைப் புகழ்ந்துள்ளார்கள். அதைப்பற்றி கொஞ்சம் கவனிப்போம்.

தோத்திரங்களின் முறைகள்.

மேளதாளம், நடனநாட்டியம், இடிமுழக்கம், பேரொளி, பேரிரைச்சல், இவைகளைக்கொண்டு கடவுளுக்கு முறை

யிடுவோர்களுண்டு. ஓசைமணிகளை அடித்து படாடோபமாய் கதறினால் அவர் செவிக்கு எட்டுமென எண்ணுகிறவர்களும் உண்டு. இன்னிசைக்கருவியினால் அவரை ஆனந்திக்க முடியுமென்றும் அதன் பயனாக முக்தியைப்பெற முடியுமென்றும் எண்ணுகிறவர்களுமுண்டு. அகிலத்தை அறைகூவி அழைத்து அதனால் அவரைத் திருப்திசெய்யலாமென்பவர்களுமில்லாமலில்லை. கண்களை மூடிக்கொண்டு மெய்மறந்தால் மாசற்றவரை அடையலாமென்றும், சலத்தைத்தெளித்து சுத்திசெய்து, சர்வாங்கமும் பூமியைத்தொடும் வண்ணம் கீழே விழுந்து நமஸ்காரம் பண்ணினால் நாதனை அடையலாமென்றும், குறிப்பிட்ட நேரங்களில் குறித்த சிற்சில வாக்கியத்தொடர்களை உச்சரித்து விட்டால் பாபங்கள் கழியுமென்றும், நடுநிசியில் யாருமில்லாத சமயத்தில் தோத்திரப் பாக்களால் அவரை அடையலாமென்றும், பல தடவை முறையிட்டுக் கொள்ளுவதனால் பலனைப்பெறலாமென்று கூறுகிறவர்களும் உண்டு. இறந்தவர்களைத்துதித்தால் அவர் வெளிப்பட்டு விடுவாரென்கிறவர்களும் உண்டு. திசையை நோக்கி முறையிட்டால் தோத்திரங்களுக் கதிகாரியானவர் அதைக்கேட்டு கோரினதை அளிப்பாராம். தோத்திரங்கள் துன்பங்களைத் துலைத்து தீமைகளைக் களைந்து நன்மைகளைத்தந்து பெரிய பதவியை அளிக்குமாம். தோத்திரங்களினால் சகலபாவங்களும் தீர்ந்து பெருவதற்கரிய மனைவி மக்களைப் பெறலாமாம்.

தோத்திரத் தீமைகள்.

கோவில் உருவத்தை உடைக்கச் சக்தியற்றிருந்த ஜரீர் என்பானுக்குத் தோத்திர மகிமையால் தனக்கில்ல)

திருந்த சக்தியைப் பெற்றனும். பல தடவை இந்திய வின்மேல் படையெடுத்து நாட்டினர்களான இந்துக்களைத் துன்புறுத்தி வதைத்த தாமர்லேன் தான் செய்தகொலை குற்றம் பாவங்கள் முதலானவைகளிலிருந்து மீற வேண்டி உடக்குடனே தவறுமல் துதிசெய்வாராம். தொழுகையில் இவர் தவறினதே கிடையாதாம். அதேமாதிரி இந்தியாவைச் சீரழித்த ஔரங்கஜீப்பைப்பற்றி நாம் கூறத் தேவை யில்லை. தெய்வத்தைப் பகிரங்கப்படுத்துவதற்கும் அவ ருடைய தோத்திரங்களைப் பாடுவதற்கும் அவருக்கு நேரம் போதவில்லையாம். அதேமாதிரிதான் திப்பு சுல்தானும். அப்துல் ரஷீதும் தெய்வபக்தியிற் சாலச்சிறந்தவன். தொழு கை நேரத்திற்குக் கடவுளைத் தியானிக்கத் தவறினது கிடையாதாம். உற்றுபோசனை செய்தால் இவ்வித உபாசனை யினுல் புறச்சுத்தம் ஏற்படுமே யொழிய அகச்சுற்றம் ஏற் படாதென்பது விளங்கும். பேரிறைச்சலைக் காட்டிலும் பெரும் சாந்தமே சிறந்ததென்பது குருநாதரின் முடிவு. பிராம்மாண்ட மான காலத்தில் ஒவ்வொரு விஞடியும் புனித மாயிருக்கச் சிற்சில விஞடிகளை மாத்திரம் குறிப்பிட்டு பெரிய தாகக் கருதுவானேன் என்பார். ஒரு காலமன்றி சதா காலமும் பூஜையாய் ஒப்புவித்தேன் என்று தாயுமானுரும் கூறியுள்ளார். சனகாதி குமாரர்களிடமிருந்து வேத சாஸ் திரம் முதலானவைகளைக் கற்றேன், பரம்பொருளை அறியும் வழியைக் கண்டு கொள்ளவில்லை'' என்றூர் நாரதர். அதை எங்ஙனம் தீர்க்கலாம் என்று கேட்டதற்கு அவர் சொன்ன தாவது. "நீ கற்றதெல்லாம் மொழிகளே. மொழிகளால் அவ ரைக் காண்பதரிது என்றூர். இதற்கு இலக்கியமாய் இலங்கு கிறவர்கள் முற்றுங் கற்றுணர்ந்த ஞானிகளே யாவார்கள்.

வார்த்தை சொன்னால் சுகம்வருமோ? (தாயுமானவர்.

"வாயினால் தொழுது நின்ற மந்திரங்கள் ஏதடா
ஞானமான பள்ளியில் நன்மையாய் வணங்கினால்
காயமான பள்ளியில் காணலா மிறைவனை. (சித்தர்)

செயலுக்கேற்ற துதியே தோத்திரமாகும். பயனை அனுபவித்தே தீரவேண்டு மென்னும் சித்தாந்தம் மறைந்து, பாப மன்னிப்பு என்னும் குருட்டு நம்பிக்கை எப்பொழுது நாட்டில் நிலவிற்றோ அப்பொழுதிலிருந்தே தோத்திரம் தோன்றலாயிற்று. கடவுளையும் அவர் தூதனையும், தோத்திரஞ் செய்தால், எத்தகைய பாபமும் போய்விடுமென்னும் சித்தாந்தச் சிறப்பினாலேயே, தாமர் லேன், டிப்பு சுல்தான், ஔரங்கசீப், அப்துல் இரஷீத் முதலியோர் கடுஞ் செயல்களைச் செய்தார்கள். தோத்திரத்தால் எல்லாம் தொலைந்துவிடும் என்னும் தீரத்தினாலேயே அவ்வடாதகாரியங்களைச் செய்தார்கள். பாப மன்னிப்பு இயற்கைப் பயனுக்கு விரோதமாகும். கருணைக்கடலான கடவுள் பாபத்தை மன்னித்து விடுவார் என்பது சரியாகாது. ஏனெனில் நியாயஞ் செய்வதே கருணையாகும். பட்சபாதம் கருணையாகாது.

தோத்திர இரகசியம்

பழரசம் எவ்வளவு இனிப்பாய் இருந்தபொழுதிலும் சிலகாலம் காற்றற்ற பாண்டத்தில் அதை அடைத்து மூடி வைத்தால் அதன் இன்பம் புளிப்பாகமாறி மயக்கத்தைக் கொடுக்கும் வஸ்துவாகி விடும். அதேபோல் தோத்திரமும் ஆகும். சிந்தனை, சித்தம், புத்தி, சங்கற்பம் இவைகளில் கலவாத சில மொழிகளைப்பற்பல தடவை முறையே

உச்சரிப்பதினால், அகம்புறத்தினின்று அப்புறப்பட்டு மனங் கலங்கி மதிமயங்கி புளிப்பையடைந்து ஆவேசம் உண்டா கும். அச்சமயத்தில் மனிதன் செய்யாத அட்டூழியங்கள் கிடையாதெனலாம். இவைகளைத் தீரவிளக்கிக் காட்டினவர் குருநாதர். என்னைப் பின்பற்றி என்னுடைய நன்மைகளைக் கண்டு அதைக் கை கொள்ளுங்கள் என்றாரே ஒழிய என்னை உபாசியுங்கள் என்று சொல்லவில்லை. புறமொழியாலும் முகஸ்துதியாலும் ஒன்றுமாகாதென்றார். இச்சமயத்தில் பாரதியார் சொல்லுவது என் ஞாபகத்திற்கு வருகிறது. பெற்றதாய் உண்ண உணவின்றி, உடுக்க உடையன்றி பசிப் பிணியால் பேச சக்தியற்று இருக்கையில், மக்கள் சுந்தர காண்டத்தையும் மனோபீஷ்ட சங்கல்பத்தையும் பாராயணம் செய்துவிட்டு ஈசனை வேண்டுவானேயானால் அவன் கொலை பாதகனே ஆவான் என்பார். பாரதத் தாய் பரிதவித்துக் கொண்டு நாட்டினர் மடியுங்காலையில் அவ்வுயிரைக்காப்பாற்ற வேண்டிய வழியைக் காணமல் கடவுளுக்குத் தூபதீப நைவேத்தியம் செய்வது பாபமாகும் என்பார். ஏனெனில் நடமாடும் தெய்வங்களைப் போற்றுவதே சிறந்த சீலமென குருநாதரும் கூறியுள்ளனர். வடமொழியில் உபாசனையென்றால் கடவுளை அணுகுவது என்பதாம். அதாவது நம் குணங்களை அவருடையதுபோல் மாற்றிக்கொள்ள பாடுபடுவதேயாகும். துதியென்றால் அவருடைய சிறந்த குணங்களைப் பாடுவது. துதியின் உதவியினால் அவருடைய குணங்களை அறிய சந்தர்ப்பமேற்படும். ஈசுவரனைக் கெஞ்சிக்கேழ்ப்பது அநாவசியமாகும். ஏனெனில், அவருக் கியல்பான காரியங்களைச் செய்வதே ஈசுர குணம். உபநிடதம், பகவத்கீதை ஆகிய எதிலும் பிரார்த்தனையைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை.

குருநாதரும் தோத்திரங்கள் செய்யவேண்டுமென எங்குங் கூறவில்லை. நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களும் சிறந்ததாயிருக்குமேயானல் அதுவே அவரை அணுகுவதாகு மென்பது அவர் எண்ணம். ஆங்கிலக்கவிவாணரான டெனிசனும் செயல்களே தோத்திரமாக இருப்பதால் மொழிகளின் பயன் யாதெனமொழிந்துளார்.

குருநாதருக்கு அற்புதம் அதிசய முதலியவைகளைக் கண்டால் பிரியமில்லை. இயல்பாய் இலங்குவதே இகத்திற்கும் பரத்திற்கும் இணையில்லா இன்பமாயிருக்குங்கால் அதற்குமாறுன அற்புதம் அதிசயங்கள் எதற்கு என்பார்? அவர் வாழ் நாட்களில் அகிலத்தில் அயலார் அறிந்தோர் எனப் புகழவேண்டுமென விரும்பவில்லை. தன்னகத்திற்காகவே அறிவெனும் அமுதத்தை அடைந்த படியால் அயலார் மெச்ச அவர் அற்புதமொன்றுஞ் செய்யவில்லை. அற்புதங்களின் லீலைகளைப்பற்றி யாம் விளக்கமாக விரித்துளோம்.

குருநாதர் சங்கீதத்தைப்பற்றி வெகு சூட்சமமாக விவரித்துளார். செவிச் சங்கீதத்தில் அவருக்கு அதிகப்பிரியமே இல்லை. காலையில் துயிலெழுந்து மாலை இளைப்பாறும் வரை செய்யுங் கடமைகளில் ஈடுபட்டு அதில் காலங்கழிப்பதே சங்கீதமெனச் சிறப்பாக எண்ணினர். செவிசங்கீதத்தில் ஒருவன் அதிகமாய் சாய்ந்துள்ளதைக்கண்டு அவன் எதுதான் சகத்தில்செய்ய அஞ்சான் எனச் சொல்லியுளார். அவர் வாழ்ந்த காலத்தில் நிலவியிருந்த செவிச் சங்கீதத்தைமுதலில் சீர்திருத்தும் செயலிலேயே ஈடுபட்டிருந்தார். சங்

கிதம் சிற்றின்பத்தைச் சிறப்பித்து, சித்தத்தைச் சீற் குலைத்து, கொலைகளவு செய்யவும் தூண்டி, பச்சாதாபத்தைப் பாதித்து மாந்தர்களின் மதியை இழக்கச்செய்து வன்மையை வீழ்த்தி மனோ ஆவேசத்தை யுண்டுபண்ணு மென்பதே அவரின் எண்ணமென அவரின் சிலமொழிகளினின்று விளங்கு கின்றது. அதை வாசகர்களுக்கு விளக்கமாய் அறிவிக்க சூட்சமத்தை ஒருவாறு அடியில் ஆராய்ந்துளோம்.

சங்கீதத்திற்குப் பிறகு அவர் மொழிகளைப்பற்றி மேன் மையாக மொழிந்துளார். மொழி மாந்தர்களையே விளக்குகின் றதென அவர் அடிக்கடி வற்புறுத்தவார். மயங்கும் மொழிக ளைக்கண்டால் அவர் அதை மதியார். அங்ஙனம் மொழிபவர்க ளிடம் வெகு சாக்கிரதையாயிருத்தல் வேண்டுமென்பதே அவர் எண்ணம். அதற்கேற்ற உதாரணங்களையும் கீழே விவரித்துளோம். மாநிலத்தில் மொழியாலேயே பலர் மருண்டு, அநேக ஆபத்திற்குட்படுகின்றார்கள் என்பதைக் கண்டு, அவர் மொழியால் மருள்வதும் தீயினமென வற் புறுத்தியுளார். முகஸ்துதி புகழ்மொழியையும் அவர் கண் டித்து, பொய் மொழியைப்பற்றியும் அவர் பாங்காக விளக்கி யுளார். அதிகமாக மொழிவதையும் அவர் விரும்புவதில்லை. சொல்லும் சிறிய மொழிகளின் வண்ணம் செய்வதற்குக் கடினமாயிருக்குங்கால் வேகமாய் மொழிவதில் பயன் யாதெ ன்பார். அம்மொழிகளின் இரகசியத்தையும் யாம் கீழே விவ ரித்துளோம். அதிகமாய் மொழிவதை விட மதியை மேன் மையாக்கும் கல்வியில் ஈடுபவது குணக்குன்றின் சுபாவமெ னச் சொல்லியுளார்.

இதனுலேதான் குருநாதர் "உபவாச மிருந்து கண்கள் விழிப்பதைவிட கல்வியைக்கற்று மேற்படுவதே சிறந்தது" என்ருர்.

அற்புதலீலைகள்

ஜனங்களின் மனதைக் கவர்ந்து, அவர்களுடைய அன்பிற்கும் ஆதரவிற்கும் ஆளாகவேண்டுமென்னும் எண்ணத்துடனும், கடவுளின் ஏஜென்டென்று சொல்லுவதை நிரூபிக்கவேண்டும் என்ற நோக்கத்துடனும், பெரியார்கள் அதியற்புத அபாரச் செயல்களைப் புரிந்ததாகக் கூறுவார்கள். பாமரர்களை ஏமாற்றவேண்டி சில பெரியார்கள் இயற்கைக்கு விரோதமான அற்புதங்களைச் செய்ததாகக் கூறப்படுகிறது. உதாரணமாக:—கழி பாம்பாவது, நீர் கல்லாகிறது, மலை மாயமாவது, உயிரிழந்தோர் உயிர்பெறுவது, குருடன் பார்வையைப் பெறுவது, ஆகியவைகள். எங்ஙனம் சூரியனைப் பார்த்து விளக்கு 'உனக்கு ஒளியேது' என்ருல் சூரியன் சிரித்துச் சும்மாயிருப்பானே, எங்ஙனம் புஜபல பராக்கிரமத்திற் சிறந்த வீரனைப் பார்த்து சோனி உனக்குப் பலமேது' என்ருல் சூரன் புன்னகை செய்து கவனியாமல் இருப்பானே, அங்ஙனமே "தெய்வாம்சம் வாய்ந்த" இப்பெரியார்களைப் பார்த்துக் கடவுள் கவலைப்படுவதில்லை. அவருக்கு நிகரானவர் வருகிறவரையில் அவர் கவலைப்பட வேண்டிய தேவையுமில்லை. இவ்வித அபார அதிசய இயற்கைக்கு மாருன காரியங்களினுல் தெய்வபக்தி பரவும் என்பது' எண்ணுவதற்கு முடியாத காரியமாயிருக்கிறது. பிரபஞ்சம், அதன் இருப்புகளான சிருஷ்டியற்புதம், மனம் புத்தி, சூரியன் சந்திரன், தீ காற்று, மலை நதி, முதலானவைகள் ஈசுவர உண்மையை விளக்காவிடில் இச்சிறிய அற்புதங்களா

அவரைக் காட்டப்போகிறது. இவ் வற்புதங்களால் உண்மை யொன்றும் விளையாவிட்டாலும் தீமைகளும் அதன் மூலமாக அநியாயங்களும் பல விளையும்.

ஒரு அற்புதம் பலதீமைகளை விளைவிக்கும். இயேசு கிறிஸ்து, பல அற்புதங்களைச் செய்தாராம். குருடருக் குக் கண் அளித்தாராம், ஜலத்தை மதுபானம் செய்தா ராம், அத்திமரத்தை மொழியால் எரித்தாராம். இவைகளைப் பற்றி நாம் ஒன்றும் சொல்ல விரும்ப வில்லையாயினும், அவருக்குப்பின் தோன்றிய போப், வருடா வருடம் பல நூற்றாண்டுகள் வரை அற்புதங்களைச் செய்து, அவரின் சிஷ்யர்கள் ஐரோப்பாவை அழித்தார்கள். பிரஞ்சு அரசாங்கம், இனி இவ்வற்புதங்களைப் போப் செய்யக்கூடாது எனக் கட் டளையிட்ட பிறகே, அது ஓய்ந்தது. கிறிஸ்து, குருடனுக்குக் கண் அளித்தது எப்படியிருந்த போதிலும், அவரின் அற்புத சிஷ்யர்கள், ஞானக்கண் திறந்த காலிலியோ, லூதர் முதலா னவர்களைக் கொலை செய்ததை ஒருநாளும் மறக்கமுடியாது. அவர் ஜலத்தை மதுபானமாகச் செய்த மகிமையினாலேயே, அவருடைய சீடர்கள் செல்லுமிட மெல்லாம், மதுபான மய மாகவே யாக்குகின்றார்கள். நமது நாட்டில், அற்புதத்தி னால் விளையாத தீமைகள் கிடையாது. பல ஜாலங்களைக் கோவில்களில் காண்பித்து, எத்தனைக் கோடிக்கணக்கான ரூபாய்களை மஹாந்துகள், புரோகிதர்கள், சம்பாதித்து, விப சாரம் முதலியவைகளில் விரயஞ் செய்து, நாட்டை நாசஞ் செய்துளார்கள்.

சங்கீதம்—சிறந்த கலையாம்.

சங்கீதம் சரஸ்வதி அவதாரமே யாகுமாம். ஆதலால் சங்கீத சிரத்தை யற்றவன் மிருகமாம். ஈசனை அடையச்

சிறந்த மார்க்கம் சங்கீதமாம். இராவணன் தன் துன்பங்களிலிருந்து சங்கீதத்தினுலேயே நீங்கினுன். சங்கீதத்தின் பேரின்பத்தைப்போற்ருதவரும் உண்டோ? புறப்பொருள்களைக்கண்டு, அறிந்து, சித்தந்தெளிந்து, அறிவு, வலிமை, ஆனந்தம் இவைகளை யடைந்து, தரணியின் திட்டங்களைத் தெரிந்து, எங்கு முள்ளவர் பரமான்மாவே என்று வலியுறுத்துவதே பேரின்பமாகும். இதற்கு மாருகப் மனமயங்கி புறப்பொருள்களில் பாய்ந்து,சித்தஞ்சிதறி, அறிவு அழிந்து, திடமன்னியில் தவிக்கும் நிலையே சிற்றின்பமாகும். இக் குணங்களால் சங்கீதத்தைச் சற்று ஆராய்வோம்.

பேரின்பமா ! சிற்றின்பமா !

சங்கீதமென்ருல் இனிய ஓசையையே எண்ணுகின்ருேம். அது காதில்பட்ட மாத்திரத்திலேயே ஆனந்தத்தை அடைகின்ருேம். நாவின்பத்தைக் கோருகிறவனை பெருந்தீனிக்காரனெனவும், பார்வை யின்பத்தை விரும்புகிறவனை வீணன் எனவும், உருவ இன்பத்தை விரும்புகிறவனைக் காமியெனவும், உலகம் முறையே அறியும். செவி யின்பத்தை விரும்புகிறவனை என்ன வென்றழைப்பது? இக்கூட்டத்திலேயே இவனையும் சேர்க்கவேண்டும். ஏனெனில், செவியின்பத்தைக் கோருபவனுக்குப் புறப்பொருள்களில் நாளடைவில் ஆசை அதிகம் ஏற்படும். முன் கூறின இன்பங்கள் உணவு, உருவம், உடல் முதலியவைகளை மயக்கினுல் ஒலியின்பம் காதை இழுக்கிறது. நாவின்பம் விருத்தி யாகுமேயானும் உடல் மறைந்து, உயிர் குறையும். கண்களால் காட்சியின் களிப்பையும் நாவினுல் பொருளின் உருசியையும், சரீரத்தினுல் உடலின் இன்பத்தையும், அடைகின்ருேம்.

சங்கீதப் பிரியர்களுக்கு அழகு, ஆகாரம், உடை, முதலியவைகளில் ஆசை அதிக முண்டு. இவ்வுண்மையை அறிந்த கன்பூஷன் தன் காலத்து அரசனைச் நடனப் பித்தனென அறிந்து அவனை எச்சரித்தார். அவன் அதைக் கவனிக்காமலிருக்கவே, அவனை விட்டு விலகினர். சில காலத்திற்கெல்லாம், அந்நிய நாட்டரசனொருவன், சங்கீதப் பெண் ஒருவளை அனுப்பி, அவனை மயக்க முயற்சித்தான். அரசனும், அவள் மயக்கத்திற்காளாகி, அரசாட்சியில் கவனஞ் செலுத்தாமல் போகவே, நாடு பாழாச்சுது.

சங்கீதப்பித்தால் சீர்குலைந்த மன்னர்கள்.

விஜய நகர அரசன் மகம்மதியர்களுடன் பெரிய யுத்தம் ஒன்று செய்யும்படி நேர்ந்தது. போர்க்களத்தில் விஜய நகர இளவரசன் சேனைத்தலைவனாயிருந்தான். பகலெல்லாம் யுத்தஞ்செய்து, இரவில் சங்கீத இன்பத்தில் மூழ்குவான். பகைவர்கள், இவ்விரகசியத்தைத்தைக்கண்டு ஒரு நாளிரவு சில பெண்மணிகளை யனுப்பி, நெடுநேரம் வரையில் அவனை சங்கீதத்தில் மயக்கி திடீரென்று படையெடுத்து சேனைகளைச் சின்னபின்னமாக்கினர்.

ஷேக்ஸ்பியர் சங்கீதம் பற்றுள்ளவனிடம் தந்திரம் உபாயம், தீமையைத் தகர்க்கும் வன்மை, முதலியன விளங்காது என்றிருப்பதுபோல் சங்கீத பித்தனைப் இவ்வரசன் தோற்றான். இனி சங்கீதத்தின் சக்தியைக் கவனிப்போம்.

சங்கீத சக்தி

சக்தி யென்பது நுண்ணிய பொருள். அதை அறிவது கடினம். போர்க்களத்தில் வாளின் வலிமையைக் காணலாம். எதிரியின் பலத்தைஅறிந்து அதன் ஆபத்தை ஊகித்து

அஞ்சாநெஞ்சத்துடனும் புத்தி சுயாதீனத்துடனும் மனம் பதராமல் முன் சென்று உயிரைக் கொல்பவனே தீரன். குடி மயக்கத்தினால் புத்தியிழந்து மனமகன்று ஆபத்தை யறியாமல் சித்தஞ் சிதைந்து உயிரை அளிக்க முன் வருபவன் தீரனுசான். புத்தியை மயக்கி ஆபத்தின் பலாபலன்களைத் தெரிவிக்காமல் முன் செல்லச் செய்வதே சங்கீதமாகும். இவ்விதமாக முன் செல்லும் தன்மை தீரமாகாது. ஏனெனில் இவ்வுற்சாகத்தில் எதிரிபலம், எதிர்ப்பின் பலம், சுய அறிவு நிதானம் முதலியவைகள் எல்லாம் மறைகின்றபடியினால் இது ஆவேசமேகுபாம். சங்கீத மயக்கத்தில் மதிமயங்கி பயத்தை அறியாமல் தீரர்களாக ஆகிறார்களேயல்லாமல் சுயம் தீரர்களாக ஆகிறதில்லை. ஐம்புலன்களின் துணை கொண்டு மனந்தெளிவதே அறிவாகும். அம் மனம் சரிவரத் தெளியவில்லையானால் அறிவு அற்றுப் போய்விடும். அறிவிற்கு அளவு கிடையாது. அதைப் பெறுவதில் பாடுபடுகிறவனுக்குக் கிடைத்த காலமெல்லாம் போதாது, ஐம்புலன்களெல்லாமும் போதாது. எந்நேரமும் இடைவிடாது அவ்வெண்ணத்தைப் பூர்த்தி செய்யும் வழியையே தேடிக்கொண்டிருக்கவேண்டும். ஈயூகுளிடு என்னும் பெரிய கணித சாஸ்திரி நடுத்தெருவில் நடந்துகொண்டேயிருக்கையில் ஏதோ ஒரு யோசனையின் பேரில் இருந்த விடத்திலேயே நின்று விட்டார். பல நாட்கள் அவ்விடத்தை விட்டகலவில்லை. நினைத்த எண்ணத்தைப்பரிபூரணம் செய்து கொள்ள வழி தெரியாமல் நின்றிருந்தார். அச்சமயத்தில் அத்தெருவிலே அவரைத் தாண்டி பல ஊர் வலங்கள் சென்றன. சங்கீதம், தாளம் முதலியவைகளுடன் கூடின அத்திருக்கூட்டம் அவரிடமும், அவரைத்தாண்டியும் சென்

றும் அவர் மனம் அதில் செல்லவில்லை. தன் மனத்திற்குத் தேவையான ஒளி தோன்றின பின்னரே அவ்விடத்தை விட்டகன்றார். அதேமாதிரி அறிவைத் தேடுகிறவர்களுக்கு சங்கீதத்தில் மனதைச் செலவழிக்கக் காலங்கிடைப்பது அரிது. ஸ்ரீகிருஷ்ணனுடைய சங்கீதத்திலும் கானத்திலும் ஏமார்ந்தவர்கள் கோபிகாஸ்திரீகளும் யாதவர்களுமே யன்னி யில் இருடிகள் முனிகள் அல்ல.

பச்சாதாபத்தைப் பாதிக்கும்

சங்கீதம் மனதைக்கரைத்து பாதகனைப் புனிதமாக்கும் என்பார்கள். இவ்வுண்மையை ஆராய்வோம். இரக்கமென்பது மானிடர்களுக்கு இயற்கையாகவே ஏற்பட்டது. கஷ்டத் திலிருந்து பாடுபடுகிறவனைக் கண்டு படித்தவர்களுடைய மன தைப் போலவே பாமரர்களுடைய மனமும் பரிதபிக்கும். தனியாய்க்காணச் சகியாத காட்சியைப் பொதுவில் கண்டால், அதன் துன்ப அனுபவத்திலிருந்து காற்றுக்கொள்ளவேண்டி மனிதர்கள் சங்கீதத்தைத் தேடுவார்கள். ரோமாபுரி தீப் பற்றி எரியுங்கால் ஜனங்களுடையவும் ஜீவ கோடிகளு டையவும் பரிதவிப்பைக் காணச்சகியாத அதன் சக்ரவர்த்தி யான நீரோ பிடில் வாசித்தானும். வேள்வியில் ஆடுமாடுகளு டைய பலியின் காட்சியிலிருந்து மனதை மாற்ற வேண்டி பிராம்மணர்கள் முதலான ருத்விக்குகள் சாமகானம் செய் வார்கள். புருஷனுடைய பிரேத தகனத்தீயில் மனைவியை ஏறுவதற்கு உதவி யளிக்கும் காட்சியைக் காண முடியாமல் அதைத்தடுக்கவேண்டியே பிரேத ஊர்வலத்துடன் சங்கீதத் திற்குத் தேவையான மேளம் தாளம் முதலானவைகளைக் கோஷம் செய்வார்கள். இவ்வித செய்கைகளினால் கவலைத்தீரு

மென்கிறவர்களுக்கு ஒரே வார்த்தை. மதுமயக்கம் எப்படி ஒருவனுடைய தேக துன்பத்தைத் தடுக்காதோ அப்படியே சங்கீதம் சங்கடத்தைத் தீர்க்காது. சங்கடம் தீர வேண்டுமானால் நற்காரியம் செய்யவேண்டும்.

வலிமையை வீழ்த்தும்

சங்கீதத்தினால் துன்ப எண்ணங்களும் அதனாலேற்படும் சோர்வு அயர்வு இவைகளும் மறைந்து மனவலிவுண்டாகும் என்கிறவர்களுக்கு ஒரே சமாதானந்தானுண்டு. சவாரி வண்டியையோ சுமையையோ இழுத்தோ தூக்கியோ களைப்படைந்த குதிரை சவுக்கடிபட்டவுடன் ஓடவாரம்பிக்கும். காரணம் அதனுடைய தேகவலிமையல்ல, சரீர சிரமம் மறைந்ததல்ல, அடியின் ஆவேசமேயாகும். சிதைவிற்குக் காரணமாயும், சிற்றின்ப சாதகமாயும், உயிரை விளக்கும் தீரத்தையளிக்காமல், அறிவை யழித்து இரக்கத்தை மாய்த்து, கவலையை மறைத்து, வலிமையை வீழ்த்தி, செவிக்கு இன்பத்தையும் அளிக்கும் சங்கீதத்தை நாடினால் ஜகம் சீரழியும் என்னும் எண்ணத்தினாலேயே சங்கீதத்தைச் சீர்திருத்த வேண்டுமென்று சீனமகானுரைத்தார்.

செவியின் சங்கீதத்தை முற்றிலும் அவர் வெறுக்கவில்லை. ஏனெனில் அதற்கேற்ற காலத்தில் அது பயனைத் தரும். உண்பதற்கேற்ற உணவுகளை எல்லாமடைந்து, உலகத்திலுள்ள சகல இன்பங்களையும் பெற்று, சுதந்திர வாழ்க்கையில் சிறப்படைந்து, வையகத்தில் வன்மையுடன் விளங்குகிறகாலத்தில் செவி கானத்தில் சந்தோஷமடையும்; உடலுக்குச்சற்று ஆறுதலை அளிக்கும்; மனமும் சற்று சாந்தியடையும்; ஆனால் உண்ண உணவன்றி சாயநிழலன்றி

அடிமை வாழ்க்கை நடத்தும் ஜனங்கள் சங்கீதத்தில் மனதைச் செலுத்தினால் உழைப்பினின்று கழண்டு, கடமைகளைக்களைந்து, கஷ்டப்படுவார்கள். நம் காலத்தில் சங்கீதத் துறையில் பெரும் பெயர் பெற்றிருக்கும் சங்கீதப் புலவர்களுடைய நிலையைக் காணலாம். இவர்கள பாமர ஜனங்களைத் திருப்பப் பாடு படுவதைக்காட்டிலும், சங்கீதத்தில் பழக்கமுள்ளவர்களையே சீர்திருத்த முயலுவது சிறந்ததாகும். சங்கீதத்தில் பழக்கமுள்ள, நமது நாட்டு நாரீமணிகள் உள்பட பலர், சிற்றின்ப வாழ்க்கைக்கு இரையாகி அவஸ்தைப் படுவதை நாம் கண்ணாரக் காண்கிறோம். நம் பெண்மக்கள் நாடுகள் பல கடந்தும் பிழைக்க வகையற்று திண்டாடுகிறார்கள். சங்கீதத்தைச் செவ்வனே கற்று அதன் வலிமையை அறிந்திருந்தால் இவர்களில் பலர் இவ்வித திக்கற்ற நிலைமையினின்றும் தப்பித்துக்கொள்ளக்கூடும். பலவாறு, பற்பல இனத்தாரிடத்தும் சாதியாரிடத்தும், பலவிதமாய் பழிவாங்கும் இத்துன்பத்தைக் கவனித்து அதற்குவேண்டிய பரிகாரம் தேடாமல் சங்கீதப்பித்தர்களாய் நாம் இருப்பது மிகவும் பரிதபிக்கத்தக்கது. செவிக்கின்பமூட்டும் சங்கீதத்தை விட்டு உண்மை கானமான ஒலியின்பத்தையறிய வேண்டுமானால் அது காந்தி சக்கரமேயாகும். மகாத்மா கன்பூஷம் எது குணங்களைப்பெருக்கி நன்மைகளைத் தருகின்றதோ அதுவே சங்கீதமென்கிறார்.

மனம்போல சங்கீதம்

அவரவர்களுடைய மனதிற்கேற்றவாறு ஒலியின் இசையில் இன்படைவதே சங்கீதமாகும். மூடவனிடம் மன்மதனைக் காணுவது போல், குணங்களுக்கேற்றவாறு மொழிச்

சேர்க்கையினுல் இன்ப மடைவதே சங்கீதம். உதாரணமாகக் காதலன் காதலியின் மறைமொழியிலும், போர்வீரன் சங் கத்தொனியின் சப்தத்திலும், 'மேற்ருட்டினர் பியாஞே பேச்சிலும், கீழ் நாட்டினர் வீணைகானத்திலும், மலைச்சாதி யினர் தாளத்திலும், ஓட்டர்கள் ஓலமிடுவதிலும், குடியர்கள் கழன்று மொழிவதிலும், சும்மாயிருப்பவர்கள் செவியின் பத்திலும், வட நாட்டினர் படபடப்பான பாட்டிலும், தென் ஞட்டினர் சிற்று அருவிபோல் பாயும் ஒலியிலும் முறையே சங்கீத ஒலியை அறிகிருர்கள். கழுதையின் கனைப்பைக் கான மெனப் போற்றி புகழ்ந்த மகான் கிரேக்க தேசத்திலிருந் தார். இவ் வெண்ணத்திஞலேயே அவர் "கழுதையின் சிறப்பு" (Nobleness of the Ass) என்னும் நூல் எழுதி யிருக்கிருர். பெயர் பெற்ற ஆங்கிலக்கவி கோல்ரிட்ஜூம் (Ode to the young Ass) கழுதையின் பிரலாபம் என்று பாடி யிருக்கிருர். இவைகளிலிருந்து நமக்கு விளங்குவது யாதெ னில் எவ்வெவ்வொலியில் மனம் செல்லுகின்றதோ அவ்வ வொலியே சங்கீதமாகும். மேதைகளின் சங்கீத, ஒலிகளா வன:—அலையோசை, காற்றசைவு, செடி வளர்ச்சி மின்னர் வெளிச்சம், இடி முழக்கம், பறவைக்கூட்டம் முதலானவை களாம். காலக்கிரமத்தில் தோன்றி மறையும் பருவங்களைக் கண்டு மயங்குவார்கள் பலர். சிலர் தர்மார்த்தகாம மோட்சம் ஆகிய இந்நான்கையும் சமயத்திற்கேற்றவாறு உபயோகித்துக் கொள்வதையே சங்கீதமென்பார்கள். சுருங்கக் கூறுமிடத்து இயற்கையாய் இலங்கும் ஒவ்வொரு செயலுமே சங்கீதமா கும். அகச்சுவாசம், புறச்சுவாசம், மேற்சுவாசம், கீழ்ச்சுவா சம் ஆகிய பல சுவாசங்களைச் சரியாய்ச்சேர்த்து செவ்வனே அப்பியசித்து அதன் பயனுகக் கண் வாய் செவி முதலான உரு

புக்களை ஒழுங்குப்படுத்தி இவைகளை மனதுடன் கலந்து கொண்டு அபசுவரங்களான அவித்தை, அவிசுவாசம், அஞ்ஞானம் குருட்டு நம்பிக்கை, பொய்ப்பக்தி முதலியவைகளிலிருந்து அகற்றி, அறிவு, ஞானம் முதலியவைகளின் உணர்வையடைந்து எங்கு அநியாயம் அக்கிரமம் அநீதி ஆகியவைகள் தோன்றுகிறதோ அதை உடல் பொருள் ஆவி ஆகிய ஏதாவதொன்றைக் கொண்டோ அல்லது மூன்றையுங் கொண்டோ அழிக்கும் போரில் முன்னணியில் சென்று பணி செய்வதே சிறந்த சங்கீதமாகும்.

மொழிச் சிறப்பு.

மானிட கோடிகளின் மனதில் மறைந்துள்ளதை விளக்கச் செய்யும் கருவியே மொழியாம். மாநிலத்தின் மன்னனும் மொழி. மொழியே அகிலாதிபதி. மொழிகளுடைய மாறுபாடான சேர்க்கை ஜனங்களை மாய்த்திருக்கின்றன. சில மொழிகள் சனங்களை மயக்கி, மகிழ்வில் மலரச்செய்து, துக்கத்தில் தோயச்செய்து சஞ்சலத்தில் சிதைத்திருக்கின்றன. சிலமொழிகள், போரில் உயிர்போகும்வரைப் புத்துயிரை அளித்து, புது நோக்கத்தை அருளி, சீவகோடியை சிறப்பிக்கும். மன்னனைப்போல் மகிழ்வை அளித்து, துறவியைப்போல் துறக்கச் செய்வதும், அம்மொழிகளே. இடிபோல் பேரிரைச்சலுடன் நம்மனதைக்கலக்கி, தென்னங் காற்றுபோல், இளஞ்சுகம் விளைவிப்பதும், இம்மொழிகளே. மின்னல்போல் தோன்றி மறையச்செய்து, கருங்கல் சிலைபோல் பதியச்செய்வதும் இம்மொழிகளே. அணையும் புகைவிளக்குப் போலிருந்து, சூரிய ஜோதிபோல் வாழ உதவியா யிருப்பதும், இம்மொழிகளே. தேயமும், சனங்

களும், முன்னேறுவதும், அழிவதும், மொழிகளாலே யாகும். நல் மொழிகள் செவிக்குக் கடினமாயிருப்பதால் அதை சனங்கள் விரும்புவதில்லை. ஆனால், மயங்கும் மொழியில் கவர்ச்சி யிருப்பதால் அதைக் கோருகிறார்கள்.

மொழியின் வலிமையிலிருந்து விலகும்படி கன்பூஷஸ் உரைத்துளார். மாரீசன் ஸ்ரீ இராமரால் அடிக்கப்பட்டு உயிரைத் துறக்குங்கால், இலட்சுமணா எனக்கூவி இறந்தான். இதை வினவியவுடன் சீதை, ஒ வென்றலரி இலட்சுமணனைக்கூவி அங்கு போய் பார்த்துவா என்றாள். ஸ்ரீஇராமனுக்கு எத்தகைய ஆபத்தும் நேராது என்று லட்சுமணன் சொன்னதிற்கு அவள் கடிந்தாள். இதனாலேயே ஸ்ரீ இலட்சுமணன், சீதையை விட்டு அகல நேர்ந்தது. அச்சமயம் இராவணன், சன்னியாசி வேடந்தரித்து, மயங்கு மொழியால் அவளை அபகரித்துச்சென்றான். இதற்குக்காரணம் மாரீசன் மொழிகளையாகும். ஸ்ரீ ராமருக்குக் கஷ்டங்கள் தோன்றியதும் ஸ்ரீ தசரதன் கைகேயிக்கு அளித்த மொழிகளாலே யாகும்.

மொழி வண்மை பெற்றவர்கள்

வாசாமகோசரமாய் மொழிந்த சர். சுரேந்தர நாதர் பொதுக் கட்சிக்கு விரோதமாய் அரசாங்கத்தாரிடம் அந்தரங்கமானார். பிரசங்கமாரி மொழியும் பாலர் என்ன கர்ச்சனை செய்தாலும் ஆபத்காலத்தில் வெகு ஜன வாக்கிற்கு விரோதமாய் நடந்தார். அன்னி பெசன்ட் அம்மையா பிரசங்கங்கள் செய்வதில்கீர்த்திவாய்ந்தவர். ஆனால் அவர் மிகவும் நெருக்கடியான நிலையில் மகாத்மாவை வசை மொழிகளால் ஆபாசப் படுத்தியதை என்றும் இத்தேசம் மறக்காது. சீநிவாச சாஸ்திரி வெள்ளையர் இராஜ்யத்திலேயே பிரசங்கமாரி

மொழிவதில் பெயர் பெற்றவர். எவ்விதத்திலும் லாயிட் ஜார்ஜுக்குக் குறைந்தவரல்லர். அவர் தேசாபிமானிகளைத் திட்டினது கணக்குக் கிடையாது. லாலாஜி அவரைத் துரோகி யென உரைத்த சமயமுண்டு. மகாத்மாகாந்தியை வசைச்சொல்லால், நாடெங்கும் வைதவரும், இப்பூமானே யாகும். இதனாலேயே குருநாதர், மயக்கு மொழி அறத்துடன் அமருவது அரிதென்றார்.

சுதந்திரத்தையே அழிக்க வந்த ஜர்மனியைச் சிதைக்கவே இந்த யுத்தம் புரிகின்றோம்; சண்டை முடிந்தவுடன் அந்த தேசங்களுக்குச் சுய நிர்ணய சுயேச்சையை அளிப்போமெனவும், உரைத்தார்கள். கன்பூஷஸ்மகான் உரைத்துள்ளது போல் மொழியில் மயங்காமல், அவர்கள் நோக்கத்தையும், முன்செயலிலிருந்து அறிந்திருப்பார்களேயானால், பிறகு நாங்கள் ஏமாந்து விட்டோம் என்பதற்கில்லாமலிருந்திருக்கும்.

மொழியால் மருண்டவர்கள்

சிலகாலத்திற்குமுன், தாழ்ந்தோர் என்போர்களில் சிலர், பள்ளன் பறையன் என்னும் பதத்தாலேயே தாங்கள், இழிமைநிலையிலிருப்பதாக எண்ணி பெருங்கிளர்ச்சி செய்து, ஆதிதிராவிடர் என்னும் பெயரை யடைந்தார்கள். அம்மொழி அவர்களை, அகிலத்தில அலங்கரிக்கும் என எண்ணினார்கள். திணையளவேனும், அதனால் அவர்கள் மேன்மை அடையாததைக்கண்டு, இப்பொழுது, ஆதி ஹிந்துக்களென அழைத்துக்கொள்ள விரும்புகின்றார்கள். இன்னும் சில நாள் சென்றால் வேறு எம்மொழியையாவது விரும்புவார்கள் போலும். பாலைவனத்திலுள்ள கானல் ஜலம் போலவே

மொழிகளாகும். ஒருவன் மேன்மையாகத் தோன்றுவதும், தாழ்மையாக நிகழ்வதும் அவன் குணங்களேயாகும். பிராம்மணன் என்னும் பதத்திற்கு ஒருகாலத்தில் அறிஞன் எனக்கருதப்பட்டது. இப்பொழுது தமிழ்நாட்டில் அது வெறுக்கப்படுகிறது. சர்க்காரின செல்லப்பிள்ளைகளுக்கும், அடிமைகளுக்குமே அம்மொழி என, சனங்கள் எண்ணுகின்றார்கள். இன்னும் சில காலத்தில், அது ஒருவேளைக் கீழ் மக்களையும் குறிக்கலாம்.

ரோஜா புஷ்பத்திற்கு, வேறு மொழியை அளித்தாலும், அதன் மணம் குன்றாது. ஊமத்தைப் பூவிற்கு ரோஜா என்னும் மொழியை அளித்தாலும், அதில் மணம் வீசாது. சுயகுணங்களாலேயே அதற்கு அம்மதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. இதை உத்தேசித்தே குருநாதர் மொழிக்குப் பின்னுள்ள செயலையும், குணத்தையும், கவனி என்றார்.

புகழ்மொழி படுகோலையே

முகலாய சக்ரவர்த்திகளும் மொழிகளினாலேயே ஏமார்ந்து, இராஜ்யங்களையுமிழந்தார்கள். போலிமொழியாயிருந்தபோதிலும், புகழ்மொழியாயிருப்பதையே அவர்கள் விரும்பினார்கள். முகஸ்துதியும் புகழ்மொழியும், தன்னைச் சுற்றி அதிகமானவுடன், உண்மையும், சத்தியமும் மறைந்து, கள்ளங்கபடச் செயல்கள் அதிகரித்து, எதிரிகள் தோன்றலானார்கள். புகழ்மொழியில் பிரியமுள்ளவனுக்குத் தன் மனதுக்குப் பிரியமற்றமொழியைக் கேட்பது கடினமாய் விடுகின்றது. தன்னிடமுள்ள குற்றங்குறைகளை எவர்களாவது சொல்வார்களானால் வெறுப்புமீறி அதற்குச்செவி சாய்க்கவும் மறுத்துவிடுவார்கள்.

பொய் மொழி—பித்தலாட்டம்.

குருநாதருக்குப் பொய்மொழியைக் கேட்கப் பிரியமில்லாமலிருப்பது மல்லாமல் அதை வெறுக்கவும் வெறுப்பார். பொருள் ஒன்றிருக்க மொழிவேறுரைப்பதே பொய் மொழியாகும். பொய் மொழி அதிகரித்தால் நாட்டில்வஞ்சனையதிகரிக்கும்.

உதாரணமாகச் சிலமொழிகளை எடுத்து ஆராய்வோம். நாடு நகரமில்லாத ஒருவனுக்கு மகாராஜா என்னும் பெயருண்டு. அவன் தன்னை அதிபதியாக எண்ணிக்கொண்டு அதற்கேற்பகொஞ்சம் பணமும்சேமிப்பான். உடனே சில சுயநலமிகள் அவனைச் சூழுவார்கள். அப்புகழ்மொழிக்குப், பண உதவியையுமளிப்பான். உடனே அவனைப்பற்றி பொய் பிரசாரமும் மலியும். பொய் பலதடவை பலரால் சொல்லப் பட்டால், உண்மைபோல் விளங்கும். பாமரர்களும், அவ்வறிவின்மையில் விழுந்து, அறியாமை பரவி போலிப்புலவர்கள், தோன்றி எங்கும் போலிமயமாகவே இருக்கும். பிறப்பதினாலேயே ஒருவன் பிராமணன் என அழைக்கப்படுவானேயானால், உண்மையான பிராமணனுக்கு மரியாதை இல்லாமல் போய் விடும்.

பாரதமக்கள் மொழிகளில் மாய்ந்துளார்கள் என ஐரோப்பியர்கள் நன்கறிந்துள்ளார்கள். பதவியில்லாப் பட்டங்களைக் கொடுப்பதே இதற்கு அத்தாட்சி யாகும். நாதர்ஷா இலட்சக்கணக்கான சனங்களைக் கொலைசெய்து, கொள்ளைகொண்டுபோன ரூபாயைக்காட்டிலும், சில ஆங்கில மொழிகளை அளித்து, அதற்கதிகமாக எடுத்துச்சொல்லுகிறார்கள் என்று மக்காலே கூறியிருக்கிறார். இப்பதவி வேட்டைக்கு நம் நாட்டினர் படாதபாடுமுண்டோ? போலிமொழி

களை எது என்று அறிவதே மானிடர்களின் முதல் தர்ம மாகும். இதனாலல்லவோ பட்டங்களைத் துறக்கவேண் டும் என்றார் காந்திமகான். இதை உணர்ந்து நம் ஜனங்கள் இருப்பார்களாக.

அதிகமாய் மொழிவது ஒரு வியாதியேயாகும். இதை சொஸ்தம் செய்வது கடினம். பேசினால் கேழ்க்கிறவன் வேண்டும். சாந்தமற்றவனே கேழ்க்கவேண்டும்.

வாயாடியின் விபரீதங்கள்

உலகத்தில் மண்ணாசை பொன்னாசை, பெண்ஆசை, என ஆசைகள் பல உண்டு. வாயாடிக்கு எங்கே பேச லாம் எங்கே பேசக் கூடாதென்பது கிடையாது. கண்ட விடங்களில் கண்டவர்களிடமெல்லாம் பேசுவான். இவை களில்லாம லிருக்கவேண்டியே யல்லவோ நாக்கைப் பந்தோ பஸ்துடன் சிருஷ்டித்திருக்கிறார்.

மௌனமாயிருக்க

ஈட்டிகள் போலுள்ள பற்கள் நாக்கிற்குக்காவல். எல்லை மீறாதே என்று அவைகள் எச்சரிக்கை செய்து கொண்டே யிருக்கின்றன. பணப் பெட்டியைத் திறந்து வைத்தால் பொருளும், பொன்னுமே திருட்டுப் போகும். ஆனால் வாயைத்திறந்து வைத்தாலோ ஆன்மாவே அகன்றுவிடும். குடியாலும் கள்ளாலும் ஏற்படும் நஷ்டம் சொற்பமே. அதிகப் பேச்சினாலோ ஆபத்து அதிகம். ஒரு விருந்து நடந்தது. பல அறிஞர்களிருந்தார்கள். எல்லோரும் பேசிக்கொண்டிருக் குங் கால், அறிஞன் ஒருவனை அணுகி, அரசரிடம் சொல்ல ஏதேனு முண்டோ என வினவியதற்கு, கள்ளுக்கடையில் மௌனமாயுள்ள ஒருவன் இருக்கிறான் எனச் சொல்லவுமென்

ளூர். ஆதலால், அறிஞர்கள் அதிகம் மொழிவதைக்குடிக் கொப்பாக எண்ணுவார்கள். குடிகாரன், கள் கடையில் கத்துவான். அதிகம் பேசுபவன், அகில மெல்லாம் பேசுவான்.

“வாய்திறவா வண்ணமெனை வைத்தாண்டார்க்கு,
என்றுரை நீ, திறவாச்சொல்லி னிசமாங்கான்!
பௌங்குனியே” என உரைத்துளார் தாயுமானுர்.

பேசிப் பேசி சமாசாரம் கிடைக்காத வாயாடி பிறரி இரகசியத்தை மொழிவதால், விஷம் போல் யாவரும் அவனை எண்ணுவார்கள். மனிதர்கள் மொழிந்து, கற்பித்தால் தேவர்கள் மௌனமாகவே கற்பிக்கின்ளூர்கள். தாயுமானவர் மௌனேபதேசகுருவே! மூலன்மரபில் வருமௌனகுருவே! என ஈசனைத்துதி செய்துளார். மௌன மிந்த நூலறிவிஞலுண்டாமோ எனவும் சொல்லியுளார். ஆனல், ஊமையான மௌன நிலை மேன்மையென உரைக்கவில்லை. அவசியமான காலத்தில் பேசவேண்டும். மர்மமொழிகளை ஆபத்துவந்த போதிலும், மொழியாமலிருப்பது, அழகு. எத்தனையோ தேசபக்தர்கள், சில நாடுகளில் கண்களைப் பிடுங்கின போதிலும், மர்மங்களைச் சொல்லாமலிருந்துளார்கள். சமயத்திற் கேற்றவாறு பேசியும், பேசாமலுமுள்ளவர்களே பெரியார்கள். இயல்பாய் எதையும் விளக்குவதே இனிய மொழியாகும். கான சுபாவமற்ற ஒருவன் ‘என் அப்பா’ என இலக்கண இலக்கியமின்றி சொல்வானே யானல், அதுவே இலக்கணமறிந்த அறிஞன், புவியிலுள்ள பொருள்கள் யாவற்றின் பிதாவான என் அப்பனே, நீயே இகபர லோக ஈசனுகும் என்று கூறுவது எத்தனை இன்பமாய்

இலங்குகின்றது. சிறுகுழந்தையின் மழலைச்சொற்கள் எவ்வளவு மகிழ்ச்சியை யளிக்கின்றது. கள்ளங்கபடமன்னியில் உழுது உண்ணும், எழுத்தறிவாசனையற்ற மக்களின் சில இயல்புமொழிகள், எத்தனை மகிழ்வையளிக்கின்றது. குருநாதர், இத்தகைய மொழிகளையே விரும்புவர்.

மொழியின் இரகசியம்

மொழியில் அதிகப்பற்றை அடைவது, உடலிலே அதிக அன்பை யடைவதுபோலாகும். அவ்வலங்காரத்தில் அதிக ஆசையை யடைவது, அழகில் மாய்வதுபோலாகும். அதிலேயே காலமெல்லாம் கழிப்பவன், ஜடப்பொருளான சிற்றின்பத்தில் தோய்ந்தவன் போலாவான். மொழிகள் என்பது மர்மத்தை விளக்கும் ஒரு சின்னமேயாகும். ஆதலால் மொழி வன்மையில் மயங்காமல், மருளும் மொழியினின்று நீங்கி அதை முடிவென மதியாமல், புகழ் மொழியின் புன்மையையும், போலி மொழியின் பொய்யையும்கண்டு, அதிகம் மொழிவதை அழித்து, மௌனமாயிருக்க முயன்று, மெதுவாய் மொழியும் சுபாவமுள்ளவனே, மனமறிந்த புருடன் என்பது குருநாதரின் முடிவு.

கண், கை, கால், முதலியவைகளை உபயோகிக்க அறிந்து மனதின் மேன்மையான நிலைகளை அநுபவிக்க இயலுவதே கல்வியாகும். மொழியில், வன்மை அதிகமடைய விரும்புகிறவன், உணவை அடைவதற்கு வன்மையற்றவனுகின்றான். குருநாதர் செய்கையில் தீரனுயிருந்து மொழியில் மௌனமாகவோ அல்லது மிதமாகவோ இரு என்றார்.

வாழ்க்கையின் நியமங்களை அறிவதே முக்தி என்றார். பிறப்பிற்கு முன் நிலை, வாழ்க்கைக்குப் பின் நிலை, சுவர்க்கம்

முதலியவைகளைப்பற்றி பேசுவதில் அவருக்குப் பிரியமே கிடையாது. இவ்வுலக வாழ்க்கையைப்பற்றி அறிவதற்கேற்ற வன்மையை நாம் அடையாதிருக்குங்கால் புறமானவைகளைப்பற்றி நமக்கு ஏன் கவலை என்பார். இப்பொழுது, இவ்வுலகிலுள்ள மானிடர்களின் நிலைகளை விட்டுப் பின் தோன்றும் நிலைகளைப்பற்றி ஏன் கவலைப்படவேண்டும்? இங்குள்ள உலகத்தை முதன்மையாக இன்புறச்செய்து, பிறகு தேவர்களைத் திருப்தி செய்யவேண்டு மென்பார். இல்வாழ்க்கையில் முன்வந்த பிறகு சுவர்க்கத்தைக் கைவசஞ் செய்ய விரும்பவேண்டும்.

நேர்மையுள்ளவர்களே நன்மையை அடைவார்கள் என்றார். பகைவனையும் நேசியென, வாய்வேதாந்தம் பேசி, செயலில் ஜடப்பொருளையும் சபித்தவர்போல் சொல்லாமல், பகைவர் துஷ்டர்களானால் தண்டித்து அவர்களிடமிருந்து நன்மையைக் கற்கவேண்டுமென்றார். நானும், ஈசனும் ஒன்றே எனச்சொல்லாமல், அவர் அறியாப்பொருள் என்று சொல்லும் அஞ்சாநெஞ்சைப் படைத்திருந்தார்.

நம் நாட்டில் திருக்குறள், பகவத்கீதை, திருவாசகம் முதலிய நூல்கள் இருக்குங்கால், இப்புதிய நூல் ஏன் வேண்டுமென சிலர் உரைக்கலாம். சத்தியமென்பது அகண்ட பொருளாகும். அதைக்காண்பதோ அரிது. அதற்கு எல்லையோ கிடையாது. ஒவ்வொரு மகானும், ஒவ்வொரு நிலையிலிருந்தே அதைக்கண்டுளார்கள். ஆனால், இச்சீன சீமான் நோக்கியுள்ள நிலையினின்று யாரும் அதைக் காணவில்லை. ஆதலால், இந்நிலையினின்றுநோக்கிய பழைய உண்மைகளைத் தமிழர்களறிய வேண்டுமெனவே இதை யெழுதலானேன். இதுவே அறநூலும் ராஜதந்திர சாஸ்

திரமும் இன்பநூலுமாகும்; கன்பூஷஸ் மகானின் மொழிகளோடு, பல மெய்ப் புருடர்களின் மொழிகளும் கலந்துள. சீனபாஷையிலிருந்து, பல பாஷைகளில், அவை பல தடவை மொழி பெயர்த்திருந்த போதிலும், இதுவரைத் தமிழில் தோன்றவில்லை. இது முக்கியமாய், பல ஆங்கில நூற்களைத் தழுவியே எழுதப்பட்டுள. மூல நூலில் சம்பாஷணை மூலமாகவும், இன்னும் பல உதாரணங்களுடனும் சொல்லியுள்ளவைகளைச் சுருங்கச்சொல்லி விளக்கமாய் எழுதியுளோம். இதனை எழுதுவதில் எனக்கு உதவியளித்த ஸ்ரீ. ஸி. கே. சுந்தரத்திற்கு எனதுவந்தனம் உரியதாகுக.

குற்றங்களைந்து குணங்கிரகிப்பது கற்றோர்க்கழகு.

குருக்ஷேத்திரம், 3-7-27 — எம். ஆர். ஜம்புநாதன்.

சீன வேதம்

முதல் அத்தியாயம்.

கலைக் கடல்—கருணைமொழி.

1. சந்ததமும், சன்மார்க்கத்திற் செல்வது சந்தோஷம்; நாடுகடந்து மனதிற்கிசைந்த நண்பர்களை நாடுவது மகிழ்ச்சி; மனித சமூகம் மதிக்காதிருந்தபோதிலும், மனம் மாறுதிருப்பது. மாட்சி.

2. அறத்தோடியைந்தவர்கள், அறிஞர்களுக்கு மாறுகச்செல்வது அரிது. ஒழுங்கின்மையை இச்சிப்பவனுக்கு, இடர் செய்பவர் இல்லாமலிரார்.

பெற்றோருக்குப் பக்தியும், பெரியாருக்குப்பணியுமே, பேராசையற்ற வாழ்க்கையின் பாதையாகும்.

3. மயக்கும் மொழியும், வசீகர வதனமும், அறத்துடன் அமருவது அரிது.

4. நண்பர் நட்பின் நேர்மையினின்று நழுவினேனோ? அவர்களுடன் நேசித்ததில், நிஜமன்னியிலிருந்தேனோ? உரைத்தவண்ணம் ஒழுகத்தவறினேனோ? எனத் தன்னைத் தினந்தோறும் சோதித்துக் கொள்ளவேண்டும்.

5. அண்டமெல்லாம் அமைந்துள்ள ஜனங்களைச் செலுத்த, ஒவ்வொரு செயல்களையும், அறம்போல் பாவித்து சிலவில் சிக்கனமாயிருந்து, அன்புடன் அவர்களை, அந்தஸ்தில் அமர்த்தவேண்டும்.

6. இளைஞர்கள், இல்லத்தில் பெற்றோர்களுக்குப் பணிந்து, புறத்தில் பெரியார்களிடம் ஐயமின்றி, மெய்யாக,

எப்பொழுதும் அன்புடன் ஒழுகி, நல்லார்களின் நட்பையே நாடவேண்டும். பிறகு ஒய்வில் ஒழுக்கக் கல்வியில் ஒழுக வேண்டும்.

7. சிற்றின்பங்களைச் சிதைத்து மெய்யொழுக்கத்தில் மனமகிழ்ந்து, சகல வன்மையையும், பெரியார்களின் பணியில் இறுத்தி, தேசத்தொண்டில் தேகத்தை யளிக்க வல்லவனே தலை நெறிஞானத் திருமகனும்.

8. ஆராய்ச்சியற்ற அறிஞனிடம் அறம் அகன்று விடும்; அவ்வறிவும் ஆழமற்றதாகும். மனோநேர்மை, முத்தி நெறி, இவைகளே மெய்யொழுக்கங்களாகும். இவ்வித குண முடையான் பொய் நண்பர்களை நாடுவதில்லை; பிழையி லிருந்து பிரிவதற்கும், பயப்படுவதில்லை.

9. காலஞ்சென்ற பெற்றோர்களின் கருத்தில் களித்து, வெகுகாலம் வரை அச்சான்றோர்களின் சிறப்பைச் சொல்வது ஜனங்களின் சிறுநெறிகளைச் செழிமையாக்குவதாம்.

10. குருநாதர் கடல்கடந்து சென்றபோதிலும், அந் நாட்டின் நிருவாக நிலையே, அவர் செவியில் ஒலிக்கும் நாத மாகும்.

11. குருநாதர் கருணாநதி; கபடங்கடந்த நெடுங் கடல்; அவர், குணக்குன்றுகையால், காணாத காட்சி களையெல்லாம் காண்கின்றார். குருநாதரின் இனிய கீதம், மாநிலத்தின் மற்றவர்களின் மொழிகளைவிட எங்ஙனம், மன மகிழ மணக்கச்செய்கின்றது!

12. தந்தையின் திருமேனி தோன்றுமளவும், அவர் தேன்மொழியையும், அவர் தேகம் தனித்துணைவனை அடைந்தவுடன், அவர் செய்த திருப்பணிகளில் போாவலை

யும் கொண்டு ஒருவருடம் வரை தந்தையின் தலைநெறியி னின்று தளராமலிருந்தவனே, திருமகனும்.

13. 'யூ' என்னும் உள்ளறிஞன் உரைத்ததாவது:— சுத்தநிலையில், சிறப்புற இலங்கும் இயற்கை நிலையே, இணை யற்றதாகும். நாட்டிய நீதிகளில், இதுவே நேர்மையான தாகும்.

14. இயல்பற்று துலங்கும் செயல் இனிமையாகாது, சுத்தநிலைக்கப்பால், சீர்விளங்கும் சுகமு முண்டோ?

15. மெய்தழைய வேண்டுமானல், மொழியுடன் மயங் காமல் முயற்சியே மறைநெறியென மதிக்கவும்.

மாசற்ற மெய்தனில் மன்றுட, களங்கம், கூச்சங்களைக் களையவும் நட்புள்ள நன்பர்களுடன், ரகசியத்தை மொழிந் தால், அவர்களை ஆதியந்தமாய் அடுக்கவும்.

16. சோற்றுச் சுவையைச் சுருக்கி, இல்லற இன் பத்தை இச்சியாமல், முயற்சியில் முன்னணி நின்று, மெய் மொழியுடன், நேர்மையான நோக்கத்தில் நுழைந்து, சுயஞ் சீர் திருத்தமமைந்தவனே, சான்றோன்.

17. ஏழ்மையுடன் தாழ்மையும், செல்வமுடன் செருக்கன்னியிலுமிருப்பது அற்புதமே! ஆனல், எளிமை யுடன் களிப்புற்று, தனத்துடன் தாழ்மையாயுள்ளவனுக்கு, அவன் இணையாகான். தொழிலாளிகள், 'அறுத்து, இராவி, செதுக்கி, வழுவழுப்பாக்கு' என்பதுபோல் மெய்ம்மொழி களை, மாசினின்று நீக்கி மறைமுகமாயுரைத்த பொழுதிலும் அமுதத்தைக் கடைந்து பருகவேண்டும்.

மானிடர்கள் என்னை மதிக்கவில்லை என நான் மன மிளைக்கவில்லை. ஆனல் அவர்களை நான் அறியவில்லை என அலறுகின்றேன்.

முதல் அத்தியாயம் முற்றிற்று.

இரண்டாவது அத்தியாயம்.

நலம் நிறைந்த நாடு—சீலம் சிறந்த சான்றோர்.

18. தர்மத்தால் தரணியை தழைக்கச் செய்பவன், பிராகசிக்கும் நட்சத்திரங்களுல் நாடியுள்ள துருவதாரகை போலாவன்.

நூல்கள் நூறுனபோதிலும்—'நீக்கமிலா நோக்கமென' அவை ஒரே நெறியாகும்.

சனங்களைச் சட்டத்தால் சிதைத்து, தண்டனையால் தண்மையாக்கினுல், அவர்கள் தண்டனைகளைத் தவிர்த்த போதிலும், இன்பமற்றுஞர்கள்.

ஓங்கிய ஒழுக்கத்துடன் உலகமாண்டால், தலைவனின் சிறந்த சுபாவமானது, ஒழுங்கை ஒளிபெறச்செய்து, நாட்டினர்களை நல்வினையில் நாணமுடன் நடத்தும்.

19. 15-வது வயதில் என் மனம் மதிமண்டலமடைந்தது; முப்பதில், நிலையானேன்; நாற்பதில், இங்குமங்கும் நிலவி ஐம்பதில், அமர நிலைகளை நோக்கினேன்: அறுபதில், செவி சாந்தமடைந்து, எழுபதில், தர்மத்தினின்று, தளராமல், மனமுடன் அணையவல்லவனுனேன்.

20. மக்கட்குரிய கடமை வளம்பெறும் வணக்கமேயாகும். அதாவது:—பெற்றோர்கள், பூத உடலில் இருக்குங்கால், புனிதமாய்ப் பணிவதும், புகழுடலைப்பெற்றவுடன், இயல்பாய் அவர்களை இலங்குவதேயாகும்.

மக்களின் அறம் :—"பாலர்கள் சுகமற்று இருக்கும் பொழுதே, பெற்றோர்கள், கவலையை அடையவேண்டும்."

*21. பெற்றோர்களுக்குப் புசிக்க அளிப்பதே மக்களின் பக்தி எனப் புகலுகின்றார்கள்! ஆனால் எது தான் உண்பதில்லை யெனலாம். ஆடுமாடுகளும் அடைகின்றன. வழிபாட்டின் வேற்றுமையிலேயே வித்தியாசமுள.

22. "ஒழுக்கமே உரமாகும்". சிறுவர்கள், அவ்வன்மையிலேயே விளங்க வேண்டும்; தினையும், தேனுமானால், திருவாளர்களுக்கு, முதன்மையாக அளிக்கவேண்டும்—இதையே மக்களின் அறமென அறையலாம்.

23. கருத்தைக் காண இயலாத கயவர் போல், சிலர் தோன்றிய போதிலும், பொறுமையுடன் புகுந்து நோக்கினால், அறிவில் தோய்ந்து, மறைந்துள்ள மாந்தராகவே விளங்குவார்கள்.

24. ஒருவனை அறிய வேண்டுமானால், அவன் செயல்களை நோக்கி, சிந்தனைகளைச் சீர்தூக்கி, எதில் சாய்ந்துளான், என்பதை அறியவேண்டும். தன்னகத்தை மறைக்க எவனால் முடியும்? உள்ளத்தை ஒளிப்பவன் யார்?

25. சென்றவைகளைச் சோதித்து காலமெல்லாம் கல்வியைக் கற்பவன், மற்றவர்களின் குருநாதனாவான்.

26. மேன்மை குறைந்த மாந்தர்கள், வன்மைவள்ளல்களின், விலங்காவார்கள்.

27. மனிதன் கடவுளின் சிற்றுருவு; கடவுள்கலைகடந்த மனிதர்.

28. சான்றோர் மொழிவது போல் "ஒழுகி ஒழுகுவதற் கிணங்கி, உரைப்பவராகும்."

29. மலர்ந்த மனமுடன், குறுகியகாட்சியற்றவர்களே கற்றோர்களாம். குறுகிய கருத்துடன், மனமிளைத்தவர்ளே, கயவர்கள்.

30. சிந்தனையற்றகல்வி, கந்தையுமளிக்காது; கல்வி யற்ற சிந்தனை காட்டிலே ஓட்டிடும்.

31. சீரற்ற சிந்தனைகளில் சாய்வது சேதமேயாகும்.

32. அறிந்ததை, அறிந்துளோமென அறிவதும், அறி யாததை, அறிந்திலோமென அறிவதும், அறிவாகும்.

33. ஆதியந்தமாய்ச் செவியுற்று, எல்லாச்சந்தேகங் களையும், சிந்தனை செய்து, அன்னியர்களைப்பற்றி அமைதி யுடன் மொழிந்து, நிந்தனைகளன்னியில் நிலவவும். நிறை வாக நோக்கி, அறிவின்மையை, யகற்றிவிடவும். அன்னி யர்களுடன், கவனமாய் நடக்கவும். அப்பொழுது, கவலை களுக்கிடமேற்படாது. உன்மொழியில் மாசும், ஒழுக்கத்தில் குழப்பமும் கலங்காது. இவைகளைச் சிறந்ததென அறிக.

34. நல்லாரை நயந்து, பொல்லாரைப் புறக்கணித் தால், நாட்டிலுள்ளோருக்குச் சந்தோஷம்; பொல்லாரைப் புகழ்ந்து, நல்லாரை இழந்தால், மாந்தர்களின் மனமிளைக் கும்.

35. தாணியைத் தூய்மையாக்க, அன்பும், அமைதி யும் தேவை. அகிலமெல்லாம் நிலவச்செய்யவும்.

36. ஜனங்களைச் சமாதானமாய்ச் சிறப்பித்து, ஆதர வையளித்தால், எங்கும் அமைதியும் அன்பும் அமரும். கற்றோர்களைக் கண்ணியமுடன் நோக்கி, கயவர்களுக்குக் கல்வியளித்தால், யாவரும் பரஸ்பரம் பிரியமுடன் வாழ் வார்கள்.

37. உற்றார் உறவினருக்கு உதவிபுரிவதே நவீனமாய் நிலவும் அரச ஊழியமாகும்.

38. "சிரத்தையன்னியிலிருப்பவன், எங்ஙனம் சிறப்புடையான் என்பதை நான் அறியவில்லை. நுகத்தடியில்லாத வண்டியையும், கடிவாளமில்லாத குதிரையும் எங்ஙனம் செலுத்துவது?

"எதிர்கால தேச நிலையைப்பற்றி அறிய இயலுமோ? தேயத்தின் புராதன மாறுதல்களையும், தீமைகளையும், நிகழும் செயல்களில் அறிகின்றோம். அங்ஙனமே, நிகழும் செயல்கள் நூறு தலைமுறைகளுக்குப் பிறகும், சமுகத்தில் விளங்கும்."

39. நன்மையைக் கண்டு, அதை நாடாமலிருப்பது பேடித்தனமாகும்.

40. சங்கீதத்தின் சில இரகசியங்கள்: நாதன் ஆலயத்தில், நாறு நடிகர்களை நாடின, நிதி நாயகனை நோக்கி, நீதிமான் அருளியதாவது:—

இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

மூன்றாவது அத்தியாயம்.

சீரழிந்தசெயல்—சிறப்பழிந்த சங்கீதம்

41. இங்ஙனங்கண்டு களிப்பவன், திடமில்லாமல் செய்யும் தீமையுண்டோ?

42. அகமொன்று எண்ணி, புறத்தில் வேறு பாயும், பாக்களின் பயன் யாது?

43. "ஒழுக்கமில்லாதவனுக்குச் உபாசனையேன்? சீலமற்றவனுக்கு சங்கீத மெதற்கு?"

44. பெரியார்கள், இப்பூவுலகை விட்டு பிரிந்தால், பக்தர்களின் பாங்கான பெரும் பணி யாதெனில்:—

45. செயற்கைச் சாற்றுக்களைவிட இயல்புடன் போற்றுவதே பெரிதாகும். மனதிலே தோய்ந்துள்ள துக்கத் தோற்றம், தரணியில் தோன்றுபவைகளுக்குத் தலைமையாகும்.

46. நாகரீக ஒழுக்கம் நாகரீகக் குழப்பத்தை விடச் சிறந்தது.

47. "கைக் கூலி யளித்து, கற்றோர்களை கைவசம் செய்ய இயலாது."

48. எப்பணிகளையும் போராட்ட மன்னியில் செய்ய வேண்டும்.

49. நூல்களின் இரகசியம் யாது?

50. நூல்களின் நடையைவிட, அதில் ஊடுருவிப்பாயும் உயிரே ஒப்பற்றதாகும்.

51. முன்னாள் நிகழ்ச்சிகளை, பின்னாள் நினைவுக்கறிய, நிலையான குறிப்புரையின்மை, குறைவே யாகும். அது

அறவின்மையின் அறிகுறியாகும். அவ்வூனமில்லையேல் ஞானம் ஞயம்படும்.

52. ஒருவர் செயலை மற்றவர் செய்வது சீர்கேடாகும்.

53. அடியார்கள் அவரவர்கள் அறத்தை அறிவது, அரசாட்சிக்கு அநுகூலமாகும்.

54. பிதுருக்கள் பூவுலகிலேயே பொருந்தியுளாரென பாவித்து, புவியின் பணிகளைச் செய்யவும். பெரியாரின் பணி புண்யமேம் யாகும்.

55. அரசனைவிட அடுப்பங்கரையை அண்டுவது இன்பமென நன்பனொருவன் நுகர, குருநாதர், தலைவனைத் தகர்த்தால் தஞ்சம் எங்கு அடைவது என்றார் ?

56. முன்னோர்களின் மதிமண்டலக் காட்சி, கல்வியை யளிக்கும்.

57. பாரிலுள்ள புனிதப் பணிகளை எல்லாம், பாங்குடன் செய்யப் பிரியப்பட வேண்டும்.

58. தனுர்வித்தையில் 'கேடகம்' முதலானவைகளில்லை. ஏனெனில் யாவரும், ஒரே வலிமையை யுடையவர்களில்லை. இதுவே பழைய நீதியாகும்.

59. ஜீவ பலி அளிப்பதைவிடச் சீவத்தொண்டே சிறந்ததாகும்.

60. இக்காலத்தில் அரசனைப் பக்தியுடன் அண்டினால், அதைப் பொய், பிழை எனவே புகலுகின்றார்கள்.

61. அரசன் மந்திரியை மரியாதையுடனும், மந்திரி அரசனை அன்புடனும் அணுகவேண்டும்.

62. பெரியாரின் பாக்கள், காமமற்ற காதலாகும்,

63. கடந்த செயல்களைப்பற்றி கவலைப்படுவதுவீணே யாகும். நடந்தவைகளைச் சிந்தனைசெய்வதும் நன்மையற்றதே

64. இலகுவாயறியப்படும் இனிய கீதமே இன்பமாகும். அவை இன்னிசையில் ஆரம்பித்து, ஒப்பற்ற ஓசைகளில் அமைந்து, இசைகளுடன் இணைந்துள்ளதாகும்.

65. உதாரகுணமற்ற உயர் பதவியும், அன்பு நீங்கிய அறச்செயலும், கவலை யொழிந்த பொய்யும் புலம்பலும் இவைகளை எந்நிலையிலிருந்துதான் நோக்குவது!

மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

நான்காவது அத்தியாயம்.

அறமமைந்தவன்—அறமழிந்தவன்

66. அறத்தின் வீதியில் அமர்ந்தவனே, அமுதத்தை அடைகின்றான். அறத்தினின்று அகன்றவன் அறிஞனோ?

ஒழுக்கமன்னியிலிருப்பவன், புழுக்கத்திலிருந்து பிரிந்த போதிலும், அந்தமாய் ஆநந்தத்தில் அமரான்; ஆனால் அறிஞன், அறத்தோடியைந்த ஆனந்தத்திலேயே அமிழ்கின்றான்.

67. வித்துவான்களே, விரும்பவும் வெறுக்கவுமருகர்கள்.

68. ஒழுக்கத்தில் உண்மையான நோக்கத்தையுடையவன், அழுக்க காதத்தினின்று அகலுகின்றான்.

பொன்னும், புகலும், பாரிலின்றோருக்குப் பிரியமாகும்; ஆனால் தந்நெறியில் நாடினாலன்றி அவை நன்மையாகாது. வறுமைமறைவு நிலையை, வையகத்தோர் வெறுக்கின்றார்கள்; சரியான சீலமன்னியில் அவைகளை சிதைக்காதே!

69. ஒழுக்கங்களிலிருந்து நழுவுபவன், அறக்கடன்களை எங்கிருந்து நிறைவேற்றுவான். அறிஞன் அரைக்கணமும் அறத்திலிருந்து அகலான். அவசரத்திலும் அதையே அடுத்து, ஆபத்திலும் அதனகத்திலேயே அமிழ்வான்.

70. அறத்தில் அவாவுடன், இன்பத்தில் துன்பமெண்ணியவனை நான் காணவில்லை.

71. அறத்தில் ஆசையுள்ளவனுக்குப் அதைவிட அமுதம் வேறு இல்லை. ஒருதினமாவது, அறத்திலேயே அமைந்து அச்சந்தவிர்த்தவனுண்டோ? அதற்கேற்றவன்மையில் குறைந்தவனையும் நான் கண்டதில்லை! நான் கண்டதில்லை!!

72. மாந்தர்களின் புறப்பணிகள், அவர்கள் அகத் தோற்றத்தை விளக்கும்; புறப்பணிகளிலிருந்து மாந்தர்களின் மனதை அறியலாம்.

73. காலையில் சத்தியத்தைச் செவியுற்றவன், மாலையில் மகிழ்வுடன், மரிக்கலாம்.

74. கந்தை, கம்புக் கூழு, இவைகளில் கூச்சமடைபவன், கல்விக்கருகனல்லன்.

75. மாநிலப் பொருள்களில், மனச்சாய்வால் மெய்ப்புருடன் மயங்குவதில்லை. அவன் சத்தியத்திலேயே சாய்ந்துளான்.

76. அறிஞன் தன் அறத்தை எண்ணி, நிதியை நாடினுல், அறிவிலி புறத்தைப் புகழ்ந்து, ஆதரவை அடைவான்.

77 பேராசையைப் பற்றுபவனுக்குப் பகைஞர்கள் பாரிலுண்டு.

78. அடக்கம், அமைதியால் அரசுபுரியும். அன்பனுக்கு இன்னல் எது? அவையன்றி ஓங்குபவனுக்கு, அவற்றுல் பயன்யாது?

79. உயர் நிலை இல்லையென உன்ன வேண்டாம்; அதற்குரிய அமுதத்தை அடுத்து வரவும். தன்னைத் தாணியில் எங்கும் தினை அளவும் அறியவில்லை எனஎண்ணவேண்டாம். மாநிலத்தில் மாந்தர்கள் அறிவதற்குரிய அருகதையை அடையவேண்டும்.

80. "மனோ நேர்மையும், மற்றவர்களை மதித்தலுமே" முத்திநெறியின் மர்மமாகும்.

81. நிறைந்தவன் நீதியையும், குறைந்தவன் கொள்ளுவதையுமே காண்பான்.

82. அறிஞனைக்கண்டால், அவனை அடைய விரும்பவும். அறிவிலியை அணுகினால், தன்னகத்தை ஆராயவும்.

83. அறத்திற்கும் மாறாகப் பெற்றோர் புகன்றால், பணிவாக அவர்களை நீதியினின்று நீங்காமலிருக்க மன்றாடி, வற்புறுத்தியபோதிலும், அதிகப்பணிவுடன் அநீதியை ஒழுகாமல் இருக்கவேண்டும்.

84. பெற்றோர்கள் பூத உடலிலிருக்குங்கால், நெடுந்தூரம் செல்லலாகாது. அவசியமானால் அவர்களுக்கு அறிவித்த பின்னர் செல்லலாம்.

85. புகலுடலையடைந்த மூன்று வருடங்கள் வரை, பெற்றோர் பாதைகளினின்று பிரியாமலிருப்பவன், மக்களறம் வாய்ந்தவன் எனலாம்.

86. பெற்றோர்களின் புனிதவாழ்க்கையைக் காலமெல்லாம் மனதில் வைக்கவேண்டும். அது ஆனந்தம், அச்சத்திற்கேதுவாகும்.

87. அனுபவிகள், மொழிய அஞ்சுவார்கள்; ஏனெனில் செயலில் சீர்குன்றுவோம் என்னும் கூச்சம், அவர்கள் காட்சியில் காண்கிறது.

88. அடக்கமுள்ளவனிடம், பிழைகள் அரிதாகும்.

89. அறிஞன், மொழிகளில் மெதுவாயும் செயலில் சடிதியாயும் இருப்பான்.

90. அறம் தன்னந்தனியாய் நிகழ்வதில்லை; அது அடுத்தவர்களிடம் நிலவும்.

91. அரசர்களிடம் அதிகப்பழக்கம் அவமானத்தை விளைவிக்கும்; சிநேகிதர்களிடம் சகசமானது வெறுப்பில் முடியும்.

நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

ஐந்தாவது அத்தியாயம்.

மாணவர்களறம்—மரகதமொழிகள்.

92. பிழையன்னியில் ஜெயில் புகுந்தவனுக்குப் பெண்ணையுமளிப்பேன்; நல்லது அரசாட்சியில் கலந்தும், கொடுங்காலாட்சியில் கஷ்டம் கொலையினின்று கடவாதவன், தன் சகோதரனின் பெண்ணை அடைய அருகனாவான்.

93. மேன்மையான மதிமண்டலத்தை, அறமன்னியில் எங்ஙனம் அடைய முடியும்?

94. மிருதியாய் மொழிபவன் மதிக்கப்படுவதில்லை. அத்தகையோனின் அறத்தை நான் அறியவில்லையாயினும், நயமான மாய மொழிகளின் பயன் யாது?

"வாயேன்! பராபரமே!" (தாயு)

ஒருமாணவனுக்கு மேன்மையான மதிப்பு அளிக்கப்பட்டபொழுது 'நான் இதற்கருகனல்லன்' எனச் சொல்லியதைச் செவியுற்று, சிறந்தவர், சந்தோஷமானார்.

95. குருநாதர்:—"என் நீதிகள் நிலவவில்லையாதலால், நான் கட்டையை எடுத்து, கடலில் மிதந்து செல்வேன்; அப்பொழுது ,'யூ" வான நீ, என்னைத் தொடரலாம்" என்றதும், அவன் இன்பமடையவே, "நீ என்னை விட, தீரத்தில் தேர்ந்தவனாயிருந்தும், அறிவை உபயோகிப்பதில்லை" என்றார்.

96. மூன்று மாணவர்களின் மேன்மையைப்பற்றி ஒருவர், குருநாதரை வினவியதற்கு, ஆயிர இரதங்களை அடைந்துள்ள அரசாங்கப் படைகளைப் பாதுகாக்க ஒருவன் அருகன், ஆனல் அறத்தைப் பற்றி யான் அறியேன் எனவும்,

மற்ருெருவன் ஆயிரங்குடும்பங்களின் தலைவனுயிருக்கத் தகுதி எனவும்; மூன்ருவன் நீதிமன்றத்தில் நலமுடன் வர வேற்க அருகன் எனவும், அவன் ஒழுக்கத்தை நான் அறியேன் எனவும், என்ருர்.

97. 'கூங்' மாணவனைக் குருநாதர்கண்டு, "நீ சிறந்த வனு அல்லது 'ஹுயு' சிறந்தவனு என்றதற்கு, அவன் ஒன்றி லிருந்து ஒன்பதையும், நான் ஒன்றிலிருந்து மற்ருென்றை யுமே அறிவேன் என்ருன். குருநாதர், "உண்மைதான். நீ அவனுக்கு இணையில்ல" என்ருர்.

98. பகலில் உறங்கும் 'சாய்ப்பூ'வைக் கண்டு, குருநா தர் கூறியதாவது :—' உளுத்த மரம், இழைப்பதற்காகாது; அழுக்குச் சுவர், வெள்ளை பூசத் தகுதியற்றது. அங்கன மிருக்குங்கால் 'யூ'வைக் கண்டிப்பதில் பயன் யாது?

99. மற்றவர்களின் விஷயத்தில் முதன்மையாக, நான் நினைத்திருந்ததாவது, அவர்கள் சொல்லுவதைச் செவியுற்று செயல்களுக்கே சந்தோஷமானேன். இப்பொழுது நான் நினைப்பதாவது:— அவர்கள் சொல்வதைக் கவனித்து, செய்வதை உற்று நோக்குவதாகும். 'யூ' வால் இம்மாறுதலே அடைந்தேன்.

100. "அறத்தில் வன்மை யடைந்தவனை நான் கண்ட தில்லை," என குருநாதர் உரைத்ததும், 'சேங்' என்பவனை ஒருவன் குறிப்பிட்டவுடன், குருநாதர், "அவன் உக்கிரத் தில் உறைந்துள்ளபடியால், அறத்தின் வன்மையை எங்ங ணம் அடைந்துள்ளவனுவன்"! என்ருர்

மற்றவர்கள் எனக்கு எதைச்செய்ய நான்விரும்பேனே; அதை நான் அவர்களுக்குச் செய்ய விரும்புவதில்லை". ஆனல் இந்நிலையை நான் இன்னும் அடையவில்லை" என்ருர்.

101. குருநாதரின் கல்வியையும், சீலத்தையும் யாவரும் செவி யுறலாம் ; ஆனல், அவரியற்கை அகத்தின்கண் உள்ள அறங்களைக் காண்பது, கடினமேயாகும்.

102. "செவியுற்றதைச்சிறப்பிப்பதற்குமுன், மற்றவைகளைச் செவியுற அஞ்சுவதே அருமையாகும்.

103. அமைதியுடன் அறிவில் அன்பு வேண்டும். தாழ்ந்தோர்களிடத்திலும் அறிவை அடைய, அச்சம் வேண்டாம். இதுவே அறிஞரின் அடையாளங்கள்.

104. மானிடர்களின் மேன்மையான நான்கு குணங்கள் யாதெனில்:—சொந்த விஷயத்தில் சிந்தனையுடனும், பெரியோர்களிடத்தில் பணிவுடனும், உலகத்தாரிடம் உபகாரமுடனும், ஜீவர்களைச் செலுத்துவதில் நீதியுடனுமிருக்க வேண்டும்.

105. பரஸ்பரம், எப்பொழுதும் ஒரேநிலையுடனிருப்பதே நட்பாகும்.

106. "திகைக்கச்செய்யும் தோற்றமும், விமரிசையான வெளிப்பார்வையும், அறிவின் எப்பாகத்தில் கலந்ததோ நான் அறியேன்."

107. 'சாங்' என்பவர் மூன்றுதடவை மந்திரி பதவியையடைந்து விலகியபோதிலும், சுக துக்க மன்னியிலிருந்தபடியால் அவரைக்குறித்து, குருநாதர், 'மனோநேர்மையானவர்' என்றார். அறத்தின் முகமென அவரை உரைக்கலாமோ" என மாணவன் வினவியபொழுது 'நான் சொல்வதற்கில்லை அறத்தின் முகமென எங்ஙன முரைக்கலாம்" ? என்றார்.

108. நன்மையென்பது, நானு நற்குணங்களையும் நாடுவதேயாகும்.

109. ஒரு செயலைச் செய்யுமுன் “மூன்றுதடவை” சிந்தனை செய்யவேண்டுமென “வென்” சொன்னதற்கு, செல்வப்பிரபு “இருதடவை” போதுமென்றார்.

110. நாட்டில் அமைதி நிலவுமானால் அது அரசனின் அறிவு எனலாம்; அந்நாடு அமைதியின்மையை அடைந்தால், அரசனின் அறியாமை என வேண்டும். அவன்போலுள்ள அறிஞன் அரிதில்லையாயினும், அவன் அறியாமைக்கடுத்தவர் அருமையாகும்.

111. அடியார்கள் அறிவில் ஆசையுடனும், அவசரமுடனு முளார்கள்; அவர்கள் அறிவோ போற்றத்தகுந்தது; ஆனால் ஆத்திரத்தை யகற்றி அப்பியாசஞ்செய்ய அறிவதில்லை.

112. தீமையில் தோயாதவர்களைத் தகர்ப்பவர்கள் தரணியில் அரிது.

113. தன்னிடம் ஒன்று இல்லாதிருக்குங்கால், மற்றவர்களிடம் கெஞ்சி அளிப்பதை, மனோ நேர்மையென நான் எங்ஙனமுரைப்பேன்?

114. புகழ்மொழி, போலி நட்பு, சுதந்திரம், அதிகமரியாதை இவைகளில், என் நண்பர்கள் நாணமடைவார்கள்.

115. இரு மாணவர்களைப் பார்த்து, சிறந்தவர் வினவியதாவது:—“உங்களின் விருப்பங்களை விளக்கவும் என்றார். இரத கஜ துரகங்களையும், ஆடையாபரணங்களையும் அடைந்து, அன்பர்களுடன் அனுபவித்து, அவர்கள் அவைகளை, அழித்தபோதிலும் துன்பம் தவிர்த்த நிலையையே நான் விரும்புகிறேன்.” என முதல் மாணவன் மொழிந்தான்.

116. மற்ெறாரு சிறுவன்:—"என் நற்குணங்களை காட்சி செய்யாமல், என் மேன்மைகளை ஆடம்பரஞ் செய்யாமலுள்ள நிலையே" என்றான்.

117. பிறகு பெரியார் புகன்றதாவது:—பெரியார்களுக்குப் பணிசெய்து, நண்பர்களுக்கு நிசமாகி, இளைஞர்களுக்கு அன்புடன் பரிபாலனஞ் செய்வதையே நான் விரும்புகிறேன்" என்றார்.

118. தன் குற்றத்தையே கண்டு, தன்னையே தாக்கிக்கொள்பவனை, நான் இதுவரைத் தரணியில் தெரிந்து கொள்ளவில்லையே?

119. குடிசைகளிலும், என்னைப் போலுள்ள களங்கமற்றவர்களைக் காணலாம்; ஆனால் என்னைப்போலக் கல்வியில் காட்சியுள்ளவர்களையோ, நான் காணவில்லை.

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆருவது அத்தியாயம்.

மாசற்றமொழி—மதிமண்டலம்.

120. சுயகாரியத்திலும், சமூக விஷயத்திலும், சகஜமாய்ச் செல்வது, செயல்களின் சிறப்பைச் சிதைப்பதாகும். சிந்தனையுடன் அவைகளைச் செய்வதே சான்ருகும்.

121. அறிவில் ஆசையுடைய மாணவன் எவன் யென மாசற்றவரை வினவியதற்கு அவர் மொழிந்ததாவது:—அறிவில் ஆசையுடைய, 'ஹுயி' இருந்தான்; அன்னியர்களிடம் அழுக்கன்னியில், செய்த பிழையை, மறுபடியும் செய்யாதவனுயுமிருந்தான். ஆனுல் அவன், அற்ப ஆயுளில் மறைந்தான். இப்பொழுது அவனைப்போல், அறிவில் ஆசையுள்ளவரை நான் காணவில்லை.

122. அறிஞன் அவசிய முள்ளவர்களுக்கு அளிக்கின்ருன்; ஆனுல் ஐசுவரியவான்களுக்கு அதிக மாக்குவதில்லை. "பெரிய நிதியுள்ளவர்கள் தங்களுக்கு அதிகமாய் வருவதை வெறுக்கலாகாது; ஏனெனில் அதைமற்றவர்களுக்கு அளித்து விடலாம்."

ஒருவருக்கும் பயனற்ற பொருள், மற்றவருக்குப் பயனை அளிக்கலாம்.

123. அறத்தை, அநேகர்களிடம் ஒரு தினமும், பலரிடம் பத்து நாட்களிலும், சிலரிடம் சில மாதங்களுமே பார்த்தேன். உலகத்தில் பெரும் பாலர்கள் ஒருவிஞடியே அதையண்டுவார்கள். அதில் சந்ததமும் சாய்ந்தவரை நான் கண்டதில்லை.

124. திடச்சித்தத்தில் சேர்ந்தவனுக்கு, அரசாங்க பதவியில், கஷ்டம் யாது! ஆராயும் தன்மை யுள்ளவன் அரசாங்க அலைகளை அஞ்சான். அதிக அறிவுள்ளவனுக்கும் எதுவும் கடினமாகாது.

125. கொடுங்கோன் மன்னனுக்கு உதவி யளிப்பதைக்காட்டிலும், கானக வாழ்க்கைச் சிறந்ததாகும்.

126. குருநாதர் கண்ணும் கண்ணீருமாய் உயிரைத் துறக்கும் ஒரு குஷ்டரோகியை அணைத்து, ஆதரவுடன் அவனுக்கு அமைதியை அளித்தார்.

127. ஏனையோர்கள் சுகம், குடிசையினின்று குறைந்த கூழையே குடித்த போதிலும், மனதிலே மேன்மையை எண்ணினால் அதுவே இன்பவாழ்க்கை யாகும்.

128. "தேவரீரின் கற்பனையில் நான் களிப்புற்று, அதற்குரிய வன்மை இன்மைக்கு வருந்துகின்றேன்." என மாணவனொருவன் மொழிந்ததர்க்கு மெய்ப்புருடர் மலர்ந்ததாவது:—

129. "வலிமை யற்றவன் வழிநடுவில் நீங்குகின்றான் ஆனால் ஆதியிலேயே வன்மைற்றவன் வரையறுத்துக்கொள்ளுவான்!

130. நீ உன்னகத்திற்கே அறிஞனாக விரும்பு; நீ, புறப்பார்வையில் புலவனாக எண்ணாதே.

131. "சுருக்குப்பாதையை நாடாதவன், செயல்களில் சீலமாவான். அவன் ஆதரவுகளையும் அணுகான்." சனங்களுக் கேற்றவாறே அரசாங்கம் அமையும்.

132. புகழ்ச்சிப் 'ருடனைவிட, பொய்யுரைப்பவனே பெரியவன்.

133. சொல்வன்மை, சுந்திரவடிவத்தில் சாய்வது சிதைவின் சின்னங்களாகும்.

134. வீட்டில் செல்ல, வாயிலைவிட சிறந்தவழி எது? மாந்தர்கள் ஏனோ இவ்வழியை விரும்புவதில்லை.

135. இயற்குணத்திற்கதிகமான செயற்கல்வி சிறந்த கணக்கனாகவும்; இயல்பு நிலைக்குக் குறைந்த பழக்கம் பட்டிக்காட்டானாகவும் விளங்குகின்றது. சுபாவத்திற்குச் சமமான சிட்சையில் சாய்வதே சாலச்சிறந்தது.

136. மெய்தழைவதற்கே மேதினியில் மாசற்றவர் மலர்கின்றார்கள். அஃதன்னியில் அவர் அண்டத்தில் அசைவதும் அரிதாகும்.

137. அறத்தை அறிபவன் அதை இச்சிப்பவனுக்கு ஈடாகான்; அதை இச்சிப்பவன் அதில் இன்ப மடைபவனுக்கு நிகராகான்.

138. அவரவர்களுக்கேற்றவாறு, கல்வியை நாடெங்கும் நிலவச்செய்வதே அறமாகும்.

139. மானிட சமூகத்திற்குக்கேற்ற கடமைகளைக்கவனமாய்ச் செய்வது, ஆவி உலகங்களைபபற்றிக் கவலைப்படாமலிருப்பதுமே அறிவாகும்." "கஷ்டங்களை முன்னதாகவே அறிந்து தன் கடமைகளில் முதன்மையாக ஈடுபடுவதே, ஒழுக்கமாகும்."

140 சிறந்தோர் ஜலத்திலும், முனிவர் மலையிலும் மகிழ்வர். சிறந்தோர் சித்தம் சஞ்சலமானால், முனிவர் மனம் அமைதியாகும். சிறந்தோர் ஜீவவாழ்க்கையைச் சுகித்தால், முனிவர் மேன்மையை நீடிக்கின்றார்கள்.

141. "மாந்தர்கள் தம்தம் நிலைக்கேற்றவாறு மாறுதலை அடைகின்றார்கள்."

142. பழைய நோக்கங்கள் மறைந்துவிட்டது; ஆனால் பழைய நாமங்களோ நிலவுகின்றன.

143. கற்றோர்களை கிணற்றண்டை அழைத்துச் செல்லலாம்; ஆனால் அதில் விழச்செய்வது கடினம். அவர்கள் இடரில் படலாம், ஆனால் அவர்கள் ஏமாறமாட்டார்கள்.

144. அதிகங்கற்று அடக்கத்தை யமைந்தவன், நந்நெறியிலிருந்து நீங்கான்.

145. சாட்சியில்லாத காலத்தில், சித்தமே சாட்சியாகும்.

146. பொன்போலுள்ள நடுநிலை ஒழுக்கம் புனிதப் பணியாகும்! அறிஞரிடமே அது அரிது!

147. சகல ஜனங்களுக்கும் செய்வகையில் சிறந்து, சமூகத்திற்கு மெய் வகையில் ஈடுபடுபவன், பரோபகாரியைவிட பெரியவனுவான். அவன் இருடியே. பரோபகாரத்தின் சின்னங்களாவன :— தான் தழைய, தாணியிலுள்ளவர்களுக்கு ஆதாவளித்து, தான் ஓங்க, மற்றவர்களை மேன்மையாக்குவது, ஒழுக்கமாகும்.

ஆருவது அத்தியாயம் முற்றிற்று.

ஏழாவது அத்தியாயம்.

குருநாதரின் ஆன்ம சரிதை.

148. குருநாதரின் குணங்கள் :— நான் நவீனமாய் ஒன்றையும் நாட்டவில்லை. நான் ஆயுதத்தைப்போலவே யுளேன். எனக்குச் சரிதைகளில் சாயவும் ஆசையுண்டு.

149. அறிவை அடைய சிந்தனையும், ஞானத்திர்க்கு விடா முயற்சியும் கற்பிக்க களைப்பின்மையும்—இவைகளில் எது என்னிடமுள ?

150. பொறிப்பயிர்ச்சியில் பராமுகம், கல்வியில் காட்சிக்குன்றி, அறிந்த அறங்களை அணுக அஞ்சுவது, தீமையினின்று திருந்த திறமின்மை—இவைகளே நான் தனிமையாயிருப்பதற்குக் காரணங்கள்.

151. குருநாதர் ஒழிந்த வேளைகளிலும் சகஜமாய் மலர்ந்த முகமுடனிருப்பார்.

152. குருநாதர் தன்னுடைய கிழத்தனத்தில், தன் மனோவலிமையின்மையை உணருகின்றார்.

153. மெய்ப்பாதையுடன் மனதை மணந்து, நன்னெறி நீதிகளை நலவாய்நாடி, அன்னியர்களுடன், அருள் அன்புடன் அணுகி, குறைகளற்ற கலைகளில் காலங் கழிக்கவும்.

154. எளிய மாணவர்களுக்குக் கல்வியைக் கற்பிக்க குருநாதர் கலங்குவதே யில்லை.

155. சிரத்தை யன்னியிலிருப்பவனுக்கு நான் சொல்வதில்லை; பெரிய பதவியில் பிரியமற்றவனுக்கு, நான் சிறிய உதவியும் அளிப்பதில்லை. நான் ஒன்றைச்சொன்னால் அதி

விருந்து அறியத்தக்கவைகளை தெளிவு பெறாதவனுக்கு, நான் கற்பிப்பது மில்லை.

156. விசனகாலத்தில், வெறுப்புடன் குறைவாகவே உண்பார், துக்கமடைந்த தினத்தில் பாடுவது மில்லை.

157. இன்ப துன்பத்தில், சமநிலையே சிறப்பாகும். நிராயுதபாணியாய் புலியைப்பற்றி, ஓடும் நதியில் நடுக்க மன்னியில் நீந்தி, துக்கத்தில் துயரம் திகைப்பன்னியிலு ள்ளவர்களைவிட, ஆபத்தில் துரிதமாய் தெளிவையடைந்து, ஜயத்தை அடைய தந்திரத்தை பற்றுபவனையே, வீரனென அழைப்பேன்.

158. பொருளைத் திரட்டுவதே நோக்கமானால் எத்தகைய தாழ்ந்த திருப்பணிகளிலும் அதைப் பெறலாம்.

159. நோய், நோன்பு, யுத்தம், இவைகளை அதிக சிந்தனையுடனேயே குருநாதர் எண்ணுவார்.

160. பாடுவதில், ஒருவன் மூன்று மாதம்உணவன்னியிலிருப்பதைக்கண்டு, சங்கீதத்தின் சிறப்பைக்குருநாதர் சிந்தனை செய்தார்.

161. அறமே, அரச மரியாதையை விட எண்ண அருமையாகும்.

162. புசிக்கப்பழைய அமுதும், பருகச்சற்றுஜலமும், தலைபைச்சாய்க்க இருகைகளும்—இவையே எனக்கு இன்பமளிக்கும். முறையற்ற மார்க்கத்தில், பொற் பொருளையும் நாட எண்ணாதே !

163. அதிக நாள் வாழ்ந்தால், என், நிறைவானகுறைகளை, நான் நலமாய் நீக்க இயலும்.

164. பாக்கள், புராணம், திருப்பணி, இம்மூன்றிலேயே குருநாதர் காலங்கழிப்பார்.

165. அதிக அறிவை யடைவதில், அவன் உணவை யும் மறந்தான். ஆநந்தத்தில் அமிழ்ந்து துன்பத்திலிருந்து தளர்ந்தான். ஆதலால், மூப்பு அணுகுவதையும் அவன் அறியவில்லை.

166. நான் இயல்பாகவே அறிவை அடையவில்லை; நான் அதை அணுகி அடைவதில் முயற்சியுள்ளவன் !

167. அதிசயம், அற்புதம், தெய்வீகம், இவைகளைப் பற்றி ஆன்ம அறிஞர் விவாதஞ் செய்யார்.

168. மூன்று நண்பர்களின் சேர்க்கை, நேர்மையை அறிய நெறியாகும். ஒருவனின் நன்மையைக் கற்று, மற்ற வனின் தீமையிலிருந்து, தான் திருந்தலாம்.

169. ஆன்மா அழியாததாகும். யார்தான் அழிக்க வல்லவர்.

170. எனக்கு இரகசியமேயில்லை. மாணவர்களுக்கு நான் அறிவிக்காதது ஒன்றுமில்லை.

171. இந்நான்கு விஷயங்களையே குருநாதக் விளக்கினார்:— "சுபாவம், சிரத்தை, ஒழுக்கம், மனோநேர்மை."

172. 173. நான் தீர்க்க தரிசியைத் தேடுவதில்லை. சிறந்த ஒழுக்க முடையவனைக் காண்பதிலேயே நான் இன் பத்தை அடைகின்றேன். அறமெல்லாம் கரை கண்டவனை நான் காணமுயலுவதில்லை. சந்ததமும் சன்மார்க்க சிந்தனை யில் சிறப்புற்றவனை நான் நாட விரும்புகின்றேன். பொருள் சூன்யமானால் அதற்கு மாறாகவும், குறைவில் நிறைவாகவும், கஷ்டத்தில் சுகமாகவும், காட்சி யளிப்பவர்களிடம் ஊக்க மேது ?

174. உணவிற்குக் கஷ்டம் நேரிடில் மீனை அருந்தவும் அஞ்சுவதில்லை. ஆனால் அதை வலையினால் பற்றுவதில்லை.

களைப்புறும் பட்சிகளையும் குறியிடார். சிலர் காரண மறியாமலே நற்காரியங்களைக் கொள்ளுகின்றார்கள். ஆனால் நானோ சிந்தனையுடன் செவியுற்று, நன்மைகளை நாடுகின்றேன். அதிகத்தை அறிந்து, சேமித்துக் கொள்ளுகின்றேன். அறிவிற் கடுத்தச் சிறப்புப்பொருள்கள் இதுவே!

175. கயவர்களின் கடந்தவைகளைப்பற்றி நமக்கு அக்கரையில்லை; ஆனால், திருந்தத்திறமை யுள்ளவனுக்குக் கற்பிக்க நான் தயங்குவதில்லை.

176. ஒழுக்கம், ஒளிந்து வேறு எங்கோ அப்பாலிருப்பதாக எண்ண வேண்டாம். அது அகத்திலேயே உள.

177. அறிஞன், வகுப்புவாதத்தில் சேரான். கோத்திரத்திலும் கலியாணஞ் செய்யான். அவன் பிழைகளை மற்றவர்கள் பார்ப்பது, அவன் அதிர்ஷ்டமென, எண்ணுவான்.

178. பாக்களில் பிரியமானால் குருநாதரும் கலந்து, கானஞ்செய்வார்.

179. பெரியாரின் சரீரத் தோற்றத்திற்கு, நாம் சமமாயிருந்தபோதிலும், அவர்களின் புனிதவாழ்க்கையை நாம் அடையவில்லை.

180. நல்லார், நீத்தார், எனவோ! நான் என்னை எங்ஙனம் அழைத்துக் கொள்வேன்! ஆனால் தளர்ச்சியற்று, அதற்கு தீவிர முயற்சியுளோன் என்னை அழைக்கலாம்! அம்முயற்சியே கடினமாகும்.

181. அறிஞன், எக்காலமும் உபாசனை செய்வதால் கஷ்டகாலத்திலும் குறிப்பிட்ட நேரங்களிலேயே அக்காட்சியை காண்பிப்பான்.

182. சிக்கனமான சிறுவழி, அடக்கமற்ற அதிகக்கிரமத்தைவிட நலமான மேன்மையாகும்.

183. அறிஞர்கள் அமைதியாயும், அடக்கமாயு முளார்கள்; தாழ்மையானவர்கள் கலக்கமும், சஞ்சலத்தையுமடைந்தவர்கள்.

184. குருநாதர் கோமலமாயிருந்தபோதிலும் கம்பீரக் காட்சியானவர்; கட்டளை அடைந்திருந்தும் நிஷ்டூரமற்றவர். வணக்கமாயிருந்தபோதிலும் சகஜமானவர்.

ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

எட்டாவது அத்தியாயம்.

அற்புதமொழி-ஆசாரம்

185. தந்தை சொன்மிக்க மந்திரமில்லை எனலாம்.

186. இயல்பற்ற மரியாதை இனிமைபற்றும், அடக்க மற்ற எச்சரிக்கை அச்சமாகவும், அமைதியில்லாத தைரியம் ஆவேசமாகவும், கட்டுப்பாடற்ற கபட மின்மை கானக சுபா வமாகவே தென்படும். மேன்மையான நிலையிலுள்ளவர், கள் தம் உற்றார் உறவினர்களுக்கு மரியாதை செய்தால் பாமரர்களும் பரஸ்பரம் பிரியமாவது வெள்ளிடைமலை.

187. உடலைப்பெற்றோர்களின் பாண்டமென சிரத்தை யுடன் கவனிக்கவும்.

188. குயில் கடைத்தினத்தில், கண்ணீருடன் கானஞ்செய்யும்; கடைக்கணத்தில் ஒருவன் சொல்வதைக் கவனிக்கவேண்டும். நேர்மையான நிலையிலுள்ளோர் கவ னிக்க வேண்டியதாவது:—தோற்றத்தில் விளங்கும் அடக்க மின்மை, அசட்டையை அகற்றவேண்டும்; சிரத்தையைச் சிறப்பித்து இன்மொழி, வேண்டும்.

189, பெற்றோ ரற்ற இளவாசனைக் காப்பதில், மெய்ப் பணிகளை சுயநலமன்னியில் செய்பவனே மாநிலத்தின் மேன்மை மாந்தன்.

190. தீரன் திறமை, தைரியத்தில் தளராதவன்; ஏனெனில் அவன் பொதிபார மாகவோ பாதை தூரமாகவே உள. ஒழுக்கத்தைப் பொதியாக அடைவது பாரமில்லையா? மரணமே முடிவாயிருக்குங்கால் அது தூரப்பயண மில் லையோ ?

191. காவியங்களில் குணங்களைக்கண்டு, சுசீல சுபாவம் சிறந்து, சமநிலையால் சீர் விளங்கவேண்டும்.

192. சனங்களைச் சிறப்பான சீலத்தில் செலுத்தலாம்; ஆனால், அதன் ஆதாரவை அறியச்செய்வது அரிது.

193. வறுமையை வெறுத்து, தீரத்தைத் தேடுபவன் பயமில்லாப்புணிகளைச் செய்கின்றான். நன்னெறியற்றவனும், மனக்கடுப்பை அடைந்தால்,அத்தகைய செயல்களையே செய்கின்றான்!

194. செருக்குடன், சகல செம்மையான சுபாவங்களிருந்தும், செழிமைக்கு வழியாது ?

195. கல்வியின் நிமித்தமே, மூன்று வருடங்களாவது ஓயாமல் கற்றவரை, நான் கண்டதில்லை.

196. சத்தியத்தில் சிரத்தையையும், வாழ்க்கையில் ஒழுக்கத்தையும், நாடுபவன், கடைவரை களைப்பன்னியில் காலங்கழிப்பான். அதிர்ச்சியுடைய அரசாங்கத்திலும், அமைதியற்ற நாட்டிலும் அவன் வசிப்பான். சட்டமும் அமைதியுமுள்ள நாட்டில், அவன் வாழ்வான்; அவை இல்லையேல், அவன் நாட்டினின்று நீங்குவான். ஒழுங்கும், ஒழுக்கமு மமைந்த நாட்டில், வறுமை கோப், வெட்கக்கேடாகும். ஒழுங்கும், ஒழுக்கமுமற்ற நாட்டில், செல்வம் சிறப்பிலிருப்பது சிதைவின் சின்னங்கள்.

197. தனக்குத்தகாத நிலைகளைப்பற்றிப் பேசுவது முறையாகாது.

198. இனிய சங்கீதத்தால் இன்பத்தேன்பாயும்.

199. ஆன்மையற்ற ஆரம்ப சூரனையும், வீரமற்ற வெதுளியையும், மெய்யற்ற மூர்க்கனையும். நண்பனாக எண்ணநாடுவதில்லை.

200. கல்விக்கு கடையில்லை என எண்ணி, அது காணு மல் போய்விடுமோ என்ற கதிக்கலக்கத்துடன், கற்க வேண்டும்.

201. மேன்மையான மன்னனின் மாட்சிமையே மாட்சிமை!

202. அவனுல் நற்செயல்கள் நிலவுகின்றன.

203. வனிதைகளேயும் வையகத்திலுள்ள யாவற்றிலும், விளங்கவைக்கவும்.

204. தான் புசிப்பதில் சிக்கனமாயிருந்தபோதிலும் பெரியோர்களுக்களிப்பதில், உதாரமாயிருக்கவும். தன் சௌகரியத்தில் சாதாரணமா யிருந்த போதிலும், மற்றவர்களின் சௌகரியத்தைச் சிறப்பாக கவனிக்கவும்.

205. தேவலோகம், ஈசன், தேவகட்டளே, துரியாதிநிலே, இவைகளேப்பற்றி குருநாதர் கூறுவது அரிது.

எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஒன்பதாவது அத்தியாயம்.

சிறந்த சொற்கள்—சீலமொழிகள்

206. ஆழ்ந்த அறிஞன், கலைக்கீர்த்தியைவிரும்பான்.

207. பழைய வழக்கத்தைவிட, புதியபணியே பெரிதாகும்.

208. ஒரு பொருளை ஆராய்வதற்கு முன், அதில் முன்னர் எண்ணியிருந்த, திட்டம், தீர்மானத்திலிருந்து தளர்ந்து கடினசித்தம், கோபமகங்காரங்களைக் களையவும்.

209. நன்மைகள் நானுநிலைகளிலும், நலமுடன் விளங்கும்.

210. தலைமைப் பதவிக்கு, தலை நெறியின் வசியில்லை. தலைமைத்தானமற்ற தாழ்ந்தோனுக்கே, தவ நெறியில் பழகத்தகுந்த நிலையாகும்.

211. பிறப்பே ஒருவனைப் பெரியவனுக்குவதில்லை; ஆனல் பொருள்களை ஆராய்ச்சிசெய்து, இகபரமெல்லாமறிய முயலுவதே பெரியாரின் குணமாகும்.

212. மலைகளும், நதிகளும், திடீரெனத் தோன்றி, பாய்வதில்லை.

213. கண்ணற்றவன், கண்கலங்கியவன், சனஊழியன்,—அறிவிலியா யிருந்தபோதிலும், அவர் அன்புடன் ஆசன மளிப்பார்.

214. குருநாதரை எத்துணை ஆராய்ந்தபோதிலும், அத்துணைக்கதிகமாகவே, விளங்குவார்.

215. குருநாதரை அறிந்தவர்கள், அறியாமையை அறிகின்ருர்கள். அவர் எங்கும் கல்வியால் கதிரோங்கச் செய்து, அன்பினுல் எங்கும் அரசு புரிகின்ருர். ஆற்றலற்ற

வனுக்கு, அவர் அமுதமாகும். அவரை முழுமையும் அறிவது, அரிதே!

216. மன்னரின் மதிப்பைவிட, மாணவரின் மரியாதையையே மதிக்கவும்.

217. பொருள்களை விற்பதில் முயற்சியுடன், மற்றவர் நாடும்வரை பொருமையுடனிருக்கவும்.

218. தாழ்ந்தவர்களிடம் வசிப்பதில் தாழ்மையாது?

219. பழைய பாக்களைத் திருத்திஅமைக்கவேண்டும்.

220. பொதுநலம், பெற்றோர்பணி, இவைகளை நன்கு செய்யவேண்டும்.

221. உலகம் ஓடும் நதியைப்போலவே ஓய்வில்லாத ஓட்டமாகும். இரவும், பகலும், இதற்கு இன்னலே இல்லை.

222. தன் மனைவியுடன் மயங்குவதுபோல், அறத்தோடிணைந்தவனே இல்லை.

223. நன்மைக்கும், நாசத்திற்கும், நாமே காரணம்.

224. சந்ததமும் கற்க விரும்புவனைக்காண, குருநாதர் களிப்புறுவர்.

225. எப்போதும் முன்னணியில் நிற்பதே வளர்ச்சி.

226. வளர்ந்து, மலராத செடியும், மலர்ந்து பழுக்காத மரமும் உள.

227. மாணவருடன் மரியாதையாயிருக்கவும். ஏனெனில், வாழ் நாட்களில் நம்மிலும் நேர்மையான நிலைகளை அவர்கள் அடையலாம். நாற்பதாகியும் நெறியற்றிருந்தால் அவன் நலமற்றவனே !

228. நியாயமான எச்சரிக்கைகளை மறுப்பவர் இரார். தன்னைச் சீர்திருத்திக்கொள்வதே சிறந்த பணியாகும். ஓயா

மல் உபதேசித்தால், உற்சாக மடையாதவரில்லை. அறத்தில் ஒழுகுவதே அமுதமாகும்.

229. சிரத்தையும், மனோ நேர்மையுமே முதன்மை யான நோக்கங்களாகும்; உன்னை விட தாழ்ந்தவர்களின் நட்புவேண்டாம். பிழையானால் திருத்துவதற் கஞ்சாதே.

230. துருப்புகளைத் தூரத்திச் செல்லலாம். ஆனால், மனோ வலிமையை மருட்டுவது மதியீனமே.

231. சகல ஒழுக்கங்களையும், ஒருவனின் சில நற் குணங்களிலிருந்தே அறிய இயலாது.

232. ஆபத்துக்காலத்திலேயே, ஆப்த நண்பனை அறி யலாம்.

233. அறிஞர்கள் சந்தேகமற்றும், ஒழுக்க முள்ளவர் கள், கவலையற்றும், அச்சமற்று முளார்கள்!

234. கல்வியிலாடும் நண்பர்கள் சத்தியத்தினிடஞ் செல்வதற்கு, துணையாவார்கள்; சத்தியத்தில் சாய்ந்துள்ள வர்களில் சிலரே நிலைத்து நிற்பார்கள்; ஆனால், ஆராய்ச்சியி லேயே ஆதரவுடனிருப்பவர்கள் அற்பமேயாகும்!

235. தீரத் தோற்றங்கள், தூரத்தைத் துறத்துகின் றன. நினைவு நிறைந்தவனுக்கு எட்டாநிலையுமுண்டோ?

ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

பத்தாவது அத்தியாயம்.

குருநாதரின் காட்சி.

236. குருநாதர், தன்கிராமத்தில், மொழிவன்மை யற்றவர் போல் காண்பர். ஆனால் சபையில், தெளிவு, துரிதம், தண்மையுடன் மொழிவர்.

237. தன்னைப்போ லுள்ளவர்களுடன்பேசும் பொழுது தைரிய மாகவும், மேன்மையானவர்களிடம் மரியாதையாககவும், தலைவரிடம் சற்று நடுங்கி நயத்தாலும், நேர்மையுடனேயே மொழிவர்.

238. அதிதிகளை அதிவினயமாய் கவனிப்பர்.

239. மேன்மையானவர்களை நல் வரவு கூறுவர்; அவர்கள் இல்லத்தை அடையுங்கால், தலையைக் குனிந்தே செல்வர். பாதையிலும், கதவினருகிலும் அவர் நிற்பதில்லை. அவர்களை நோக்கிச் செல்லுங்கால், அடக்கமாயும், ஒழுக்கமாகவுஞ் செல்வார்.

240. குருநாதரின் உடைகளாவது :— சிகப்பு வஸ்திர மணியார். கோடைகாலத்தில் மெல்லிய ஆடையை அணிந்தபோதிலும், அதை மேற் துணியாகவே அணிவர். அவரின் உடைகள் சாதாரணமாக ஒரே நிறமாகும். உழைப்பின் சௌகரியத்திற்கேற்ற குறைவான உடைகளையே அணிவர். உறக்க உடைகள் சற்று பெரியதாகவே இருக்கும். துக்கதினங்களைத்தவிர. மற்ற நாட்களில் யாவற்றையுமணிந்து கொள்வர். கருப்பு உடையை துக்க தினத்திலு மணியார். அமாவாசை தினத்தைச் சற்று அதிகமாகவே கவனிப்பர்.

241. உபவாச தினத்தில் வெண்மை உடைகளையே அணிந்து, உணவை மாற்றுவர். அவர் நிலையத்தில் தன் பீடத்தை அடிக்கடி மாற்றுவர்.

242. அவர் உணவைக் கவனிப்போம்:— அரிசி ஆகாரத்தில் அவருக்கு அவா அதிகம். பழைய அமுதை அவர் விரும்பார். கந்தம் கழன்று, நிறங்குன்றி கனி கடந்த பொருள்களைப் புசிப்பார். சீராக சமைக்காததையும், அவர் சிறப்பிப்பதில்லை. மனோ நிலை மாறுதவரையில் மதுபானத்தில் அவர் களிப்பார்.

243. இஞ்சியன்னியில் அவர் புசிப்பதில்லை. இனிய பண்டங்களையும், மூன்று தினத்திற்குப்பிறகு எறிந்து விடுவர். உண்ணும் பொழுதும், உறங்குங்காலும், அவர் மௌனமாகவே உளார். அவர் அதிகமாய் அருந்துவது காய்கனிகளே யாகும். அதில் சிலவற்றை அற்பணஞ் செய்தே உண்ணுவது வழக்கம்.

244. அவர் செம்மையாய் ஜமக்காளத்தை விரியாமல் சாய்வதில்லை.

245. பெரியோர்கள் புசித்த பின்னரே அவர் உண்பது வழக்கம். அவர்கள் செய்யும் நற்பணிகளுக்குத் துணை புரிவார்.

246. சத்துருவின் சேவகனு யிருந்தபோதிலும் அவனைச் சிறப்புடனேயே சாற்றுவார். அயலார் குணத்தை அறியுமுன் அவர் இல்லத்தில் உண்பதில்லை.

247. ஒருகால் தன்வீடுபற்றி எரிந்தும் அதன் சேதத்தைச் செவியுறுமுன், அதைஅணைக்கத்துணை புரிந்தவனுக்கு ஏதேனும் தீமை விளைந்ததோ என வினவினர்.

248. அவர் ஆலயத்தை அடைந்தபோதிலும், அதன் அகமெல்லாம் ஆராய்ந்தறிவது வழக்கம்.

249. நாதியற்ற நண்பனிருந்தால், கடைச்சடங்குகளை அவரே செய்வார்.

250. சயனதத்தில் ஒருபக்கம் சாய்ந்தே உறங்குவது வழக்கம். இல்லத்தில் இயல்புடனேயே இலங்குவார்.

251. மற்றவர்களின் துக்கக்காட்சியில். அவர் தோற்றம் மாறி, அவனிடம் அன்புடன் அணுகுவார். இடிமுழக்கத்திலும், புயற் காற்றிலும், அவர் தோற்றம் மாறும்.

252. வண்டியிலேறுங்கால் நிமிர்ந்து ஏறுவார். ஏறினதும் பின்புறம் பாரார்; படபடப்புடன் பேசார்; கைகளால் காண்பிப்பார்.

253. குருவிகளும், காலங்களின் நிலைகளைக்காணும்! அக்கணமே, மாந்தர்களுமறியவேண்டும்.

பத்தாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினொன்றாவது அத்தியாயம்

குருநாதர்—உள்ளும்புறமும்

254. புராதனத்தில் பெரியார்கள் பல பணிகளில் பிரகாசித்தபோதிலும், நிகழ்ச்சியில் நவீனர்கள். ஞான நேர்மையில் நிகரற்றுள்ளார்கள். புராதனத்தில் முற்றும் முன்னேறினவர்களை நான் பார்க்கவில்லை.

255. மாணவன், கற்பதில் குருவிற்குத் திருப்தியை அளித்து, அவருக்கு ஆதரவாய் அணுகவேண்டும்.

256. மக்களின் அன்பு, பெற்றோர்களின் மொழியால் விளங்கும்.

257. மொழிகளின் வன்மையே வன்மை! அரசாங்கம் அழிந்தாலும், மொழிகள் மறையாது.

258. அறிவில் அன்புள்ளவன் அரிது.

259. காக்கைக்குத் தன்குஞ்சே பொன்குஞ்சாகும்.

260. நேர்மையான நண்பனின் நீக்கத்தில், நாதர் மனங்கலங்கும்.

261. மனங்கலங்கிய அச்சந்தர்ப்பமொன்றில் அவருக்கு ஆற்றலை அளித்தவர்களிடம், அவர் நான் இனி எவருக்குத் துக்கமடைவேன் என்றார்.

262. ஆசானின் ஆப்தன் என, அவர்கள் அதிக விமரிசையாய் சடங்குகளைச் சிறப்பிக்கவே, குருநாதர் 'நண்பனுயிருந்தபோதிலும் அவனுக்குரிய நிலைக்கேற்றவாறே சிறப்பிக்கலாம்', என உரைத்து; "அவன் என்னைத் தந்தைபோல் எண்ணினன். நான் அவனை மகன்போல் கருத சுதந்தரமளிக்கவில்லை" என முடித்தார்.

263. வையகத்தில் வாழும் சீவர்களுக்குச் செய்யும் நம் கடமைகளை அறியாதிருக்குங்கால், விண்ணில் மறைந்துள்ள பிதுருக்களின் கடமைகளை நாம் எங்ஙனஞ் செய்வோம்? வாழ்க்கையின் நிகழ்நிலையையே அறியாதிருக்குங்கால், பின் நிலையைப்பற்றி கவலையேன்?

264. அமைதி, அடக்கம், அரும்பணி யோடமைந்த அச்சமற்றவனை அடைவது ஆனந்தம்.

265. பழையவைகளைத் திருத்துவதேபெரிது. குறைவாய்க் கூறுபவன், குறிப்புடன் செய்பவன்.

266. சீர்கடந்து செயல்களைச் செய்பவன் சீர்குலைய சும்மாயிருப்பவனுக்குச் சமானமே!

267. மாந்தரின் புன்மைகளை, புவியெல்லாம் பகிரங்கஞ் செய்வது பெரும்பணியே!

268. அற்ப அறிஞன், அறமற்றவன், அறைகுறை, அச்சமுடையானென, மாணவர் நான்கு வகையாகும்.

269. பணத்துடன் பேராசையைவிட, எளிமையுடன் களிப்பே கீர்த்திப்பெற்றது.

270. அவன், அயலான் அடுத்தவற்றை அணுகுவதில்லை. இகபர மறிந்த இவனுக்கு இரகசியமுமில்லை.

271. அழகு ஆடையினின்று சுகத்தை அறிவது அரிது.

272. குருநாதர் கயவர், கற்றோருக்கேற்றவாறே, கருமுகக்களிக்கண்களுடன் கற்பிப்பார்.

273. நிகழும் நல்வினைகளையே நயந்திடவும்.

274. அநியாயத்தினின்று அகன்ற அரசனையே அணுகவும். நேர்மையற்ற நாயகனை நாடாதே!

275. அடிமையிலாழ்ந்தவனையும், அச்சந்தவிர்த்தவனையும், அறிந்தபோதிலும், இரு நிலையுள்ளவனை எண்ணுவது எங்கனம்?

276. நண்பனென நேர்மையற்றவனுக்கு, நல் நிலையையளிப்பது அநீதியாகும்.

277. பரமறிந்தோரைப்பற்றி, பாமரர்களுடன் பழகுவதே, பெரியாரின் பெருமை. மயங்கும் மொழியுடைய மாந்தர்களை மதியாதே.

278. வயதில் முதிர்ந்தவனே, வன்மையில் மூத்தவன் என்பதற்கில்லை. மூலையில் மறைந்துளோமென மாந்தர் மயங்கவேண்டாம். மன்னன் மகிழ்ந்தால் மறைந்தவனும் மின்னுவான். அகம்போல் புறம்விளங்கும்.

பதினொன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

பன்னிரண்டாவது அத்தியாயம்

மாணவர்களின் நிலைகள்.

279. தீமையாவுந் தொலைந்து சேமச்செயலில் சிறப்பதே சுருதியாகும். நன்மை, புன்மை, என்பது நம்மகத்தின் நிலையே.

280, 281. பாரினுள்ள பெரியாரைப் பணிவதுபோல்பாலரோடும் பாங்குடன் பழக வேண்டும். தரணியின் திருத்தொண்டே திருப்பணி யெனத் தெளிபவும். அயலான் ஆத்திரத்தினின்று நீங்க, நீ, வெறுப்பதை அவர்களுக்கு விரும்பாதே !

282. அறிவிலியும் இவ்வன்மை அணுகினால் அறிஞனுவான்.

283. சொல்லில் சாந்தமமைவதே சிறந்த சீலமாகும். செயலோ, சிரமமாகையால், சாந்தமகன்று எங்ஙனம் சொல்வது ?

284. மனமறிந்தவன் மயங்கான், மருளான். குற்றமொரு சிறிதெனினுங் குறித்தறியாதவனின் மனம் சற்றும் வேறு பட்டதில்லை யாதலால், மயக்கமும், மருட்டலும், அவனை யாது செய்யும் ?

285. அண்ணன் தம்பி இல்லையென அலறித்திகைக்காதே ! உடன்பிறந்து, உற்றாருடன் உய்வது, உலக இயல்பு. ஆனால் இன்பம், இச்சையில் இசைவது நம்மிஷ்டம். அல்லும் பகலும் அனைவரிடமும், அன்பு ஆசையோடு அணுகி, அச்சந்தவிர்த்து, அருள், ஆனந்தம் நிறைந்தவனுக்கு, அண்ணன், தம்பி, என் குறை ? கள்ளங்கபடம், கடுமைகளுக்குக்

கலங்காதவனும், கத்தி முனையாலும் கூரான மொழியாலும் மருளாதவனே மனமறிந்தவன். தீமைகள், தோன்று மிடத்தையே தகர்க்கின்றன. மொழியில்மயங்காதவனே மேன்மை வாய்ந்தவன்.

286. நிறைந்த உணவு, சிறந்தசேனை, இன்பக்குடிகள், இலங்கும் நாடே நன்னாடு. நாட்டின் சேனையை சிதைத்தாலும், சேதமில்லை; உணவு குறைந்தாலும், உய்யலாம்; ஆனால் இன்பமற்ற குடிகள், துன்பமேயாகும்.

287. இயல்புடன் இலங்குவதே இணையில்லா இன்பமாகும். இந்நிலையில் இசைய இன்னல் ஏது? சிறந்த செயலும் இணையில்லா இயல்பே! இயல்பாய் இபம்புவதே இன் சொல்லாகும்.

288 பஞ்சகாலத்தில் அரசனுக்குப் பத்தி லொன்று அளிப்பதே அரிது. தாணி தவிக்குங் கால், அரசன் ஆநந்தத்தில் அமிழ்வது அநீதியாகும். மாநிலத்தாரின் செல்வமே, மன்னரின் சிறப்பாகும்.

289. மனோ நேர்மையும், மெய்நிலையுமே, மாந்தரின் மேன்மை. நந்நெறியை நாடினால், நன்மை நதிபாயும். நட்பு என்றால் சீவனை விரும்புவதாகும். பகையே சீவனை வெறுப்பதாகும். அதாவது சீவனின் சிதைவிலே இன்பம். சீவனையும், சாவையும், ஒரே காலத்தில் விரும்புவது வீணாகும். இணையற்ற இன்பமே புவியின் பொன்னாகும்.

290. அரசன், அரசனாகவும்; மந்திரி, மந்திரியாகவும்; தந்தை, தந்தையாகவும்; மகன், மகனாகவு மிருப்பதே; அரசாங்கத்தின் அறமாகும். அடி முடி யன்னில் அறத்தை அறிவது அரிது. சொல் செயலாகும்வரை சயனிப்பது சீர்கேடாகும்.

291. நீதி மந்திரத்தை நாடுவது நலமே. ஆனால் அதி னின்று நீங்கி, குறைகளைக் களைவதே கீர்த்தியாகும்.

292 ஓயாமல் ஒப்பற்றவைகளில் ஓங்கி, உள்ளும் புறமும் ஒன்றாய் உலகத்தை உய்விப்பதே அரசரின் அறமாகும்.

293. களங்கமறக்கற்று, ஆனந்த அமைதியி லாழ்ந் தவன், நந்நெறியினின்று நகருவதில்லை.

294. மனமறிந்தவன், மற்றவர்களின் நன்மைகளை நாடி, புன்மைகளைப் பார்ப்பதே இல்லை. மன மிளைத்தவனே இதற்கு மாறானவன்.

295 நந்நெறியை நாடும் நாடே நந்நாடு. அந்நந்நாட்டை நன்மையினின்று நீக்க இயலாது.

296. சிற்றின்பத்தில் சாய்ந்தவனின் சித்தம் சஞ்சல மாகும்.

297. கடுந்தண்டனை கொடுங்கோன் மன்னனின் காட்சியாகும். நன்மையை நாடும் வேந்தனுக்கு, புன்மையை எண்ணும் சனங்களிரார். அரசனைப் போலவே சனங்க ளுமாவார்கள்.

298. இயல்பாய் இலங்கி, நேர்மையாய் நிலவி, நந் நெறியை நாடி, சொல்வதைச் செவியுற்று, தரணியில் தாழ்ந் தவனெனத் தெளிந்தவனே திருநெறித் திருமகனாகும். சஞ்சலமற்று, சந்ததமும் சந்தோஷமா யுள்ளவனே சிறந் தவன்.

299. இன்பம் துன்பம், வெற்றி தோல்வி, என, எண்ணாமல் தன் கடமையில் கண்ணாயிருப்பவனே, குணத் தைக் கைப்பற்றுவன். வையகத்தின் குறைகளைக் களையு முன் தன் குற்றங்களைக் குறைப்பதே வளர்வன்மையாகும்.

தன் பிழையிலிருந்து பிரியாமல், பாரினில் உள்ளோருக்குப் புகல்வது பாங்கற்ற புத்தியாகும்.

300. மானிடகோடிகளை மெய்யன்புடன் அணுகுவதே மாசற்ற மதிமண்டலமாகும். சனசமூகத்தை செம்மையாய் அறிவதே சிறந்த சுருதியாகும். நேர்மையை நாடி, தீமையைத் தகர்ப்பதே தரணியின் தெள்ளமுதாகும். இவை சீர் விளங்கினால் நாடு சிறப்புற்றோங்கும்.

301. நிகரற்ற நீதியையும், அழிவற்ற அறிவையும், அனைவருக்கும் அருளவும். அவர்கள் வெறுப்புற்றால் வற்புறுத்தாதே!

302. அறிஞன், அறிவால் ஆப்தர்களை அடைந்து ஆராவமுதை அருந்துகின்றான்.

பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

பதின்மூன்றாவது அத்தியாயம்

மர்ம மொழிகள்.

303. சொல்லைச் செயலால் சிறப்பித்து, ஒப்பவற்று முன்னோங்க மகிழ்வதே மன்னரின் மர்மமாகும்.

304. தாழ்ந்த அதிகாரிகளை ஆழ்ந்த ஆதரவுடன் தாராளமாய்ப் பயன்படுத்தி சிறு பிழைகளைப் பாராமல் சீர் விளங்க சிறப்பித்து, தகுதியுள்ளோரை தலைமையாக்குவதே தீரமான தரணிபதியின் திறமையாகும்.

305. பொருளுக்கேற்ற பெயரில்லையேல் அதுவே போலிமொழியாகும். நாட்டின் கண் நிகழும், அப்போலி மொழிகளைப் பாழாக்குவதே முதற்பணியாகும். பொருள் ஒன்று பெயர் வேறானல், பாரிலே பொய் மலிந்திடும். ஒழுக்கங் குன்றி, உலகங் கெடும். பொய் பரவி ஒழுக்கம் ஒய்வதால், தீமைகள் தாண்டவமாடும். சமநிலைகள் சேதமாகி, சிற்றின்பங்கள் மிகுந்து, சீலமென்பது சஞ்சலமாய்விடும் ஆதலால் பொருளுக்கேற்ற பெயரும், சொல்வதற்கேற்பச் செயலும், சீர்விளங்கச் சிறந்த சுருதியாகும். அறிஞன் அசட்டையாய் எதையும் அணுகுவதில்லை.

306. அகமெல்லாமறிய அநுபவமே ஆதாரமாகும். நன்மையை நாடும் அரசனுக்கு, புன்மையைத் தேடும் சனங்களிரார். நீதி நிலவு மன்னனுக்கு அன்போடு அணுகாத அகிலமில்லை. அன்பணிந்த அரசனுக்கு துன்பமளிக்கும் சனங்களிரார்.

307. நினைவு வன்மையற்று, நிர்வாக நேர்மையற்றவனின் நெறி எந்நெறியாகும்?

308. அரசன் அறத்தை யணுகினல் அனைவரும் அவன் ஆக்ஞையன்னியிலேயே ஆடுகின்றார்கள். அவன் அறமகன்றால் அடுத்தவர்களும் புறக்கணிப்பார்கள்.

309. அகம் அழுக்கானல், புறமும் இழுக்காகும்.

310. பேராசையினின்று பிரிந்து, படிப்படியாய் பதவியைப் பற்றுவதே, பெருமையாகும்.

311. குருவாகி தன்னருளைக் கூறுமுன்னே, உருநீடுயிரின் பசியை நீக்கவேண்டும்.

312. அன்பான அரசனை யணுகினல், பன்னிரு திங்களில், தாணியில் தர்மத்தைத் தழைக்கச்செய்யலாம். வருடம் மூன்றில் வையகத்தில் இன்பத்தேன் பாயும்.

313. நாட்டின்கண் நன்மையை நூறுவருடம் நிலவச்செய்தால், மடமை மறைந்து, கடுமை குறைந்திடும்.

314. அறம் அகிலமெல்லாம் அடுக்க, அறுபதில் பாதி ஆண்டு தேவை—தான் திருந்தத் திறமை யற்றவன், தரணியைத் திருத்துவது எங்ஙனம்?

315 தேசத்தொண்டில் தடபுடலுடன் தந்திர மாயுளோன், தெள்ளிவாய்த் துலங்குவான். சொல்வதுபோல் செய்வதே சிறந்த மன்னனின் மகிமையாகும். தலைமை நிலை திகைப்பானல் தாழ்மையும் தெள்ளமுதமாகாது. அவைகளை அரசனறிந்தால் அகில மெல்லாம் ஆநந்தமாகும். சனங்களின் சுகதுக்கங்களைச் செவியுறாதவன், தேசத்திற்குத் தீமையை விளைவிப்பான்.

316. நந்நாட்டை அணுகியவர்கள், ஆனந்தமாயும், அகன்றவர்கள் அவாவுடனு முளார்கள்.

பதின்மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினுன்காவது அத்தியாயம்

அவசரப்படேல்.

317. சிறிய இலாபங்களைக் கவனியாதே. அவசரத்தால் ஆதாயமடைவது அரிது. சிறிய இலாபத்தை யெண்ணினல் பெரும் பயன் விளையாது.

318. தந்தை தன்மகனின் குற்றத்தையும், மகன் தன் தந்தையின் குறைவையும், மறைப்பது எந்நாட்டிலும் சகஜமானது.

319. ஒழுக்கத்தைக் குறித்து, உலகநாதர் உரைத்ததாவது:—வாழ்க்கையில் தாழ்வற்றும், சமூகத்தொண்டில் நிரமாயும், மக்களுடன் மனே நேர்மையாயிருத்தல் வேண்டும். கயவர்களின் நடுவிலும் இவைகளைக் களையாதே.

320. நாணத்திற்கு நடுக்கமுற்று, தேசத்துரோகம் தவிர்த்தவனே, தலைமைப்பதவிக்கருகன். அண்ணன் தம்பியின் அன்பையும், உறவினர்களின் உற்சாகத்தையு மடைந்தவன், உன்னத நிலையின் பாதையில் உளான்.

சீர்விளங்கும் சுதந்திர சித்தமில்லாமல், சொல்வது போல் செய்ய முயன்று, வீரத்தில் வன்மை பெற்றிருந்தாலும், சாதாரண நிலைக்கே அருகராவார்கள்.

ஆனல் நவீன புருடர்களோ, கிளிப்பிள்ளைக்கும், கிணற்றுத் தவளைக்குஞ் சமானம்.

321. கற்ருேன் கிட்டாவிடில் கோபம், கலக்கமுள்ளவர்களையே நாடுவேன். ஏனெனில் கோபத்தினிடம் காந்தம் போல் கவர்ச்சி யிருப்பதால், அவர்கள் சகவாசத்தால் வளர்ச்சி அடைவார்கள். கலக்கமுள்ளவர்கள், பகுத்தறிபவர்களானகயால் தீமையிலிருந்து தளர்வார்கள்.

322. சஞ்சலசுபாவம் எச்சீலத்தையும் சீரழிக்கும். அங்குமிங்கும் அலையும் அறம் அவமானத்தையே விளைவிக்கும். சஞ்சல சுபாவம், சித்தத்தைச் சிதைக்கும்.

323. நல்லோன் நண்பனுகவே யுளான்—அதிக சகஜத்துடன் பழகுவதில்லை. பொல்லான், அதிகமாகப்பழகி, நட்புனின்றும் நீங்குகின்றான்.

324. பெரியாரால் புகழப்பட்டு, சிறியோரால் இகழப்படுபவனே, இணையில்லா வள்ளல்.

325. பெரியாருக்குப்பணிபுரிய சிறிதும் கஷ்டமில்லை. ஆயினும், அதனால் இன்பமளிப்பது அரிது. இன்பத்தையும் நிலை தவரிச் செய்தால் இன்புறார்கள்.

326. சிறியோர்களுக்குப் பணிவிடை செய்வது சுலபமாகாது. ஆனால் அவர்களைச் சடிதியில் சந்தோஷமாக்கலாம். துன்மார்க்கத்திலும், அவருக்கு இன்பத்தை அளித்தாலும் அவர் ஆனந்தமடைவார். அவர் அகிலத்திலுள்ள பாமரர்களும் பெரும் பதவிக்கருகரென எண்ணுவார்.

327. பெரியோர் படாடோபமற்று பணிவுடனுளார்கள். ஆனல் சிறியார் சிறப்புக்காட்டின் சஞ்சலமுள்ளவர்கள்.

328. நீதி நிலை நெறியும், கற்குநிலை குணமும், வாய் திறவா வாழ்க்கையும், சாந்தச் சொல்வன்மையும், வாய்ந்தவர்கள் அறத்திலிருந்து அதிகமாக நீங்குவதில்லை.

329. சத்தியத்தில் சிரத்தையும், சொல்லில் சோதியுடன், காருண்யகாட்சி யமைந்தவனே கற்றோன்.

330. ஏழு ஆண்டு பயிற்சிபெற்றால், பயம் பிரிந்த பெரும் வீர ராகலாம்.

331. பயிற்சியற்ற பிரஜைகளைப் போருக்கனுப்புவது படுகொலையாகும்.

பதினான்காவது அத்தியாயம் முற்றிற்று.

பதினைந்தாவது அத்தியாயம்

அரசாங்க அமைப்பு.

332. சிறந்த செங்கோலிலும், கொடுங்கோலாட்சியிலும், சம்பளத்திலேயே சிறப்பாகச் சாய்வது, சீலமழிந்தவனின் சுபாவம்.

333. ஆசை, ஆடம்பரம், அகங்காரம், அற்பமனம், இவைகளிலிருந்து நீங்குவதுஅறம்எனலாமோ? இவைகளைக் கடினமென வெண்ணலாம். ஆனால் அறத்தைப்பற்றியோ நான் அறியேன்.

334. இன்பத்தை விரும்பும் அறிஞன், அறிஞன் என்பதற்கு அருகனாகான்.

335. சட்டமும், ஒழுங்கும், நாட்டில் நிலவினால், வீரமொழியைப் புகன்று தீரச் செயலைச் செய்யலாம்; ஆனால் சட்டமும் ஒழுங்கும் சிதைந்தால், தீரச்செயலையே செய்து, மொழியில் அமைதிவேண்டும்.

336. நல்லவர் நன்மொழியை உரைப்பது நிச்சயம்; ஆனால் நன்மொழி உரைப்பவரெல்லாம், நல்லாராகார். அறத்திலமைந்தவர் தீரமாகவே யிருப்பார், ஆனால் தீரர்களெல்லாம், அறத்திலமைந்தவர் என்பதற்கில்லை.

337. தரணியின் தொழில்களில் தலைமை யானது உழுது உண்பதே யாகும்.

338. அறத்திலிருந்து அன்பர்களைக் கண்டுளோம்; ஆனால் அறத்தை எப்பொழுதாவது அணுகிய இழிந்தோரைப் பார்க்கவில்லை.

339. மெய்தவிர்த்த தர்மமும், ஞானமகன்ற பக்திபுமுண்டோ?

340. தேசத் திருப்பணியைப்பற்றியத் திருமொழிகளை திறமையாய்த் திருத்திய பிறகே, தரணியில் தொண்டு செய்பவும்.

341. 342. எளிமையுடனிருந்து, குறைகூறுமலிருப்பது கடினம்; செல்வமாயிருந்து, செருக்கன்னியிலிருப்பது சுலபமேயாகும்.

343. பரிபூர்ண புருடன் யாரெனில், கலைமகளின் கல்வி, திரௌபதையின் திடம், இராமனின் தீரம், அர்ச்சுனனின் வீரம், தர்மரின் சுபாவங்களை அடைந்தவர்களேயே, பரிபூரணமென உரைக்கலாம்.

344. ஆனல் நவீனத்தில் இந்நிலையெல்லாம் நாடவேண்டு மென்பதில்லை. செயலுக்கு முன் சீராக சிந்தனை செய்து, சரியாய் சிறந்து சீர்விளங்குவதற்குச் சேவனையுமளித்துப் பெற முயல வேண்டும். ஆயினும் தினத்தொழிலிலிருந்து தளர வேண்டாம்.

345. அருளாளர் அவசியத்திலேயே மொழிவதாலும், சந்தர்ப்பத்திலேயே சிரிப்பதாலும், சனங்கள், அவருடன் சொல்லுவதிலும், சிரிப்பதிலும் பின் செல்வதில்லை.

346. பக்தி நெறியையும், பலவந்தமாய் பாரில் வற்புறுத்தாதே.

347. "கசடறக் கற்ருேன் கபடமற்றவனுகும்".

348. அரச ஊழியத்தைவிட, தேசத் தொண்டே திருப்பணி யாகும்.

349. பாமரப்பார்வையால் பெரியவர்களைப் பார்ப்பதரிது.

350. கல்வியைக் களங்கமறக்கற்பவன் கீர்த்திக்கலைமகனுவான்.

351. தேசத்தொண்டர்கள் தேசாதி பதியைவிட திறமை வாய்ந்தவர்கள்.

352. சிந்தை துடித்து சொல்லுபவன், சற்று குறைவாகவே செய்வான்.

353. துஷ்டர்களைத் தண்டிப்பது தர்மமே யாகும்; சந்தேக சமயத்தில், கல்விக்கழகத்தைக் கீழ்ப்படிவதே கற்றோரின் கீர்த்தியாகும்.

354. தேசத்துரோகம் தவிர்த்தவன், தீரமுடன் தேசாதிபதியுடன் போராடலாம்.

355. மெய்யோர் மேன்மையிலும், பொய்யோர் புன்மையிலும், செல்லுகின்றார்கள்.

356. ஆதியில் அகம், அறிய ஆசானை அணுகினார்கள்; இப்பொழுதோ, அயலான் காட்சிக்கு அடுத்துளார்கள்.

357. தன் குறைகளைக்குறைக்க கடினமடையும் கற்றோனே கீர்த்திக்குரியவன்.

358. பெரும்பதவியில் பற்றற்றவன், பெரிய நோக்கங்களைப் பற்றிப்பேசான்.

359. செயல் சிந்தனையினின்று, சிறந்தோன் நீங்குவதில்லை.

360. மனமறிந்தவன், மொழிவதில் குறைந்தும், செய்வதில் சிறந்தும், விளங்குவான்.

361. அறத்தை அடுத்தவரிடம் கவலை அலைகள் அணுகாது. அகில மறிஞரிடம் சஞ்சலம் ஏது? திடமான தீரனிடம் அச்சமு மில்லை.

362. பெரியோர்களைத் தாரதம்மியஞ் செய்வது பெருங் குணமாகாது.

363. அயலார் அவரை அறியவில்லையே என, அறிஞர் வருந்தார். ஆனால் அவர்களை அறியும் வண்ணம், அவரிடமில்லை யென அலறுவார்.

364. ஒருவரை வஞ்சகரெனமுதலில் எண்ணாமலிருப்பவரும், அவர் முதல் மொழியில் சந்தேகமுற்றவரும் சிறந்தவராகும்.

365. ஆனால், அந்நிகழ்ச்சி நேர்மையுடனிருப்பதரிது.

366. இங்குமங்கும் யாராய்ந்து பேசுவதில் பயன் யாது? பிடிவாத முள்ளவனே, வெறுக்கத்தகுந்தவன்.

367. அறிவிற்காக அசுவத்தை அணுகுவது அரிது.

368. 369. நட்பற்றவனிடம் நேர்மையாகவும், நல்லாருடன் நன்மையாயிருப்பதும் நீதி.

370. சிறுவரும் என் அறநெறியை அறிய வில்லை எனக்குருநாதர் கூறுவது வழக்கம்,

371. எனக்கு சுவர்க்க சிந்தனையில்லை. என் கல்வியின் குறைவால், கயவர்களையும் குறைகூறுவதில்லை. என் சித்தம் சகமனைத்தும் செல்வதால் சுவர்க்கத்தையும் சேராதோ?

372. என் சிறந்த செயலும் சீரழிந்தால் நான் சிந்தனையுறுவதில்லை. நான் பணிசெய்வதே என் கடன்.

373. புவியின் பெரியார் பாரிலிருந்தே மறைவார்கள்; தேசபக்தர் நாட்டினின்று நீங்குவதே நலமென்பார். கற்றோர் கடுங்காட்சியினின்றுங் கழலுவார். கல்வியைக் கற்றோர் கடும்பத முறையார்.

374. ஏழு இருஷிகளையே நான் இகத்தில் கண்டேன்.

375. சுகதுக்கமற்று செயலைச் செய்வதே சிறந்ததாகும்.

376. உயர்ந்தோர்கள் ஒழுங்காயிருந்தால், சீலமற்றவர்களும் சொன்னதைச் செய்வார்கள்.

377. ஒருவன் உயர்நிலையை நாட ஓய்வற்ற ஒழுக்கமுடன், அன்புகலந்து, அயலாருக்கு ஆனந்த மளிக்க வேண்டும்.

378. இளம்பருவத்தில் பணிவற்று, வளம் வன்மையில் வீரங்குன்றி, முதிர்ந்த பிறகு மறையாதவன், பயனற்றவனாவான்.

379. சான்றோரிடஞ் சேர்ந்து, சமானமாய்ச் செல்வது, அடியாரின் சீலச்சிறப்பை விட சடிதிச் சேர்க்கையையே விளக்குகின்றது.

பதினைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினாறுவது அத்தியாயம்

இகலோக இரகசியம்.

380. இராஜ தந்திரத்தைவிட இராஜ நிர்வாகமே, இணையற்ற செல்வமாகும். பெரியார், பேராபத்திலும் பொறுமையுடனு முளார்கள். சிறியோர் செல்வச் சீலத்தைச் சிதைக்கின்றார்கள்.

381, பாரிலுள்ள எல்லாப் பணிகளும், நீதி நிலைகளையே நாடியுள.

382. அறத்தை அறிபவர்கள் அரிது ! அரிது ! சிறந்தோன், சொல்லாமலேயே, செயலைச் சிறப்பிப்பான்.

383. சீலம், சிரத்தையுடன் சொல்லி; மனம், மெய்யோடு மொழிந்து ; நலம், நட்பு காட்டி ; உணர்வு, உயிரோடு செய்தால் ; நாடும் காடும், நம்மை நாடும். இல்லையேல் காடும் நம்மை யழிக்கும். இவையே வாழ்க்கையின் ஜோதியாகும்.

384. சிறப்பான செங்கோலிலும், சீரழிந்த சர்க்காரிலும், கற்றோன், குத்துவாளைப்போலவே யுளான். அவன் சன்மார்க்க மன்னனிடம் சேவகஞ் செய்து, துன்மார்க்கனை தவிர்க்கின்றான்.

385. தெளிவு தாகமுள்ளோனுக்கு, தெள்ளமுத மளியாதவன் தூயவாழ்க்கையைத் தொலைப்பவனவன்; தெளிவடைய தீரமற்றவனுக்கு, தெருளளிப்பது தினையளவும் பயனில்லை.

386. திடமான தீரன், தூய்மையில் தோய்ந்தவன், அவன் அறத்தை யழிக்கும் அறிவின்மையை அணுகுவதில்லை. அன்பர்கள், அறம் ஓங்க ஆன்மாவையு மளிப்பார்கள்.

387. வீரன் தன்வாளைக்கூராய் வைத்துள்ளதுபோல், அறிஞன் சீலச்செயலில் சிறப்பாகவே இருக்கவேண்டும். அறமமைந்த அறிஞரையே அணுகவும்.

388. பழய நன்மைகளைக் கைப்பற்றி, தீமைகளைத் தகர்க்கவும்.

389. முன் நினைவற்றவன் துரிதமாய்த் துன்பத்தை அடைவான்.

390. அழகில் ஆசையாவதுபோல், அறத்தில் அன்புடனுவது அரிது.

391. உடலில் உற்சாக மாவதுபோல், ஆன்மாவில் ஆனந்தமாவது அற்புதம்.

392. அகத்திலே அதிகம் பெற்று, புறத்திலே குறைவாய் பற்றுபவன், பகைமையினின்று பிரிகின்றான்.

393. அணுப்பொருள்களின் அவசியத்தையும் அறிய விரும்பாதவன் அறிவிலி எனவே வேண்டும்.

394. நீதிநன்மையற்று, விகடத்தில் விளங்கும் வாழ்கை, வாழ்க்கையோ?

395. நீதி நியாய நிலையான நோக்கமுடன், அமைதியாய் அனுபவத்தில் அமர்ந்து, பணிவுடன் பெரும்பணிகளைச் செய்பவன் சிறந்தவன்.

396. மனமறிந்தவர், தம் தகாமைக்கே வருந்தி, அயலார் கவனிக்கவில்லையென துன்புறுவதில்லை.

397. புவியினின்று பெரியார் பரோபகாரமன்னியில் பிரிய விரும்புவதில்லை.

398. தீரர்கள், தன்னகத்திலிருந்தே துலங்குவார்கள்; தாழ்ந்தோர், அயலார் புகழ விரும்புவார்கள்.

399. சிறந்தோர், சொல்விவாதமற்றே சிறப்பாவார்கள். ஜனக்கட்சியைச் சேராமல், சமூகப் பிரியராவார்கள்.

400. மேலோர், மற்றவர்களை மொழினுயிலேயே மதிப்பதில்லை; அயலார் இழிந்த குணங்களினுலேயே அவர் மொழிவதை அவமதிப்பதில்லை.

401. அயலார், எதைச்செய்ய நீ விரும்பாயோ அதை அவர்களுக்குச் செய்யாமலிருத்தலே வாழ்க்கைத் துணையாகும்.

402. அதிகமாய்ப் புகழ்வதும், இகழ்வதும், மானிட இயல்பு.

403. ஆதியில், தாம் கஷ்டத்தில் கலந்தபோதிலும் அக்கால நிலையிலுள்ள பிறர்களுக் குதவிபுரிந்தவர்களை யான் பார்த்துளேன்.

404. போலி மொழி பெரும்பணியையும், பொருமையின்மை, பெரும் அறத்தையும் பாழாக்கும்.

405. பூவுலகம் போற்றுபவனையும் தூற்றுபவனையும், விளக்கமா யறியவும்.

406. வாழ்க்கையின் நோக்ககங்களை ஒருவன் விசாலமாக்கிக்கொள்ளலாம்; ஆனுல் நோக்கங்களே ஒருவனை நேர்மையாகச் செய்து விடாது.

407. பிழையைப்பார்த்தும், அதினின்றுபிரியாமலிருப்பதே பிழையாகும்.

408. கல்வியைக்கற்பதே சித்த சுத்தி நெறியாகும். உணவு உபவாசத்தாலில்லை.

409. அறிஞன், அறத்தையே யணுகி, அதை உயிரலும் உயர்வாக எண்ணுவான். பயனைப் பற்றுமல் பணிசெய்

தே கடன் என எளிமையில் என்னமற்று, கல்வியில் களிப் புள்ளவனுகும்.

410. மெய்யோடியலாத வாழ்வு, பொய் வாழ்வே! கற்ருேன் குணம் குன்றி, அமைதியுற்ருல் அடுத்தவரும் அவனை மதிப்பதில்லை. அன்பு, அறம், அமைதியை அடங் தும், சனங்களைச் சீர்திருத்தச் சக்தியற்றவன் சிறந்தவனு கான்.

411. சிறந்தோரின் சிறுசெயல்களில் சற்றுக்கவனக் குறைவுகள் கூடும். ஆனுல், பெரும்பணிகளில் கடுகளவு குறையுமிராது. ஆனுல் சிறியோர், சில்லறையில் சிறந்தும் பெரியவற்றில் பயந்து முளார்கள்.

412. அனலைவிட அறமானது, அகிலமெல்லாமவசியம். ஜலத்தில் சாய்ந்தவரும், அனலில் எரிந்தவருமுண்டு. ஆனுல் அறத்தில் அமிழ்ந்தவரை அறிவது அரிது.

413. கற்ருேரே குறுக்கு நின்ருலும், கல்வியைக் கற்கவும்.

414. கற்ருேன் கலக்கம் கழன்று, மதிமனக்கண்ணு லேயே, மாநில மெல்லாம் பற்றுவான்.

415. இன்ப, துன்ப, பயனை எண்ணுமல் சமூகச்சேர் வையில் சிறப்புடன் சாய்வதே, சீலம் சிறந்தசான்ருேர்க் கழகு.

416. கல்வியைக்கற்பிப்பதில், சாதி நிற வேற்றுமை கூடாது.

417. நாலு நோக்கங்களை நாடுபவர், ஒன்றிலேனும் நிலையாயிரார். அந்நாட்டில் ஒற்றுமையும் ஓடிடும்.

418. "மெழியில், தெளிவே யாவுமாகும்,

419. கண் காதற்றவன் கயவனுயினும் குருநாதர் கண்ணியமாக, கை தூக்குவார்.

420. வன்மையற்றவன் கண்ணற்ற கயவனுகும், நன்மையுமடையான். நிகழில் நேர்மை யற்றவனுக்கு எதிரில் நஷ்டமே விளையும். விருப்பத்தை விளக்காமல், சாடையாய்ச் சொல்லுபவன் சிறந்தவனுகான். சமத்துவமாய் ஜனங்களைச் செலுத்துபவனே சிறந்த மன்னனுகும்.

ஜனங்களின் எளிமையைவிட எண்ணத்தையே மதிக்க வேண்டும்.

பதினுருவது அத்தியாயம் முற்றிற்று.

பதினேழாவது அத்தியாயம்.

மாநிலத்தின் மர்மம்.

421. நேர்மை நிலவும் நாட்டில் சட்ட திட்டங்கள், மன்னனிடமிருந்தே மலரும். நேர்மை நழுவிய நாட்டில், செல்வர்களிடமிருந்தே சட்டதிட்டங்கள் திகழும். செல்வப் பிரபுக்கள் செல்வாக்கடைந்த நாடு, சீக்கிரமாகவே சீர் குலையும். மந்திரிமயமாயுள்ள மாநிலமும் மெய்யாகவே மாய்ந்திடும். அராஜபுரியும் நாடு மூன்று தலை முறையிலேயே தளர்ந்திடும். ஒழுங்கான ஆட்சியில், மந்திரியினிட மதிகாரமிராது. நேர்மையான நாட்டில், சனங்கள் சட்டத்தைப்பற்றிச் சொல்லுவதில்லை.

422. அறம், அன்பு, அறிவுடையவனே நன்மையான நண்பன். புகழ்மொழி, போலியல்பு, மயக்கும் மொழியான். புன்மை யுள்ளவன்.

423. அறத்தை ஒழுகுவது, மேன்மையை மொழிவது, நந்நண்பனை நாடுவது, நிகரற்ற நெறிகளாகும். அங்குமிங்குமலைந்து, ஆனந்தத்தில் அமைதியற்று, ஆடம்பரத்தில் அமைவது அறிவின்மை.

424. சிறந்தோரிடஞ் சடுதியாய்ச் சொல்வதும், சொல்வதற்கு மறுமொழி அளியாதிருப்பதும், முகக்குறிப்பிற்கு மாறாக மொழிவதும், மதியீனமாகும்.

425. இளமையில் இன்பத்திலிருந்தும், பருவத்தில் பயனற்றதிலிருந்தும், மூப்பில் ஆசையினின்றும், நீங்கவும்.

426. அச்சந்தவிர்த்தவர்கள, ஈசனியல்பு பெரியார்பணி அறிஞர்மொழிகள், இவைகளுக்கு அஞ்சுகின்றார்கள்.

427. சித்த மறிந்தவன், ஜகத்திலே சிறந்தன், கசடறக்கற்றவன், சற்றுக் குறைவேயாகும். சித்த சஞ்சல மற்றவன், கற்றோனிலும் கீழானவன். கல்விகற்காக்கசடன், கீர்த்தியுற்றும் கீழ்மகனே.

428. 429. கற்றோன், காட்சியில் கவனமாய், கூர்மையான கேள்வியுடன், களிப்புக் கண்ணோடு மொழியுடன் மெய் கலந்து. செயலே சிறப்பென, சஞ்சலஞ் சிதைத்து, கோபத்தில் பயனை யெண்ணி, நன்மையிலுப், புன்மையுளதோயென அஞ்சும், அண்ணலாவான்.

430. நன்மைக்கு எல்லை இல்லை என எண்ணவும். புன்மையைப் பாரிலே எரிக்க காட்டுத் தீபோல கற்றோனுளான்.

431. சிறந்தோரின் செல்வ மொழியை சஞ்சலமற்று தன்னந்தனி நிலையில் சிந்தனை செய்வதே சிறப்பளிக்கும். ஆனால், அதன் இரகசியத்தை அறியவோ, அவ்வறத் தோடியைந்து வாழவேண்டும். இச்சிறந்தோர்களைக் காண்பதரிது.

432. மாநில மன்னனிறந்தால் மதிப்பவரோ இல்லை. மனமறிந்தவனிறந்தால், அறிஞரும் அலறுவார்கள்.

433. மகன், மாணவன் என மதிபுருடர் மதிப்பதில்லை. பாக்களைப் படியாதவனிடம் பேசிப்பயன் யாது? கல்விகற்காதவன் குணங்களை அடையான்.

434. தேயம் தர்மநெறியிலிருந்து தளருங்கால், சித்தமறிந்தவன் சும்மாயிரான். சமூகம் சஞ்சல மடையுங்கால் சிறப்புச் செயலற்றவன் சிறந்தவனாகான்.

பதினேழாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினெட்டாவது அத்தியாயம்.

பெரியாரின் இரகசியம்.

435. இயல்பில் யாவரும் ஒன்றே; செயலே சிலரைச் சிறப்பிக்கும்.

436. அதிக அறிஞனும், மிக்க அறிவிலியுமே, மாறுதலாவதில்லை.

437. செல்வமிருந்தவன் சித்தமறிந்தால் சுற்றத்தவரை சிறப்பிப்பார். சாமான்யர் சற்றுக்கற்றால் சுலபமாய் அடங்கிடுவர். ஆசையே ஒருவரை ஆபத்தினின்று நீக்கும்.

438. அன்பு, ஆசை, இயல்பு, இணக்கம், ஊக்கமே, அறத்தின் ஐவகை நிலைகள். அன்பினால் அகந்தையகன்று, ஆசையால் அச்சந்தவிர்த்து, இயல்பால் இத்துடன் இயைந்து, இணையில்லா இன்பத்தை இன்பத்தாலருந்தி, ஊக்கத்தால் உலகத்தை வென்று அன்பால் அகிலத்தையே அடையலாம்.

439. புன்மையில் பாய்ந்தவன் பந்துவானாலும் பிரிந்து விடவும்.

440. அறிவை விரும்பி, அதையணுகாதவன் அறிவின்மையில் அமிழ்வான். கல்வியைக்கோரி, கற்கக்குன்றினவன் கலக்கமடைவான். மெய்யை விரும்பி, முயற்சியற்றவன் மனமிளைப்பான். நேர்மையை நேசித்து அதைநாடாதவன், நிலையற்றவனாவான். வீரத்தை விரும்பிய தீரமற்றவன் திடம் தளரும் அறத்தை விரும்பி அதையணுகாதவனாகிறான்.

441. பாக்களால் புத்தி புனிதமாகி, கவனம் கூர்மையாகும். சமூகச்சித்தம் சிறந்து மனக்கவலை குறையும். அங்கு

மிங்குமுள்ள யாவும் பாக்களால் பாங்காகும். அறங்களையுணு கச்செய்து, அகிலமெல்லாம் விளங்கச் செய்யும்

442. நூல்களை நாடாதவன் நாடுகடந்தபோதிலும் நீர்க்குமிழி போலாவான்.

443. மாணிக்கம், மரகதம், கோமேதகமே காணிக்கையாகுமோ? சுருதியும், சுவரமுமே சங்கீத மாகுமோ?

444. பேடி, பயமற்றவன்போல் பார்ப்பது பொய்க்குணமேயாகும்; அவனைப் பதுங்கும் பக்காத்திருடனுக்கு ஒப்பிடலாம்.

445. சாதுக்கள் என சகஜமாயிருப்பவர்களே புண்ணியப்பணிகளின் பகையாளிகள்.

446. கற்றதைக்கணமே கற்பிக்க முயலுவது ஒழுக்கத்தை ஒழிப்பதாகும்.

447. பதவியிலே பெருங்கவலை யடைந்து, பிறகு அதைக்களையாமலிருக்க கலக்க முள்ளவர்களே கீழ்மக்களாகும். தங்கள் நிலைகளைப்பற்றி சந்ததமும் சிந்தனை யுள்ளவர்கள், அச்ச மற்று செய்யாத செயலுண்டோ ?

448. சமுக சுதந்திரம் சுயநல சுதந்திர மாகவும், கண்ணியம் கடுங்கோப மாகவும், நேர்மை நயவஞ்சக மாகவும், நவீனத்தில் நிலவுகின்றது.

449. வசீகரவதனமும், மயக்கும் மொழியும், ஒழுக்கத்துடன் ஒழுகுவது அரிது.

450. சிகப்பு நிறத்தைச் சிதைக்கும் ஊதா நிறத்தையும், குணத்தை மறைக்கும் இனிய மொழியையும், நாட்டை நாசஞ் செய்யும் நாவையும், நல்லார் வெறுப்பர்.

451. மொழியாம லிருக்கவே மேலோர் விரும்புவர். எல்லாம் வல்ல இறைவன் மொழியாமலே, வையகம் வானத்தை விளங்கச் செய்ய வில்லையா?

452. கல்வியைக் கண்டனமுடனும் கற்பிப்பார்.

453. துக்கத்தில் பல திங்கள் திகழ்வது துன்பமே யாகும். ஒழுகாத ஒழுக்கமும் பாழுடையும்; சீலமற்ற சங்கிதம் சீர்குலைக்கும். துக்க காலத்தில் திகழ்பவன் தினையளவும் தின்பதுமில்லை, தீச்செயலும் செய்வதில்லை.

454. தினமுழுவதும் வயிறு புடைக்கத் தின்று சிந்தனையற்ற சித்தமுள்ளவன் சீர்குன்றியவனே! சும்மாயிருப்பதில் சொக்கட்டானுடுவது சிறந்தது.

455. நல்லார், வீரத்தைவிட நேர்மையையே நாடுவார்கள். நலமற்றவர், நேர்மையைவிட வீரத்தை விரும்புவார்கள். தாழ்ந்தோர், தீரமுடனிருந்து திருடன்போல் பதுங்குவார்கள்.

456, 457. நல்லார்; பொல்லாரை விரும்புவதில்லை. நேர்மையற்று நிந்திப்பவர்களையும் நாடுவதில்லை. கோழைகள்—கண்ணியமற்றவர்களைக் காணவும் வெறுப்படைவார்கள். அறிவு யென இரகசிய மறிபவர்களையும், அடக்கமின்மையை வீரமெனவும், இரகசிய விளக்கத்தை இல்லறமென்போர்களையும், அவர்கள் வெறுப்பது வழக்கம்.

458. சேவகர்களிடம் சகஜ நிலை சாந்தத்தை சீரழிக்கும். கண்ணியக் காட்சியில் கோபம் காண்பது கண்கூடு.

459. நாற்பதிலும் நலமற்றவன், நாட்களெல்லாம் நேர்மையற்றவனே.

பதினெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

பத்தொன்பதாவது அத்தியாயம்

புராதன நீதிகள்

460. சீலமற்ற சேவையைவிட அறத்துடன் அழிவதே அறிவாகும்.

461, 462. உண்மையாய் ஊழியஞ்செய்பவன் ஊன்றி நிலைக்கும் உலகமுண்டோ? உண்மை யகன்று ஊழியஞ் செய்ய புறநாடு எதற்கு?

463. சிறு திருத்தத்தில் சீலமற்றவன், சீரழிப்பவனே!

464. அரச சபையிலிருந்தபோதிலும் நடனப் பெண்கள் நிலவினால் அதை நாடாதே.

465. அரசாங்கத்தின் நன்மை புன்மை நாட்களை அறிவது அறிஞோர்க்கழகு.

466. துறவியாயிருந்து தன்னந் தனி நிலை இன்பத்தைவிட, இல்லரத்தில் இகத்தினுயர்வை எண்ணுபவன் இணையில்லா இந்திரனாவான்.

467. தேசத்தொண்டில் கனமாவது தளராதே.

468. நன்மை, நாட்டிலே அணுவளவு மில்லையென தேசத் திருப்பணியில் தளராதே.

469. சிறந்தோர், சுற்றத்தவர்களைச் சஞ்சலமாக்கார்.

470. தகுதியற்ற தாசர்களை, பதவியினின்று பிரித்த போதிலும் திருப்தியையே யளிப்பார். காரணமிருந்தால் கற்றோருரையும் களைவர். ஒருவன் சகல செயலுக்கும் சிறந்தவன் என எண்ணுவதில்லை.

பத்தொன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

இருபதாவது அத்தியாயம்

மாசற்ற மாணவர் மொழி

471. ஆபத்தில் ஆவியை அளித்து, சுயச்செயலிலும் சிறந்த மெய்யில் சாய்ந்து, கலக்கத்திலும் கலங்காதவன், தேசத் தொண்டிற்கு தகுதியுளோன்.

472. அறத்தை யடைந்து அறிவற்றவனும், சத்தியத்தில் சாய்ந்து சீலமழிபவனும் சிறந்தவனாகான்.

473. நல்லாரை மதித்தும், புகழ்ந்தும், பொல்லாருடன் பொறுமை, பிரியமுடன்பழகவும், தன்னைத்தரணியிலேத் தாழ்ந்தவன் என எண்ணுபவன் தலைமைத் தீரனும்.

474. சிறிய நெறிகளும் அவசியமே. ஆனால் அதையே அகிலமென எண்ணாதே.

475. தினந்தோறும் தன் பிழைகளையே பார்த்து, திங்கள்தோறும் தன் தேற்றத்தை மறப்பவனே, அறிவின் அன்பன் எனலாம்.

476. அகண்ட அறிவு, ஆழ்ந்த அகம், ஆன்ம சோதனை, ஊக்க உழைப்புமே, அறத்தின் அடையாளங்கள்.

477. தொழிலாளி தன் தொழிலில் தோய்ந்துள்ளது போல், அறிஞர்கள் அறிவின் அமைப்பில் அமைந்துள்ளார்கள்.

478. கல்லான் தன் குறைகளைக் காட்சியாக்குவான்.

479. காட்சியில் கடுமையாகவும், அருகினால் அன்பாகவும், நோக்கினால் நிலையுள்ளவனே, நிகரற்றவனின் நேர்மைகள்.

480. சீலத்தில் சிறப்புடைந்த சான்றோர் சுமையைச் சாய்ந்தால், ஜனங்கள் சீலமாகி சித்தந் தெளிவார்கள். நாட்டரசனிடமும், நலத்தால் நம்பிக்கை பெற்று பின்னரே நேர்மையாக்க முயலவேண்டும்.

481. நேர்மையான நோக்கங்களை நாடுபவன் சிறிய வைகளைப்பற்றிச் சிறப்பாகச் சிந்திப்பதில்லை.

482. மாணவர்களுக்கேற்ற வண்ணம்; மாறுபாடுடன் கற்பிக்கவும்.

483. பதவியிலுள்ளார்கள் ஓய்வு நேரங்களில் படிக்க வேண்டும்; மாணவர்கள் கற்றபிறகு தொழிலைத் தொடங்க வேண்டும்.

484. கடின காரியமே அறச்செயலாகாது.

485. அறமுடன் அறமொழுகுவது அரிது.

486. அந்திகாலத்திலும் அவரவர்களின் அறம் விளங்கும்.

487. தந்தை சொல்லோ மக்கட்கறம்.

488. பாவிகளின் பிழைகளைப் பார்த்து பேரானந்த மாகாதே ! பேரிரக்கத்துடன் மனமிரங்கவும் !

489. அறிஞன் ஆழிய சேற்று நிலத்தில் வாழ விரும்பான்; ஏனெனில் தரணியின் தீமை யாவும் அங்கு பாயும்.

490. அறிஞன் அறங் குன்றுவது சூரிய கிரணம் போலாகும். கிரணம் களையக்கரித்து கதிரவனையே நோக்குவார்கள்.

491. ஆதியில் அன்பர்கள் அகிலமெல்லாம் அறிவார்கள். குருநாதர் கயவரிடமும் கற்பர். தெளிந்தோருக்குத் தன்னந்தனி குரு தேவையில்லை.

492. ஒரே மொழியால் அறிஞனும் அறிவிலியும் விளங்குவதால் மனமறிந்து மொழியவும்.

493. கற்றோனைக் காண்பது படிப்பால் பாரத்தைப் பற்றுவது போலாகும். சிறந்தோனால், ஜனங்கள் ஜீவனடைந்து, சாந்த சிறந்து, சமநிலையுடன் சந்தோஷமாவார்கள்

இருபதாவது அத்தியாயம் முற்றிற்று.

இருபத்தியொன்ருவது அத்தியாயம்

அரசாங்க உண்மைகள்

494. நற்செயலால் நாட்டினர் நட்பை அடைந்து, சத்திய நெறியில் சனங்களைச் சயித்து, முயற்சியால் மாநிலத்தை மேன்மையாக்கி, நீதியால் நாடெங்கும் நேர்மையை நாட்டுபவனே மன்னனாகும்.

495. செலவழிக்காமல் செல்வத்தை ஈதலும், துன்பம் தவிர்த்த ஊழியமும், பேராசை மதியாத வீரியமும், கடுங்கோபமற்ற கண்ணியமும், கொடுங்கோலற்ற அரசாங்கமுமே நன்மையை விளைவிப்பதாகும். "செலவற்ற ஈதல் யாது?" புவியின் கண்ணுள்ள ஐசுவரியத்தை விருத்தி செய்வதே செலவற்ற செல்வம்.

496. மானிடர்களுக்கேற்றவாறு பணியை வகுத்தால் துன்பம் ஏது? அயலார் விருப்பத்தை எண்ணினால் அது பேராசையாமோ? கற்ருேரின் தோற்றமே கண்ணியமாகும். அக்காட்சிக் கவர்ச்சியே அரசாங்கமாகும்.

497. கடமைகளைக் கற்பிக்காமல் ஒருவனைக் கொலை செய்வது குரூரமாகும். பிழை செய்யும்வரைப் பார்த்திருந்து பிறகு தண்டிப்பது பாவச் செயலாகும். அசட்டையாய் அதிகாரஞ்செய்து சடிதியில் செய்பச் சொல்வது சோரமேயாகும். வெகுமதியைக் கோபத்துடனளிப்பது வேஷமேயாகும்.

498. இயற்கையின் இரகசியமறியாதவன், அறிஞனாகான். நன்மையான நடத்தையற்றவன், அறமனுகான்.

499. மொழி வன்மை யற்றவன், மாநிலத்தோரை யறியான்.

இருபத்தியொன்ருவது அத்தியாயம் முற்றிற்று.

சீனவேதம் முற்றிற்று.

விஷய சூசிகை.

விஷயம் பாரா நம்பர்

அ.

அகத்தறிவு, 356.
அடியார்கள், 111,379.
அன்பு, 36, 62, 117.
அமிழ்வான், 70.
அமுதம், 67.
அனுபவி, 88.
அரசன். 92. 297, 306.
அரசஊழியம், 38.
அரிது, 112, 136, 215, 271, 365, 325, 447, 485, 2, 382, 3, 86.
அருகர்கள், 68, 93.
அருகனல்லன், 75.
அருகதை, 80.
அருமை, 102, 110.
அருளாளர், 345.
அறத்தின்முகம், 107.
அறம், 91, 99, 123, 132, 138, 172, 173.
அறிஞன், 103, 122, 124, 146, 167, 177, 223, 228, 314, 361, 363, 412, 465, 456.
அறிவிலி, 213, 77. 96, 393, 495.
அறியான், 499.
அறியேன், 106.
அறிவில் 121,

விஷயம் பாரா நம்பர்

அறிஞன், 181, 183, 206, 232, 233, 282, 387, 409, 334, 432, 436, 440, 477, 489, 490, 492.
அறிவு 460.
அறம் 333 336, 338, 476.
அறத்தின் நிலை 438.
அறநெறி 370.
அற்புதம் 391.
அரசாங்கம் 292.
அழகு 390.
அகநிலை 279.
அகம் 308.
அதிதிகள் 238.
அஞ்சுகின், 426.
அன்பர்கள், 386.
அநீதி, 276.

ஆ.

ஆனந்தம் 264, 315, 316, 377.
ஆன்மா, 170.
ஆராய, 208.
ஆராய்ச்சி, 284.
ஆராய்வது, 302.

இ.

இணைஇல்லை, 98.
இடர்செய்பவர், 2.
இன்பத்தேன், 312.
இன்சொல், 287.
இன்பம், 65, 162.

விஷயம் பாரா நம்பர்

இன்பவாழ்க்கை, 127.
இன்மொழி, 188.
இன்னல், 221.
இயல்பு, 46, 166, 402.
இந்திரன், 466.
இயல்புநிலை, 13.
இயல்பற்ற, 186.
இயலாது, 48
இரகசியம், 50, 270.
இருதடவை, 109.
இருநிலை, 275.
இளமை, 425.

ஈ.

ஈதல், 495.

உ.

உள்ளமொளி, 242.
உன்னதபாதை, 321.
உணவு, 174.
உண்மை, 461.

எ.

எளிமை, 17.
எட்டாநிலை, 235.
எந்நெறி, 307.

ஒ.

ஒப்பற்றது, 51.
ஒழுக்கம், 6, 147, 447, 22, 139, 231,
ஒழுக்கமில்லாதவன், 44.
ஒரேநெறி, 18.

க

கபடமற்றவன், 347.
கலைமகள், 350.
கவனிக்கவும், 204.
கோழைகள், 456.
கடன், 372.

விஷயம் பாரா நம்பர்

கடவுள், 27.
கடினகாரியம், 484.
கடினம், 101, 341.
கடும்பதம், 373.
கடுமை, 313.
கண்டனம், 452.
கண்டதில்லை. 72.
கண்ணியமாய், 418,
கயவர், 23, 29, 176.
கற்பிக்கவும், 482.
கற்பனை, 154, 155, 416.
கற்பிப்பர், 272
கற்றோர், 29, 143, 357, 410, 413, 414, 430, 428, 353, 493.
கல்வி, 195, 200, 30, 57
கல்வியால் காட்சி. 119.
களையவும், 208.
கீழ்மகன், 427, 447.
காணவில்லை, 71.
கீர்த்தி, 291.
கீர்த்தி பெற்றது, 269.
கிணற்றுத்தவளை, 322.

கு

குஷ்டரோகி, 126.
குறைவுசெயல், 352.
குருநாதர், 11, 17, 25, 148, 149, 150, 151, 152, 160. 163, 178, 180, 184, 214, 224, 236, 240, 241, 242, 243, 244, 245, 246, 247, 248, 249, 250, 252, 253.

ச

சகசம், 318.
சங்கீதம், 41, 42, 443, 198, [453.

விஷயம் பாரா நம்பர்

சஞ்சலம், 296.
சமநிலை, 157, 191.
சந்தோஷம், 1, 34, 95.

சா

சான்றாகும், 120.
சான்றார், 4, 16, 415, 480, 17, 28.
சாய்ந்தாரான், 76.

சி

சித்தமே, 145.
சிதைக்காதே, 69.
சிதைவின் சின்னம், 133, 196.
சிநேகிதர், 92.
சிறந்தவன், 472.
சிறியாநெறி, 474.
சிறந்தது, 452, 33, 125, 135, 395, 3, 1000, 431.
சிறந்தவன், 298, 364, 470 61,
சிறந்தவனாகான், 434.
சிறந்தோர், 140, 359, 469.
சிறந்த மன்னன், 420.
சிறப்பிப்பார், 437.
சிறப்புற்றவன், 90.
சிறியோர், 330.
சிறுநெறிகள், 9.
சிறத்தையற்றவன். 39.
சும்மாயிருப்பவன், 266.

சீ

சீர்கேடு, 290.
சீரழிக்கும், 458.
சீலம், 131.
சீலமழிந்தவன், 332.
சீலமற்றவன், 44, 375.

சு

சுலபம், 312.

விஷயம் பாரா நம்பர்

சுவர்க்கம், 371.
சுருதி, 301.

செ

செயல், 99.
செழிமை, 194.
சொல், 283.

சே

சேதம், 31.

சோ

சோதி, 383.

ஞா

ஞானம், 52.
ஞானத்திருமகன், 7.

த

தஞ்சம், 56.
தன்குற்றம், 118.
தன்னகம், 83.
தாணித்தூய்னம், 35.
தலைமை, 210, 337.
தலைமைப்பதவி, 320.
தலைமைத்திரன், 473.

தா

தாழ்ந்தோர், 218, 398, 455.

தி

திடீரென, 212.
திருப்பணி, 348.
திருமொழி, 340.
திறமை, 304.

து

துக்கம், 261
துன்மார்க்கன், 34.
துன்பத்தை, 389.

விஷயம் பாராநம்பர்

தீ

தீமை, 315.
தீரன், 190

தே

தேசத்தொண்டு, 470.
தீரா, 397.
தெளித்தோர், 490.
தேசத்தொண்டு, 467.
துருவதாரகை, 18.
தேசாதிபதி, 354.
தேவலோகம், 205.
தேவகட்டளை, 205.

ந

நடனப்பெண்கள், 464.
நண்பன், 232.
நன்னடு, 286, 295.
நன்மை, 223.
நல்லோன் 323.
நலமெற்ற நண்பன், 199.
நல்வினை, 273.
நந்நெறி, 144, 293.
நட்பு, 105.
நன்மை, 101.
நன்மையற்றது, 64.
நற்செய்கள், 202.
நவீனம், 448.

நா

நாடாதே, 274.
நாணம், 111.
நான்குவிஷயங்கள், 171.

நி

நிலக்கேற்றவாறு, 262.
நிலையாயிரார், 414.
நீதி, 82, 104, 368.

நோ

நீதிநிலை, 381.

விஷயம் பாரா நம்பர்

நோக்கங்கள், 406, 481
நோக்குவது, 66.
நேர்மை, 168, 479.
நேர்மையற்றவன், 450.

ப

பக்தி, 339.
ப்க்காதிருடன், 444.
பசி, 311.
படுகொலை, 331.
பணிவு, 84.
பகைஞர், 78.
பகைமை, 392.
பகையாளி, 445.
பயன், 7998.
பயனற்றவன், 378.
பயனில்லை, 375.
பரிபூர்ணம், 343.
பழயநன்மை 388
பழையநாமம், 142.
பழையநீதி, 59.
பழைய பாக்கள் 219
பயமில்லாபிணி, 193.
பாக்கல், 43.
பாசாங்கு, 40.
பாதகன், 441.
பாண்டம், 187.

பு

புகழ்மொழி, 422.
புத்தி, 299.
புதியபணி, 227.
புன்மை, 55
புலவன், 130.
பெரிது, 265,
பெரியவன், 132.
பெரியார் குணம், 211 364
பெரியார்கள், 254, 380.

விஷயம் பாரா நம்பர்

பெருங்குணம், 362.
பெரும் பணி, 267.
பெரும் பயன், 317.
பெரும்பதவி, 358.

பெ

பெற்றோர், 85,88.
பெரும்பணி, 45.
பொருள்திரம், 158,
பேடித்தனம், 40
பொதுநலம், 220.
பொன், 289.
பொங்கும், 63.
பொய், 91.
போராட்டமற்று, 49,
போலிமொழி, 404.
பொருமை, 217.
போற்றுபவன், 405.

வ

வன்மையற்றவன், 129.
வனிதை, 203.
வள்ளல், 324.
வளர்ச்சி, 225,
வற்புறுத்தாதே, 301, 346.
விசனகாலம், 151.
விருப்பங்கள் 115.
விரும்பாதே. 280.
விலங்கு, 26.

வா

வாழ்க்கைத்துணை, 401.
விகடத்தில், 393.
வேஷம், 47.

ம

மக்கட்பக்தி, 21.
மகிழ்ச்சி, 1.
மதிபுருடர், 433.

விஷயம் பாரா நம்பர்

மதியீனம், 424.
மதிமண்டலம், 94, 300.
மனமறிந்தவன்,284,296,360, [386.
மனதை, 73.
மயங்குமொழி, 277.
மன்னன், 288.
மனமிளக்கும், 34.3.
மனோநேர்மை, 11
மர்மம், 81.
மரம், 226.
மரிக்கலாம், 74.
மரியாதை, 216.
மறைநெறி, 15.
மந்திரம், 185.
மாந்தர்கள், 141.
மாட்சிமை, 1, 201.
மாணவர்கள், 97, 227, 255, [268, 483.
மாயாமொழி, 95.
மனமிரங்கவும், 488.
மன்னன், 494.
மனோநேர்மை, 319.
மனோவலிமை 230
மின்னுவாள், 278.
மெய்ப்பாதை, 53.
மெய்யோர், 2.
மெய்யொழுக்கம், 8.
மெய்யோன், 355.
மேன்மை, 182, 189, 285.
மேன்மையானவர், 239.
முறையாகாது, 197,
மூப்பு, 165.
மொழி, 256.
மொழிகள், 257.
மொழிவா, 237.
மொழியல், 335, 418.

விஷயசூசிகை முற்றிற்று.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	7	அவள்	அவர்
7	20	சக்தி	சக்தியற்றி
14	24	தீர்க்கலாம்	காணலாம்
25	14	கழுதையின் பிரலாபம்	கழுதைக் கர்ப்பணம்
42	15	இழந்தால்	இகழ்ந்தால்
42	18	அகிலமெல்லாம், நிலவச்செய்யவும், இதன் நடுவில் 'அதை' என்பதைச்சேர்த்துக் கொள்ளவும்:	
44	10	பாங்கான	பாங்கான
	13	தோன்று பவைகளுக்கு,	தோன்றும் தீமைகளுக்கு.
44	15	நாகரீக ஒழுக்கம்	அநாகரீக ஒழுக்கம்.
47	10	அழுக்க காதத்தினின்று	அழுக்ககாதத்தினின்று
	11	புகலும் பாரிலின்னோருக்கு	புகழும் பாரிலுள்ளோருக்கு
	12	தந்நெரியில்	நந்நெறியில்

சத்தியார்த்தப் பிரகாசம்

இதுவரைத் தமிழில் வெளிவராத அற்புத நூல்.

ஆரிய சமாஜனத்தை நிறுவிய தயானந்த சுவாமிகளால் அருளப்பட்டது! லட்சம் பிரதிகள் அச்சாகி செலவழிந்திருக்கின்றன. தேக சம்பந்தம் செய்யவேண்டிய வழியிலிருந்து தெய்வத்தைக் காணும் வழி வரையிலிருக்கிறது. பெரும் பிரயாசையுடன் கடந்த பத்துவருடங்களாகப் பாடுபட்டு ஸ்ரீ. எம். ஆர். ஜம்புநாதய்யரால் தமிழ்ப்படுத்தப்பட்டது.

பதினென் புராணங்கள், ஆறுசாஸ்கிரங்கள், இன்னும் பரதகண்டத்திலுள்ள 999 மதப்புத்தகங்கள் ஆகியவைகளின் ஆராய்ச்சியையும், தந்திகப் புத்தகங்களின் அடாத போதனைகளின் விளக்கம், நாஸ்திரம், சாரவாகம், நவீன வேதாந்தம், பௌத்தம், ஜைனம் முதலியவைகளின் சுயரூபங்களையும் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிரது. பைபில், குர்ஆன் ஷரீபு முதலியவைகளையும் எடுத்து ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. உண்மை சாஸ்திரம், வேதம் முதலியவைகள் விளக்கப்பட்டிருக்கிறது.

சத்திய தர்மத்தை நாடெங்கும் பரவச்செய்து வேதத்தின் உண்மையை விளக்குவதையே தர்மமாகக் கொண்டவர்களின் பிரசார நிமித்தமே இப்பெரிய கிரந்தத்தைச் சொற்ப விலைக்குப் பிரசுரஞ் செய்திருப்பதனால் நூலுக்கு முந்தவும்

வீரதுறவி சிரத்தாநந்தர் இதை ஆதரிக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார். நாட்டிலுள்ள பிரபல பத்திரிகைகளாலும் பெரியோர்களாலும் புகழப்பட்டது.

காபிகள் ஆனபிறகு எழுதுவதினால் பிரயோசனமில்லை. இரண்டு திரு உருவப்படங்கள் கொண்டது.

முழு விலை ரூ. 4 இரண்டாம் பாகம் விலை ரூ. 2-8-0

முதற் பாகம் தனியாய்க் கிடைக்காது.

சூடன் கோ,

திரிமூர்த்தி உண்மை

அல்லது

தேவர்களின் இரகசியம்

முழு முதற்கடவுள் மூன்றாகி, மூன்று முந்நூறாகி, முந்நூறு முப்பற்று மூன்று கோடி தேவர்களாகப் பெருகியிருக்கும் அற்புத இரகசியத்தை அறிய விரும்பாதவரும் உண்டோ? பற்பல தேவர்களுக்கேற்பட்டிருக்கும் சரித்திரங்களைக்கொண்டே அவரவர்களுடைய இயற்கை யமைப்பை விளக்கியிருக்கிறது. பல வருடங்களாகப் பாடுபட்டு பல நூல்களை ஆராய்ச்சி செய்ததின் பயனாக இந்நூல் வெளிவந்திருக்கிறது. "சத்தியார்த்தப் பிரகாசம்" ஆசிரியர் ஸ்ரீ. யம். ஆர். ஜம்புநாதன் எழுதினது. இதில் விளக்கப்பட்டிருக்கும் சில விஷயங்களாவன:—

1. ஆரியர்களின் உபாசனை.
2. திராவிடர்களின் உபாசனை.
3. உபநித உபாசனை.

பிரும்ம விளக்கம்.

4. பிரும்ம நாமம்.
5. ஷை நாமத்தின் சூட்சமம்.
6. உருத்விக் யார்?
7. பிரும்மாவின் நான்முகம்.
8. காயத்ரியும் சாவித்ரியும்.
9. சாவித்ரி கலியாணம்.
10. ,, கதையின் உண்மை.
11. பிரும்மாவும் சரசுவதியும்.
12. சரசுவதி நதி.
13. " விளக்கம்.
14. பிரும்மாவின் வாகனம்.

15. பிரும்மாவிற்கு ஏன் பூஜையில்லை.
16. பிரும்மா என்னும் இருக்ஷி.

விஷ்ணு விளக்கம்.

17. விஷ்ணு யார் ?
18. ,, வாகனம்.
19. கருடன் அமுதம் திருடினது உண்மையா ?
20. விஷ்ணு சயனம் ?
21. விஷ்ணு பாற்கடலில் உறங்குவது உண்மையா ?
22. பாம்பு விஷ்ணு படுக்கையாமா ?
23. விஷ்ணுவும் நான்கு கைகளும்.
24. எட்டு, பத்து கையுள்ள விஷ்ணு.
25. வெண்மையான விஷ்ணு.
26. கருமையான விஷ்ணு.
27. விஷ்ணு அவதாரங்கள்.
28. நீலமேக விஷ்ணு.
29. இலட்சுமி இரகசியம்.
30. விஷ்ணுவின் தாமரை படுக்கை.
31. ஆலகாலவிஷம்.
32. விஷ்ணுலீலை உண்மையா ?
33. வாமனவதாரம்.
34. ஜலந்திரன் மனைவி விஷ்ணுவுடன் கூடினது உண்மை ?
35. சாலிக்கிரமும் விஷ்ணுவாமா ?

சிவ விளக்கம்.

36. சிவன் யார்.
37. சிவன் மின்னலா ?
38. வேத சிவன்.
39. சிவஸ்தலமேது ?
40. மாடா சிவன் வாகனம் ?
41. விஷப்பாம்பா சிவாபரணம் ?
42. சிவனுடைய முக்கண்களின் உண்மை.

43. சிவனுடைய 5 முகங்கள்.

44. சிவனும் கலசபூஜையும்.

45. மண் லிங்க பூஜை.

இவ்விதமாக ஒவ்வொரு விஷயத்தையும் தக்க ஆதாரங்களுடன் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு இதுவரையில் கண்டிராத நூல் பிரபல பத்திரிகைகள் இதைப்புகழ்ந்துள்ளது. விலை 0—12—0.

வைதிக ஜெயபேரிகை

ஆரியசமாஜத்தை நிறுவிய சுவாமி தயாநந்த சரஸ்வதி, மௌல்வி முகம்மது காசிம், பாதிரி நோபில் துரைமகனார், ஆகிய இவர்களைத் தலைவராகக் கொண்ட பெரிய பண்டித சபையில் நடந்தேறிய விவாதம் இதில் விளக்கப்பட்டிருக்கிறது. வைதீக சமயத்தின் பெருமையும், அதனுடன் உற்று நோக்குமிடத்து பிறமதங்களுடைய குறையும் நன்கு விவாதிக்கப்பட்டிருக்கிறது. அவர்களால் பதில் கூற முடியாதென நினைத்துக் கொண்டு வலிய வந்து நம்மை வாதற்கிழுக்கும் கேள்விகளுக்குப் பசுமரத்தாணிபோல் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. எளிதில் ஏய்க்கப்படும் பாமரர்களைக் காப்பாற்ற எண்ணமுள்ளவர்கள் இதை வாங்கி இனாமாக விநியோகிக்கவேண்டும். தனிப்பிரசுரம் விலை அணா இரண்டு. அதிகம் பிரதிகளுக்கு விலை சகாயம் உண்டு. உடனே எழுதவும். எளியநடையில் சத்தியார்த்தப் பிரகாசத்தின் ஆசிரியரால் தொகுக்கப்பட்டது.

—❀—